www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே.02-08,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 307

## தளபதிகளுடன் பிரபா நடத்திய இரகசிய ஆலோசனை

## ஜெயா– அமெரிக்கா கூட்டு!

## கைமாறிய சூட்கேசுகள்



## அலசுகிறார் இராஜதந்திரி



## ராஜேஸ்குமாரின் கையில் சிக்கிய மின்னல் திக் திக் தொடர்

www.padippakam.com

# முரசம்

## வென்றெடுப்பதா? வெற்றி கொள்வதா?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வன்னிப் போக்குவரத்தை
தடுத்துவிட்டு
படையினரால் கூறப்பட்ட
காரணம் வியப்பளிக்கிறது!

"உயிலங்குளம் பகுதியில்
புலிகள் தாக்குதல்
நடத்தாவிட்டால்தான்
போக்குவரத்துக்கு அனுமதிப்போம்"
என்று கூறப்பட்டது!

புலிகளது தாக்குதலை
தடுக்கவும், எதிர்க்கவும்தானே
படையினர் அங்கு
அனுப்பப்பட்டுள்ளனர்!

புலிகளது தாக்குதலை
முறியடிக்கத்தானே
படைக்கலங்களை
கொள்வனவு செய்துள்ளனர்!

புலிகளிடமிருந்து
தமிழ் மக்களை விடுவிக்கும்
யுத்தம் என்று கூறித்தான்
வன்னி இராணுவ நடவடிக்கை
அரசால் விவரிக்கப்படுகிறது!

அப்படியானால்,
புலிகள் தாக்கினால்
பொதுமக்களை பழிவாங்குவதற்கு
என்ன பெயர்?

"புலிகள் தாக்கினால்
வன்னி மக்கள்
போக்குவரத்து நடத்தவியலாது,
வன்னி மக்களுக்கு
உணவு அனுப்பவியலாது"
என்று கூறுவது
பழிவாங்கல்தானே!

புலிகளிடமிருந்து
தாக்குதல் நடந்தால்
குடிமனைகளை நோக்கி
ஷெல்கள் பறக்கின்றன!

இப்போது ஒருபடி
மேலே போய்,
புலிகள் தாக்கியதும்
உணவிலும், போக்குவரத்திலும்
கைவைக்கப்படுகிறது!

கொழும்பிலும்
புலிகளது தாக்குதல்கள்
நடந்துதான் உள்ளன!

அதற்காக புலிகள் தாக்குதல்
நடத்தினால்
கொழும்பு மக்களுக்கு
அத்தியாவசிய சேவைகள்
வழங்கப்படமாட்டாது
என்று கூறமுடியுமா?

தென்னிலங்கையில்
மின்மாற்றிகளை
புலிகள் தாக்குகின்றனர்.

"மின்மாற்றிகளை
தாக்கமாட்டோம் என்று
புலிகள் உறுதியளிக்கும்வரை
மின்சாரம் வழங்கோம்"
என்று கூறுவார்களா?

தமிழ் மக்கள் வாழும்
பகுதிகளில் மட்டுமே
புலிகள் தாக்கினால்
மக்கள் மீது
பாரத்தை சுமத்துகிறார்கள்!

இந்த அணுகுமுறையானது
தமிழ் மக்களை
வேறு படுத்திப் பார்ப்பதையே
உள்ளங்கை நெல்லிக்கனியாக
உணர்த்தி நிற்கிறது!

அதுமட்டுமல்லாது,
புலிகளை தமிழ் மக்களுக்காக
போராடி வரும்
பிரதிநிதிகள் என்பதையும்
படையினரே ஏற்றுக்
கொண்டுவிட்டனர்!

தமிழ் மக்களுக்கு
நெருக்கடிகளை ஏற்படுத்தினால்
புலிகள் தாக்கமாட்டார்கள்
என்று நினைப்பதை
அந்த அடிப்படையில்தானே
நோக்கவேண்டியுள்ளது.

'உங்கள் மக்களுக்கு
உணவு வேண்டுமா
எங்களைத் தாக்காதீர்கள்'
என்று கூறாமல்
கூறுவது போலுள்ளது!

தமிழ் மக்களை
அந்நியர்களாகவும்
புலிகளை
அவர்களது பிரதிநிதிகளாகவும்
ஆட்சியாளரும், படையினரும்
கருதி வருவதுபோன்றே
நிகழ்வுகள் அமைகின்றன!

தென்னிலங்கையில்
ஜே.வி.பி.
தலைவிரித்தாடியபோது,
ஜே.வி.பி. பலமாக
இருந்த பகுதிகளுக்கு
பொருளாதாரத் தடை
விதிக்கப்பட்டது கிடையாது!

தாக்கமாட்டோம் என்று
ஜே.வி.பி. உத்தரவாதமளித்தால்தான்
அப்பகுதிகளுக்கு
அத்தியாவசிய சேவைகள்
வழங்கப்படும் என்று
அறிவிக்கப்பட்டதும் இல்லை!

எனவே, என்னதான்
இனிப்பாக பேசினாலும்
இன்றைய யுத்த முனைப்பும்
அதன் நோக்கங்களும்
தமிழ் மக்களை
தேசிய நீரோட்டத்திற்கு
வென்றெடுப்பதற்கானதா?
அல்லது, தமிழ் மக்களை
வெற்றி கொள்வதற்கானதா?
என்பதற்கான விடையை
நீங்களே தீர்மானியுங்கள்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## அன்புக்குரிய பரிசு

அன்பு என்ற வார்த்தையே ஆனந்தம் தரக்கூடியது. அம்மா, அப்பா, அண்ணன், தங்கை மற்றும் உற்றார்-உறவினர் மீதும் அன்பு வைப்பது இயல்பானது. கணவன்-மனைவி ஆகியோரிடமும் அன்புதான் ஆயுள்காலப் பிணைப்பை ஏற்படுத்துகிறது.

வளர்ப்புப் பிராணிகளான நாய், பூனை போன்றவற்றிடமும் நாம் அன்பு செலுத்துகிறோம். சில உயிரற்ற ஜடப் பொருட்கள் மீதும் அன்பு வைப்போரும் உண்டு. வெள்ளித்திரையில் வீரசாகசங்களைக் காட்டும் நடிப்புக் கலைஞர்கள் மீதும் ஒருவகைப் பாச உணர்வை ஏற்படுத்துவோரும் இருக்கின்றனர்.

'பாத்திரமறிந்து பிச்சை இடு' என்ற முதுமொழிக்கு ஏற்ப, அன்பைச் செலுத்துவதிலும் எச்சரிக்கை தேவை. கண்டவர் எவரிடமும் திடீர் அன்பு செலுத்துவது என்பது தீயவைக்கே வழி கோலும்.

எவர்மீதோ, எப்பொருள் மீதோ பிராணிமீதோ அன்பு செலுத்துவதைவிட அன்பாகிய சிவத்தின் மீது செலுத்தும் அன்பே சிறப்பானது. மேன்மையானது. தீமை எதுவுமற்ற-மாசற்ற மேல் நிலையானது.

நம் உறவினரிடத்திலோ, அன்பு செலுத்துவதானால் அதற்கான ஒரு விலை கொடுத்தேயாக வேண்டும். பெற்றோரைத் தவிர்த்த ஏனையோர்மீது அன்பு வைத்தால்-அவர்களை மகிழ்வூட்டி எம்பக்கம் ஈர்க்க ஏதாவது பரிசில்களைக் கொடுக்க வேண்டும். ஆனால் எமது முழுமுதற் கடவுளான சிவபிரானிடத்தில் எந்தப் பொருளையும் கொடுக்காமல் அன்பு செலுத்தலாம். எமது உள்ளம்தான் அந்த அன்பருக்கு நாம் அளிக்கும் பரிசு. உள்ளம் எனும் பரிசினை சிவபிரானுக்கு அளித்தால் எமக்கு அவன் அருளுவது அளவிட முடியாத இன்பப் பெருவெள்ளம்.

அதனால்தான் சுவாமி விபுலாநந்த அடிகளார் 'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்றார்.

ஞானேந்திரன்



## மறுமையில் பசியுடையவர் யார்?

அபூ ஜுஹைபா (ரலி) என்ற ஸஹாபா கூறுகின்றார்கள்; நான் ரொட்டியும் கொழுப்புள்ள கறியும் சாப்பிட்டுவிட்டு நபி(ஸல்) அவர்களிடம் சென்றபோது ஏப்பம் விட்டேன். அப்பொழுது நபியவர்கள் என்னை நோக்கி, "உம்முடைய ஏப்பத்தைக் குறைத்துக் கொள்ளும் (உணவைக் குறைத்துக்கொள்க) ஏனெனில், உலகில் வயிறு நிறையச் சாப்பிடுகிறவர்கள் மறுமை நாளில் பசியுடையவர்களாக இருப்பார்கள்," என்று கூறினார்கள்.
ஆதாரம் மிஷ்காத்

மனிதன் அதிகமாகச் சாப்பிடுவதன் காரணமாக வயிறு நிறைந்து அவனையறியாமல் ஏப்பம் ஏற்படுகிறது. இதன் காரணமாக ஏப்பம் விடுபவனைப் பார்த்து மனிதர்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இதன் அடிப்படையில் தான் நபியவர்கள் உலகில் வயிறு நிறைய சாப்பிடுபவர்கள் மறுமையில் பசியுடையவர்களாக இருப்பார்கள் என்று கூறினார்கள்.

மனது கடிவாளமில்லாத சண்டிக் குதிரையைப் போன்றது. 'பசி'தான் அதன் கடிவாளம். பசியைக் கொண்டு தான் சண்டித்தனத்தை அடக்க முடியும். "நான் அதிகம் சாப்பிட்டால் எனக்கு குற்றத்தின் எண்ணம் ஏற்படுகிறது" என ஹஜ்ரத் துன்னூன் மஸ்ரி (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

வயிற்றை நிரப்புவது உடலை பளுவாக்கி இதயத்தைக் கல்லாக்கி அறிவுக் கூர்மையைப் போக்குகிறது.

வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல. 304

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**



### பரிசுக்குரிய கவிதை

### தட்டிக்கொடுப்பு

அழுவதை விடு
விழ விழ எழு
மனவுறுதியைப் பிடி
முயற்சியை எடு
நினைத்ததை முடி

கிரிசாந்தி சந்திரகலா-
புதிய வன்னியனார் வீதி, மட்டக்களப்பு.

### பயன் தருமா?

வாக்கு+உறுதி
தரமான சொல்லிரண்டு
தரமற்ற மனிதர்களால்
தரமிழந்து நிற்கிறது
நிறைவேற்றா வாக்குறுதி
துயரகற்றி வாழ்வளிக்குமா?

ம.திருவரசுராசா-வவுனியா.

### தனியவளாய்த் தவிக்கின்றேன்!

உற்றோரும் பெற்றோரும்
மற்றெனது உடன் பிறப்பும்
எத்திசையிற் சென்றனரோ
ஏதிடந்தான் ஏகினரோ!
புலம் பெயர்ந்து புறப்பட்டோம்
நான் பிரிந்தேன் நடு வழியில்
தனியவளாய் நானுமிங்கே
தவிக்கின்றேன் வகையின்றி
கருணையினை மனங்கொண்டு
கண்ணீரைத் துடைத்திடுவீர்
பெற்றோர்பாற் சேர்த்தென்னைப்
பெருந்துயரைப் போக்கிடுவீர்!

வ.ஆ.அதிருபசிங்கம்-
றெட்பானா வீதி, விசுவமடு.

### என் சொல்லைக் கேட்டாயா?

"பூமியெல்லாம் புதைத்திருக்கும்
பொறிவெடிகள் இந்நாட்டில்
போர் முடிந்த பின்னாலும்
பதைபதைக்க உயிர் குடிக்கும்!
போக வேண்டாம் விளையாட
பதுங்கியிரு வீட்டி"லென்றேன்!
கேட்டாயா என் மகனே?

கு.திருமால்-அமிர்தகழி- மட்டக்களப்பு.

### நம்பிக்கை!

நீ விழுந்தது,
இப்புனித மண்ணில்,
காலங்கள் மாறும்.
காயங்கள் ஆறும்.
எழுந்தோடு!

அ.சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம்,
கண்டி.

### பொய்யா மொழி

காயம் இது மெய்,
மெய் இது பொய்.

செல்வி ஞா.ஞானரதினி-
வாழைச்சேனை.

### ஈடு செய்ய!

இப்படிப் பிறந்தோமிங்கு
இழப்புக்களை ஈடு செய்ய!

செல்வி.மதுரா-யோகேந்திரன்-
திருக்கோவில்.

### அகதிகள்

நாட்டைச்
சுற்றி
தண்ணீர் ஓடுது!
எங்கள்
வாழ்க்கையோடு
கண்ணீர் உறவாடுது!

த.நகுலேஸ்வரன்- கல்லடி-
வேலூர், மட்டக்களப்பு.

### துயரம் தொடருமோ?

துடிப்பின் எல்லையிலே
தொடர்கின்ற துன்பமம்மா
வெடிக்கின்ற குண்டுகளில்
வெந்து போன வாழ்க்கையம்மா
அழாதே என் கண்மணியே
அணைப்பினிலே அன்னையாக
அருகினிலே உன் தந்தை நானே!

தெ.லோஜனா-கொழும்பு-15.

### அப்பாவின் தேற்றம்

அம்மாவைத் தன்னகத்தே
ஆழப்புதைத்து வைத்த,
செம்மணிக்கு எங்கேயுன்
தேம்பல் ஒலி செவிக்கேறும்?

ப.தேவேந்திரன்,
வெளிச்சவீடு வீதி- திருமலை.

## கவிதைப் போட்டி இல.307



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 08.05.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.307
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

## வேலிக்கு ஓணான் சாட்சி

செம்மணி புதைகுழி பகுதியை அளக்கிறார்களாம். அது என்னவோ தெரியவில்லை. செம்மணியில் குழியைத் தோண்ட மட்டும் இத்தனை எடுப்புக்கள் ஏன்? சூரியகந்தை புதைகுழி,துரையப்பா அரங்குப் புதைகுழி விவகாரங்களில் மட்டும் இந்த விதிமுறைகள் எங்கே போயின? இந்த ஏமாற்றுவித்தைக்கு மனித கௌரவ அமைப்பு என்ற பெயரில் இயங்கும் ஒரு நிறுவனமும் வக்காலத்து வாங்கி அறிக்கைவிட்டிருந்தது. அந்த நிறுவனம் குறித்து 'முரசு' நக்கீரன் முன்னர் கூறியது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. வேலிக்கு ஓணான் சாட்சி என்பதுபோல, இழுத்தடிப்பு விசாரணைக்கு அந்த நிறுவனமும், மகேஸ்வரி வேலாயுதம் என்பவரும் சாட்சியோ?

எம்.சதாசிவம், கொழும்பு-06.



## அடுத்தது.....

நான் சுபாவின் கதைகள் பல படித்திருக்கிறேன். ஆனால் 'உதட்டில் ஒரு மச்சம்'தான் முதலிடம். அதுபோல முரசில் வெளியாகும் ராஜேஸ்குமாரின் தொடர்கள் வித்தியாசமாகவே உள்ளன. அவரது அடுத்த தொடரையும் எதிர்பார்க்கிறோம்.

எம்.சுபாசினி,
திருக்கோணமலை.

## கிளின்ரனின் கிழிந்த முகம்

யூகோஸ்லாவியாமீது அமெரிக்கா குண்டு விதைத்து விளையாடியதை முரசின் சித்திரை வெளியீடு முரசம் பகுதியில் ஆசிரியர் கண்டித்து, கிளின்ரனின் கிழிந்த முகத்தையும் பிரசுரித்து வாசக நெஞ்சங்களின் கண்டனங்களையும் அமெரிக்க எதிர்ப்பில் ஊன்றி நிற்கும் சகல சக்திகளோடும் பதிவு செய்தமைக்கு பாராட்டுக்கள்!

வ.சுரேஸ்கண்ணா, மட்/இருதயபுரம்.

முரசு 18/24 இதழில் "சூப்பர் தமிழ்க் கட்சிகள்" காதிலை பூ கந்தசாமியாரின் கருத்து இதழுக்கு மகுடம் சூட்டியது போலிருந்தது எனது பாராட்டுகள்.

ஏ.எ.தங்கவேல், அக்கரப்பத்தனை.

## செய்தி ஊடகங்கள் வெளியிடலாமா

இனிய முரசே!

செம்மணி இழுத்தடிப்பை மறைப்பதற்காகவும், நியாயப்படுத்துவதற்காகவும் வெளியிடப்படும் செய்திகளை சில செய்தி ஊடகங்களும் பெரிதாக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. இதன் மூலம் தவறான எதிர்பார்ப்புக்களைத்தானே உருவாக்குகின்றன. பின்னர் பந்தி பத்தியாக விமர்சனங்கள் எழுதிப் பயன் என்ன? நடு நிலை என்பது நழுவல் நிலைதான். சரியானது எதுவென்பதை அறியத்தருவதும், அப்பட்டமான பொய்களை செய்திகளாக வெளியிடாது இருப்பதும் ஊடகங்களது கடமை அல்லவா! யார் மீதும் குற்றம் குறை காண்பதற்கு இதனை எழுதுவதாக நினையாதீர்கள். மனதில் பட்டதை எழுதியுள்ளேன்.

எஸ். ஆர். ஞானநாதன், வவுனியா.

முரசுக்கு

'இடி அமீன்','கண்ணீரில் கரைந்த இரவுகள்' இரண்டும் நன்றாக உள்ளன. டயானாவின் இறுதி நாட்களை நெருங்கி விட்டது தொடர். அந்த நாட்கள் நெருங்கும்போது ஒரே சோகமாக இருக்கிறது மனது.

இ.வசுமதி, மாத்தளை.

முரசு அடுத்து தரப்போகும் கலக்கலான தொடர்களுக்காக காத்திருக்கிறோம்.வாராவாரம் காத்திருப்பதே ஒரு சுகம்.

செல்வி.கு.பாமினி, கல்கிசை.

## பௌர்ணமிக்கு நன்றி

அன்பு முரசுக்கு,

'டிசம்பர் பௌர்ணமி' நினைவுறப்போகிறது. வாராவாரம் நம்மை கவர்ந்த பௌணர்மிக்கு நன்றி. அதையும் மிஞ்சும் அடுத்த தொடரை முரசு தரும் என்பது நமக்குத் தெரியும். எதிர்பாத்திருக்கிறோம். உதட்டில் ஒரு மச்சமும் ஜோருதான்

மு.ஆதம்பாவா, கல்முனை.

## மண்ணுக்கடியிலும்

தற்கொலைத் தாக்குதலுடன் கதையை விரைவுபடுத்தினார் சுபா. 'மண்ணுக்கடியில் கூட நம்மவர்களை நிம்மதியாக தூங்கவிட மாட்டார்கள். கல்லறைகளையும் தகர்க்கிறார்களே' என்று கொதித்தது நம் நெஞ்சையும் தொட்டது. தமிழக எழுத்தாளரான சுபா எதனையோ அறிந்துதான் இதனை எழுதினாரோ?

க.உமா, கொழும்பு-09.

## ஆக்கிரமிப்புக்கு எதிராக

அன்பின் முரசே!

அசத்தலான தொடர்கள் தந்து மயக்குகிறாய். 'உதட்டில் ஒரு மச்சம்' அருமையாக இருந்தது. நில ஆக்கிரமிப்புக்கு எதிரான இளைஞர்களது ஆவேசம் மனதைத் தொட்டது.

இ.தவச்செல்வம், மட்டக்களப்பு.

## மற்றுமொரு வைரக்கல்

முரசின் தொடர்களுக்குள் மற்றுமொரு வைரக்கல் சுபாவின் தொடர். பல சம்பவங்கள் நம்நாட்டு நிலவரங்களையும் நினைப்பூட்டின. அநீதிக்கு எதிராக போராடிய பாத்திரங்கள் மனதில் நிற்கின்றன. கிளு கிளுப்பான காதலையும் கலந்து தந்திருந்த நுட்பம் பாராட்டத்தக்கது.

செல்வி.வி.திலானி, நீர்கொழும்பு.

நில், கவனி, முன்னேறு புதிய பொலிவுடன், புதிய சிந்தனைகளுடன் அருமை. புதிய முறையில் சோதிடமும் கவருகிறது.

கே.தவமணி, பதுளை.

முரசின் சிறுகதைகள் காலத்தின் கண்ணாடிகளாக விளங்குகின்றன. கண்ணீரையும் வரவழைக்கின்றன. புதிய படைப்பாளிகளை ஊக்குவித்து வருவதும் பாராட்டத்தக்கது.

சு.சிவகுமார், சிலாபம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

www.padippakam.com

# இலண்டனில் ஈழத் தமிழர் ஒன்று கூடல்
## பிரிட்டிஷ் அரசை தலையிட கோரிக்கை

(நமது நிருபர்)

எப்ரல் 25இல் ஈழப் பிரகடனம் செய்வதற்கு தமிழர் அமைப்புக்கள் மேற் கொண்ட முடிவு கைவிடப்பட்டது.

தமிழ் ஈழப் பிரகடனம் என்பது விடு தலைப்புலிகளின் தலைமைப் பீடத்தால் மேற்கொள்ளப்படவேண்டியதாகும். அதனை உரிய நேரத்தில் அவர்கள் மேற்கொள் வார்கள். எனவேதான் எமது முடிவு கைவிடப்பட்டது என்று தமிழர் அமைப்புக் களது முக்கியஸ்தர் ஒருவர் கூறியுள்ளார்.

இதனையடுத்து ஏப்ரல் 25ம் திகதி இலண்டனில் உள்ள அலெக்ஸாண்டர் பலஸ் மண்டபத்தில் மாபெரும் ஒன்று கூடல் நடைபெற்றது.

இந்த ஒன்றுகூடல் தொடர்பாக கொழும்பு ஆங்கில, சிங்கள தினசரிகள் சில தவறான செய்திகளை வெளியிட்டிருந்தன.

இம் மாநாட்டில் தமிழ் ஈழப் பிரகடனம் செய்யப்பட்டதாக அவை செய்தி வெளியிட்டி ருந்தன. சில நூறு பேரே மாநாட்டில் கலந்து கொண்டதாகவும் தெரிவித்திருந்தன.

ஆனால், ஐயாயிரத்திற்கு, மேற்பட்ட மக்கள் அங்கு கலந்து கொண்டனர். மாநாடு பெரும் எழுச்சியுடன் நடைபெற்றது.

தமிழ் ஈழப் பிரகடனம் நடைபெற வில்லை. அங்கு பின்வரும் நான்கு கோட் பாடுகள் உறுதியுரை ஏற்கப்பட்டன.

1) நாம் தமிழ் தேசிய இனத்தினர். 2) இலங்கை தீவின் வடக்கு-கிழக்கு மாகாணம் தமிழர்களது பாரம்பரிய தாயகம். 3) தமிழ் தேசிய இனத்தினர் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். 4) தமிழ் தேசிய இனத்தின் விடுதலை இயக்கம் விடுதலைப் புலிகளேயாவர்.

மேற்கண்ட உறுதியுரைகளுடன் இலங்கை இனப்பிரச்சனையில் பிரிட்டிஷ் அரசு தலை யிடவேண்டும் என்னும் கோரிக்கையும் முன் வைக்கப்பட்டது.

இம் மாநாட்டில் குமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு உரையாற்றியதாக சில பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் மாநாட்டில் குமார் பொன்னம் பலம் உரையாற்றவில்லை.

அலெக்ஸாண்டர் பலஸ் மண்டபத்தின் ஒரு அறையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றும் நடைபெற்றது. அம் மாநாட்டி லேயே குமார் பொன்னம்பலம் கலந்து கொண்டு இலங்கை நிலவரம் பற்றி விளக்கமளித்தார்.

பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பி.பி.சி வானொலி செய்தியாளர் "தமிழீழப் பிரகடனம் செய்யாதது ஏன்?" என்று கேள்வி எழுப்பினார்.

அது விடுதலைப் புலிகளது தலைமைப் பீடத்தால் செய்யப்பட வேண்டியது. அதற் கான நேரம் வரும்போது அவர்கள் செய் வார்கள் என்று பதிலளிக்கப்பட்டது.

# தளபதிகளுடன் பிரபா ஆலோசனை!
# அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு திட்டம்!

வன்னியில் விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே.பிரபாகரன் தனது முக்கிய தளபதிகளுடன் ஆலோசனை நடத்தியுள் ளார்.

அண்மையில் நடைபெற்ற இந்த ஆலோ சனையின்போது மிக முக்கியமான சில இராணுவ நடவடிக்கைகள் பற்றிய தீர்மானங் கள் எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

தென் மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு வன்னியில் இராணுவ நட வடிக்கை ஒன்றில் படையினர் ஈடுபடலாம் என்று புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

அது தொடர்பாகவும், அத்தகைய கட்டத்தில் எத்தகைய நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியும் ஆராயப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

முக்கிய தளபதிகள் மட்டுமே கலந்து கொண்ட இவ் ஆலோசனை என்பதால் தகவல் கள் எதனையும் அறிய முடியவில்லை.

### புதிய பணிகள்

எனினும் இக் கூட்டத்தின் பின்னர் புலி அணிகள் பரபரப்பாக ஓடுப்பட்டுத் திரிவதை காணமுடிகிறது. விரைவில் இதன் பிரதி பலிப்புக்களை காணக்கூடியதாக இருக்கலாம்.

வன்னியில் இடம் பெயர்ந்துள்ள மக்களது புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக பிரபா கரன் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக வும், அதனையடுத்து புதிய பணிகள் சில மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

### 50 இலட்சம் நிதி

இதற்கிடையே வன்னிச் சிறார்களது நலனுக்காக வெரித்தாஸ் வானொலியும், ரேடியோ ஏசியாவும் இணைந்து வெளி நாடுகளில் நிதி திரட்டல் மேற்கொண்டன.

ரூபாய் 50 இலட்சம் நிதியாகத் திரண் டுள்ளதாக அறியப்படுகிறது. இந்நிதி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஊடாக வன்னிச் சிறார்களுக்கு அனுப்பப்படவுள்ளது.

இந்த நிதி திரட்டலுக்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் மனமுவந்து வாரிவழங்கியதாகவும், சிலர் ஒரு இலட்சம் ரூபாய் வரை தனியாகச் செலுத்தியதாக வும் நிதி திரட்டிய நிறுவனங்கள் கூறியுள்ளன.

வன்னியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்போது இடம் பெயர்ந்த மக்களுக்கு பெரும் உதவிகளைச் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டு தமிழர்களது நிதி உதவியைச் சார்ந்தே இந்த அமைப்புச் செயற்பட்டு வருகிறது.

# தமிழ்க் கட்சிகளது கூட்டு முறிவு!
## ரெலோ காட்டமான சாட்டை

தமிழ்க் கட்சிகளது கூட்டு இரண்டு மாதங்களுக்குள் முறிந்துவிட்டது. ஏற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் தம்மால் இணைந்து செயற்பட முடியாது என்று கூறியதுடன், கூட்டைவிட்டு வெளியேறியது.

அரசுடனும், படையினருடன் இணைந்து தமிழ்க் கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. இந்தியப் படை காலத்தில் எம்முடன் கூட்டுச் சேர்ந்து முதுகில் குத்திய கட்சிகளையும் நாம் மறந்துவிடவில்லை என்று கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதி ராஜா கூறியிருந்தார்.

25.04.99 அன்று இலங்கை அரச தொலைக்காட்சிக்கு ரெலோ தலைவர்களில் ஒருவரான சட்டத்தரணி சிறீகாந்தா பேட்டிய ளித்தார்.

அவர் தனது பேட்டியில் அவசரகால சட்டத்தை ஆதரிக்கும் கட்சிகளோடு கூட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறி னார். புளொட் அமைப்பு முதலில் அவசர கால சட்டத்தை ஆதரித்தது, பின்னர் எதிர்த் தனர். தற்போது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளுவதில்லை.

வவுனியாவில் துப்பாக்கித் துரைத்தனம், அராஜகம், ரவுடியிசம் போன்றவற்றுக்கு துணைபோகாத காரணத்தால் அங்கு புளொட்டுடன் மோதல் ஏற்பட்டது என்றும் ஸ்ரீகாந்தா கூறினார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சை நடத்தி யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வு காண வேண்டும் என்பதே ரெலோவின் கொள்கை என்றும் ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

இதனிடையே ஈ.பி.ஆர்.எல்.எஃப். செய லாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது முயற்சியால் கூட்டு உருவானது போல பேட்டிகள் கொடுத்தமையும், சில கட்சிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாம்.

# ஆயுதம் கடத்தியதாக புகார்
## சாரதி கைதின் பின்னணி?

சமீபத்தில் வவுனியாவில் கை தான செஞ்சிலுவைச் சங்க சாரதி ஈஸ்வரன் முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப் பினராவர். தயாநிதி என்பது அவரது இயக்கப் பெயராகும். 1986 இல் ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கம் உட் பிரச்சனையால் பிளவுற்றபோது தயாநிதி ஒதுங்கிக் கொண்டார். இவர் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவர்.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தில் சாரதியாக பணியாற்றியபோது புலிகளு டன் தொடர்பு ஏற்பட்டதாகவும், அவர் களுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்து களை கடத்தி உதவியதாகவும் இவர் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் தமிழ் இயக்கம் ஒன்றுடனும் இவருக்கு நெருக்கம் இருந்தது. அவர்களது பிஸ்டலை உப யோகித்து சிலரை மிரட்டியதாகவும் கூறப்படுகிறது. இத்தகைய நடவடிக்கை களாலேயே படையினருக்கு தகவல் போனதாகவும் தெரிகிறது.

இவர் பிஸ்டல் காட்டி மிரட்டிய தால் புலிகளது பிஸ்டல் குழு உறுப் பினர் என்று முதலில் சந்தேகிக்கப் பட்டது

இவர் கைதான பின்னரே இலங்கை செஞ்சிலுவைச் சங்க வட பகுதி இணைப்பாளர் கிஷோர் விசாரணைக் காக அழைத்துச் செல்லப்பட்டார்.

ஆயினும் தனது சாரதியின் பிற நடவடிக்கைகள் குறித்து கிஷோருக்கு தெரியாது என்றே அறியப்படுகிறது.

# நாகவிகாரை புனரமைப்பு
## இந்துக்கோயில் புறக்கணிப்பு

யாழ் குடாநாட்டில் வலிகாமத்தில் 20 ஆயிரம் குடும்பங்கள் மீளக்குடியமர முடியாது வாடி வதங்கு கின்றனர். வேலை இல்லாமல் திண்டாடுகின்றனர்.

இந்த நிலையில் தென்னிலங்கையில் 40 ஆயிரம் பேருக்கு வேலை வழங்க தொழிற் பூங்கா அமைக்கப்படுகிறது.

அவ்வளவு ஏன், யாழ் நகரில் நாகவிகாரை பலத்த பாதுகாப்புடன் கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால் இந்துக் கோவில்களும், தேவாலயங்களும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. இது அரசுக்கு தெரியாதா?

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட முக்கியஸ்தரும், வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தலைவருமான திரு.எஸ்.ஸ்ரீபாஸ்கரன் கேள்வி யெழுப்பியுள்ளார்.

சமீபத்தில் நடைபெற்ற அப்பிரதேச சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக் கிறார்.

# உயிர்வாழும் உரிமை சட்டத்தில் இல்லை!
## அடிப்படை உரிமைகள் செல்லாக்காசு!

கைது செய்யப்பட்டு காணாமல் போனோர், தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், விசாரணையின்றிச் சிறையில் வாடுவோர் இவர்களுக்கு உதவும் பொருட்டு மட்டக் களப்பு மனிதநேய மேம்பாட்டு நிறுவன மொன்று அவர்களது உறவினர்களை அழைத்து விவரங்களைக் கேட்டறிந்தது.

கொழும்பு சட்டமா அதிபர் காரியால யத்திலிருந்தும் மற்றும் சட்ட அமைப்புக்களி லிருந்தும் சட்டத்தரணிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களின் நலன்களைக் கவனிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகக் கூறினர்.

இங்கு நடந்த கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ஒரு சட்டத்தரணி, "இலங்கையில் அடிப்படை உரிமைகளும் மனித உரிமை களும் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும்கூட பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பனவற்றின் கீழ் எந்தவொரு மனித உரிமைகளும், அடிப்படை உரிமை களும் செல்லாக் காசாகிவிட்டன.

மனிதன் உயிர்வாழ்வதற்கான உரிமை இலங்கைச் சட்டத்தில் இல்லை. இதை வேண்டுமென்றுதான் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளாமல் விட்டிருக்கிறார்கள்.

இதுவொன்றே நாம் இங்கு சுதந்திரமாக வாழ முடியாது என்பதற்குரிய ஆதாரமாகும். ஒரு கையால் மனித உரிமைகளைக் கொடுப் பதாகக் கூறிவிட்டு, பயங்கரவாத மற்றும் அவசரகாலச் சட்டங்களைக் கொண்டு சகல உரிமைகளையும் மறுகையால் பறித்துவிட்டார் கள்.

இந்நிலையில் மாற்றம் கொண்டு வருவ தாக இருந்தால் உங்களால் தெரிவு செய்யப் பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சொல்லி லும், செயலிலும் எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கவேண்டும்!" என்று கூறினார்.

# செஞ்சிலுவைச் சங்க பணிகளை முடக்காதீர்!
## மனிதாபிமான சேவைகளில் தலையிடாதீர்!

இலங்கை செஞ்சிலுவைச்சங்க நிர் வாகத்துக்குப் பதிலாக இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவ சமூக சேவை முன்னாள் அமைச்சர் ஃபௌசி முடிவு செய்திருந்தார்.

நிதி மோசடிகள் மற்றும் புலிகளுடன் தொடர்பு என்ற காரணங்கள் கூறப்பட்டே இடைக்கால சபை நிறுவ முடிவு செய்திருந் தார்.

இதனையடுத்து நீதிக்கும் சமத்துவத்துக்கு மான இயக்கம் (மோர்ஜ்) அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது. அந்த அறிக்கை வருமாறு:

இலங்கையில் கடந்த 50 ஆண்டுகளாக செஞ்சிலுவைச் சங்கம் மனிதாபிமானப் பணி களில் மிகுந்த சிரத்தையுடன் பணிபுரிந்து வந்திருக்கிறது.

இந்நாட்டில் சேவை புரியும் அரச சார் பற்ற தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கை களை விசாரணை செய்வதற்கு புதிய சட்ட மூலம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் இப்பொழுது திட்டமிட்டுள்ளது.

இன்றுள்ள நடைமுறைகளை வைத்தே மேற்படி குற்றச்சாட்டுகளை விசாரிக்க போது மான வாய்ப்பு இருக்கும்போது, புதிய சட்ட மூலம் அவசியமில்லை என்று மோர்ஜ் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் சுட்டிக்காட்டு கின்றன.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்துக்கு புதிய சபை உருவாக்கப்பட்டு, அச்சபையினர் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற் கொள்ள ஆரம்பிக்கு முன்னர் இன்று வன்னி யில் சொல்லொணாத் துன்பங்களை அனுப வித்து வரும் இடம்பெயர்ந்தவர்கள் மடிந்து போய்விடக்கூடும்.

புலிகளுக்கும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்துக்குமிடையில் நெருங்கிய உறவு இருக் கிறது என்று குற்றஞ்சாட்டி சிலர் எடுக்கும் நடவடிக்கை பேரினவாதிகளின் அபிலாசை களை நிறைவேற்றவே வழிகோலும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க நடவடிக் கைகளை முடக்க முனைவது தேசிய மற்றும் சர்வதேசியச் சட்ட விதிகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். இப்போது நடைமுறையி லிருக்கும் சபையே குற்றச்சாட்டுக்களை விசா ரித்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங் கட்டும் என்று அந்த அறிக்கையில் மோர்ஜ் குறிப்பிட்டுள்ளது.

# பெண்கள்மீது தீவிர சோதனை!
## சோதனைச் சாவடியில் விவரங்கள்!

மட்டக்களப்பு நகருக்குள் உள் நுழையும் நகரப்பாலத்திலுள்ள சோதனைச் சாவடியில் பெண்கள்மீது சோதனைகளும் கெடுபிடி களும் தீவிரமடைந்துள்ளன.

அச்சோதனைச் சாவடியைக் கடக்கும் பெண்கள் யாராக இருந்தாலும் குறிப்பாக யுவதிகள்- வாட்ட சாட்டமானவர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதோடு அவர் களின் அடையாள அட்டைகளின் இலக்கம், மற்றும் விவரங்கள் பதியப்படுகின்றன. இத னால் மட்டக்களப்பு நகரப் பாலத்தில் பெண் கள் நீண்ட வரிசையில் நிற்பதைக் காணமுடி கிறது. அங்குள்ள ஆண்கள் சோதனையிடும் பகுதியில் இத்தகைய நெருக்கடி இல்லை.

சமீபத்தில் (25.04.99) ஏறாவூர் பொலிஸ் காவல் நிலையத்தைத் தாக்கியதில் பெண் புலிகளே பெருமளவில் பங்கெடுத்தார்கள் என்பதாலேயே ஏறாவூரைச் சேர்ந்த யுவதி களின்மீது கடுமை அதிகரித்துள்ளது.

# மிதிவெடிகளால் கால் இழப்பு
## 30 வீதமானோர் யாழ் மக்கள்

(திருலை நிருபர்)

இலங்கையில் மிதிவெடிகளினால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் யாழ்ப் பாண மக்களே. கால்களை இழந்த குடிமக் களில் 30 சத வீதமானோர் யாழ்ப்பாணத் தமிழர்களே என்று சர்வதேசச் செஞ்சிலு வைச் சங்கத்தின் அறிக்கை கூறுகிறது.

இவ்வறிக்கையின்படி 1998ம் ஆண்டில் மட்டும் 48 யாழ்ப்பாணக் குடிமக்கள் மிதி வெடிகளுக்கு இலக்காகியுள்ளனர். ஆபத்தில் உதவும் நண்பர்கள் சங்கம் 1987-97 காலப் பகுதிக்குள் குடாநாட்டில் 1617 பேருக்கு செயற்கைக் கால்களைப் பொருத்தியுள்ளது. எனவும் தெரிய வருகிறது.

ச.தே.செ.சங்கம் செயற்கைக் கால் தயாரிக்கும் நிறுவனத்தின் முயற்சிகளுக்கு இவ்வாண்டு முதல் உதவத் தீர்மானித்துள் ளது. இதன்படி ஆண்டுக்கு 100 செயற்கைக் கால்கள் உற்பத்திக்கான உதவி, நோயாளி களின் போக்குவரத்துச் சேவை, உடல் உள நலவியற்துறையில் பத்துப்பேருக்கு பல்கலைக் கழக மட்ட பயிற்சியளித்தல், தொழில் நுட்ப ஊழியர்களின் செயலாற்றலை விரிவுபடுத்தல் போன்ற திட்டங்களில் ஈடுபடவிருக்கிறது.

இம்முயற்சிகளுக்கும் பொறுப்பாக அக் கோவா செயற்கை அவயவம் பொருத்தும் நிறுவனத்தில் பணியாற்றிய நிபுணர் திரு.ஜெரால்ட் பிற்ஸ்பட்ரிக் நியமிக்கப்பட்டுள் ளார். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள ச.தே.செ. சங்கக் கிளையுடன் இணைந்து பணியாற்ற உள்ளார் எனத் தெரிய வருகிறது.

# ஏறாவூர் காவலரண் தாக்குதல்!
## புலிகள்-பொதுமக்கள் பலி!

மட்டக்களப்பு-ஏறாவூர் வாவிக்கரை பொலிஸ் காவல் நிலையங்கள்மீது 25.04.99 அன்று அதிகாலை 2.40 மணிக்குப் புலிகள் திடீர்த் தாக்குதலைத் தொடுத்தனர். மோட் டார் குண்டு, ஷெல்வீச்சு வெடியோசைகளால் ஏறாவூர் நகரம் அதிர்ந்தது.

புலிகள் பங்குடாவெளியிலிருந்து ஏறா வூர் வாவியைக் கடந்து வந்து மிகச் சாதுரிய மாக சதுப்பு நிலக் காவலரண்களை நெருங் கித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். தாக்கு தலில் பெண் புலிகளும் பங்கு கொண்டுள்ள னர்.

காவல் நிலையங்கள் பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிக்குள் இருப்பதால் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படுவதைக் கருத் திற்கொண்டு தாக்குதலை மட்டுப்படுத்திய தாகப் புலிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் இரு வர் பலியானார்கள். ஒருவர் அந்த இடத்தி லும், மற்றையவர் காயத்துடன் தூக்கிச் செல்லும்போது இடைவழியிலும் இறந்து போனார். புலிகள் தரப்பில் மேலும் மூவர் காயமடைந்தனர்.

பொதுமக்கள் தரப்பில் சி. இராஜ லெட்சுமி (29), செ. செல்வி (28) ஆகியோர் பொலிசார் ஏவிய மோட்டார் குண்டு வீழ்ந்து வெடித்ததினால் காயமடைந்து பின்னர் உயிரிழந்தார்கள். தமிழ்-முஸ்லிம் பொது மக்கள் 13 பேர் காயங்களுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

புலிகள் கைவிட்டுச் சென்ற ரி-56 துப்பாக்கி-1, கைக்குண்டுகள்-2, காயப்பட்ட வர்களைச் சுமந்து செல்லப் பயன்படுத்தப் படும் தட்டிகள் மூன்று என்பனவற்றைக் கைவிட்டுச் சென்றபோது பொலிஸார் அவற் றைக் கைப்பற்றினர். பொலிஸாரின் ரவைப் பெட்டி-1, டொங்கான் சுடுகருவி-1 என்பன வற்றைப் புலிகள் எடுத்துச் சென்றிருப்ப தாகத் தெரியவருகிறது.

இதற்கு முன்னர் பல தடவைகள் இந்தக் காவலரணைத் தாக்கப் புலிகள் எடுத்த முயற்சிகளில் அதிகளவு இழப்பையே சந்தித்து வந்துள்ளது என்று அறியவருகிறது.

# தனிச் சிங்கள படிவம்
## ஏற்க மறுத்த உறுப்பினர்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய உறுப்பினர்களுக்கு சத்தியப் பிரமாணம் செய்துவைக்கும் வைப வத்தில் மத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் திருவீ.புத்திரசிகாமணிக்கு தனிச் சிங்களப் படிவம் கையளிக்கப்பட்டது.

இந்த வைபவம் கடந்த மார்ச் 26ம் திகதி பல்லேகலயில் இயங்கும் மாகாண சபை மண்டபத்தில் இடம்பெற்றது. ஆளுநர் திரு ஸ்ரான்லிதிலகரத்ன முன்னிலையில் சத்தியப் பிரமாணம் எடுப்பதற்கான படிவங் கள் வழங்கப்பட்டன.

திரு.புத்திரசிகாமணிக்கு தனிச் சிங்களப் படிவம் வழங்கப்பட்டதை அடுத்து மிகுந்த வேதனையுடன் அதனை சபை செயலாள ரிடம் திருப்பி ஒப்படைத்தார். 'நான் இதில் ஒப்பமிடமாட்டேன்' என்று அவர் விடாப் பிடியாக நின்று விட்டார்.

இதனை அவதானித்த செயலாளர் உடனடியாக தமிழ்ப்படிவத்தை எடுத்து அவரிடம் கொடுக்க புத்திரசிகாமணியின் கோபமும் தணிந்தது. இந்த அவலம் குறித்து முரசு நிருபரிடம் கவலைப்பட எடுத்துரைத் தார்.

# கூட்டிவந்தால் பாதை திறப்பு

(மன்னார் நிருபர்)

கடந்த 16.04.99 அன்று மன்னார்-உயிலங் குளத்தில் காவலில் ஈடுபட்டிருந்த பொலி ஸார்மீது புலிகள் தாக்கியதில் பல பொலி ஸார் கொல்லப்பட்டதையடுத்து வன்னிக் கான பிரதான பாதை படையினரால் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

வன்னி-உயிலங்குளம் பிரதான பாதைத் திறப்பு இழுபறி நிலையிலேயே இருந்து வருகிறது. இதனைத் திறக்கும் முயற்சியில் யு.என்.எச்.சீ.ஆர். அதிகாரிகள் புலிகளுடன் பேசி வருகின்றனர்.

16.04.99 அன்று புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலையடுத்து காணாமல் போன 3 பொலிஸாரை கூட்டிவந்தால் மட் டுமே வீதியைத் திறக்க முடியும் என பொது மக்களிடம் பொலிஸார் கூறினர். ஆனால் அம்மூவரும் பிணமாகவே மல்லாவியில் வைத்து ஒப்படைக்கப்பட்டனர்.



படிப்பகம்





## 'பகிர்ந்து தா அம்மா!'

வன்னியில் காடுகளிலும், வீதியோரங்களிலும் வாழும் மக்களது அவல நிலையின் சிறுதுளியே இது. அரைவயிற்றுக்குத்தான் உணவு. அதனை பிள்ளைகளுக்கு பகிர்ந்து தருகிறார் அம்மா.

காட்டுக்குள்- மரநிழலில்- தகரத் தடுப்புக்குள் குடும்ப வாழ்க்கை. ஆயினும் இவர்களால் எப்படி புன்னகைக்க முடிகிறது? அதுதான் நம்பிக்கை!

## வாடிக்கையாளர்கள் அதிருப்தி!

(நமது நிருபர்)

பல கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்ட போராட்டத்தினால் அரச வங்கிகள் தமிழ் சிங்கள புதுவருடப் பிறப்பன்றுள்ள புண்ணிய, சுபவேளையில் வங்கி வாடிக்கையாளர்களுக்கு கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியவில்லை.

15.04.99 அன்று வியாழக்கிழமை கைவிசேஷ கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு அரச வங்கிகள் ஆயத்தங்களைச் செய்து குத்துவிளக்கேற்றி வாடிக்கையாளர்களை எதிர் பார்த்துக் காத்திருந்தன. ஆனால் அன்றைய தினம் கொடுக்கல் வாங்கலுக்குரிய சுப வேளையில்லாததால் வாடிக்கையாளர் எவரும் வங்கிக்கு வரவில்லை. இதனால் வங்கிகள் ஏமாற்றமடைந்தன.

மட்டக்களப்பு இலங்கை வங்கித் தலைமைக் கிளையில் ஒரேயொரு வாடிக்கையாளரை தொலைபேசி மூலம் கட்டாயமாக அழைப்பித்து கைவிஷேட கொடுக்கல் வாங்கலைச் செய்ய வேண்டியிருந்ததாக அறிய முடிகிறது.

இதேவேளை புதுவருடத்தன்று யாழ்ப்பாண மக்கள் வங்கிக் கிளையில் சுமார் இருபது இலட்ச ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலியிலுள்ள அரச வங்கியொன்றுக்குச் சென்ற வாடிக்கையாளர்கள் பகல் 11.30 மணிவரைக் காத்திருந்து விட்டு அதுவரையும் வங்கி திறக்கப்படாததால் ஆத்திரம் கொண்டு கல்லெறிந்து அவ்வங்கியைச் சேதப்படுத்தினர்.

இலங்கையிலுள்ள தனியார் வங்கிகள் புதுவருடத் தினத்தன்று உரிய சுபவேளையில் வாடிக்கையாளர்களுக்கு கைவிஷேச கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டன என்று மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகிறது.

## திரையரங்கில் அத்துமீறல்
## கைகூப்பி மன்னிப்பு

(திருமலை நிருபர்)

திரையரங்கில் வைத்துப் பெண்களுக்குத் தொல்லை கொடுத்த இளைஞர் கோஷ்டியொன்று பொலிசாரிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டதுடன் பலர் முன்னிலையில் அந்தப் பெண்களைக் கை கூப்பி வணங்கிய சம்பவமொன்று திருக்கோணமலையில் இடம் பெற்றுள்ளது.

குறிப்பிட்ட திரையரங்கில் தமிழ்ப்படம் ஒன்று காண்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நான்கு இளம் பெண்கள் தனியாகப் படம் பார்க்க வந்திருந்தனர். அவர்கள் அருகில் ஆண்கள் இல்லையென்பதைக் கண்டு கொண்ட எட்டு இளைஞர்கள் கொண்ட கோஷ்டியொன்று அருகில் வந்து அவர்களுக்குத் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது.

தொல்லை அளவுக்கதிகமாகவே பெண்கள் திரையரங்கு நிர்வாகத்தினரிடம் முறையிட்டுள்ளனர். நிர்வாகம் எச்சரித்த போதும் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் இளைஞர்கள் சேட்டை விடவே பொலிசாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

பொலிசார் வந்தனர். பலர் பார்த்திருக்க அந்த எட்டு இளைஞர்களை வெளியே இழுத்து வந்து செம்மையாகப் போட்டதுடன் நான்கு பெண்களிடம் கையெடுத்து வணங்கி மன்னிப்புக் கேட்கவும் வைத்த பின்னரே அவர்களைப் போக அனுமதித்தனர்.

மன்னிப்புக் கேட்ட இளைஞர்களில் ஒருவர் ஊர்காவல் படையைச் சேர்ந்தவர். இவருக்குப் பொலிசாரின் கவனிப்பு விசேஷமாக இருந்ததாம். பொலிஸார்- இந்த நல்ல நடவடிக்கையைத் தெருக்களுக்கும் விஸ்தரித்தால் என்ன?

## வெளியேற்ற உத்தரவு
## உத்தியோகத்தர்கள் கொதிப்பு

(நமது நிருபர்)

திருக்கோணமலை வலயக் கல்வித் திணைக்களத்தை அதனது சொந்தக் கட்டடத்திலிருந்து வெளியேறுமாறு மாகாணக் கல்வித் திணைக்களம் பணிப்புரை விடுத்துள்ளது.

ஏற்கனவே இத்திணைக்களத்தின் ஒரு பகுதி அதிகாரியொருவரின் தனிப்பட்ட வசதி கருதி கணேசன் சந்தியிலுள்ள புதிய கட்டடமொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளது. ஆண்கள் விடுதிக்கெனக் கட்டப்பட்ட இக்கட்டடத் திணைக்களத்தின் ஒரு பகுதியையே தாங்க முடியாமல் திண்டாடுகிறது.

இட நெருக்கடி காரணமாக கதிரை மேசை போடப்படாததால் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் அமர்ந்து வேலை செய்ய முடியாமல் திண்டாடியதை ஏற்கனவே முரசு சுட்டிக் காட்டியிருந்தது. கல்வித் திணைக்களத்துக்கு வரும் ஆசிரியர்கள் தெருவோரத்திலும் தாழ்வாரத்திலும் தங்கி நின்றே தங்கள் கருமங்களை முடித்துக் கொள்கிறார்கள்.

இந்த நிலையில் கணக்காளர் அலுவலகம், களஞ்சியப்பகுதி என்பவற்றை உடனடியாக இட நெருக்கடியுள்ள கட்டடத்துக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலைப் புத்தகங்களை களஞ்சியப் படுத்தவே கட்டடம் காணாது. இந்த நிலையில் வைப்பதெப்படி? விஞ்ஞான உபகரணங்களையும் இரசாயனப் பொருட்களையும் களஞ்சியப்படுத்துவதெப்படி? உத்தியோகத்தர்கள் அமர்ந்து கருமமாற்றுவது எப்படி? என்று கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் குழம்பிப் போயிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் உத்தரவு பிறப்பித்த மாகாணக் கல்வி நிருவாகம் செயல்படும் கட்டடமும் நிலமும் திருக்கோணமலைக் கல்வித் திணைக்களத்துக்கே சொந்தமானது

"அண்ட வந்த பிடாரி ஊர்த் தெய்வத்தைக் கலைத்த கதை போல இருக்கிறது மாகாணக் கல்வித்திணைக்களத்தின் செயற்பாடு" என்று கல்வி அதிகாரியொருவர் முரசிடம் தெரிவித்தார்.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்

1964 ❑ 12 ❑ 31



இறைவன் அடியில்

1999 ❑ 03 ❑ 28

(மன்னார் உயிலங்குளத்தை பிறப்பிடமாகக் கொண்ட)

### திருமதி கதிரமலை ராஜா ஆன் கிறிஸ்ரின் ராஜி

எத்தனை நினைவுகளை சுமந்து கொண்டு
வாழ்ந்தாயம்மா
அத்தனையும் நிறைவு பெறுமுன்பே
கண்மூடியது ஏன் அம்மா?
பிஞ்சு முகங்களை விட்டு விட்டு
போனதேனம்மா!
உன் வஞ்சி முகத்தைப் பார்க்க
ஏங்குகின்றோமம்மா
ஆறாது இத்துயரம் இப்புவியில்
நாம் வாழும் வரை...!

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிகள் ஒத்தாசைகள் புரிந்தவர்களுக்கும், நேரிலும் தொலைபேசியிலும், கடிதத்திலும் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 27.04.99 அன்று நடைபெற்ற அன்னாரின் வீட்டு கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உம் பிரிவால் துயருறும் உள்ளங்கள் அன்பு கணவர், பிள்ளைகள், பெற்றோர்கள், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்:-சண்முகநாதன், திருகோணமலை.

## விளம்பரப்பகுதி


தபால் மூலம் விஞ்ஞானம்

G.C.E. (A/L) – இரசாயனவியல்
Year 9,10,11 – விஞ்ஞானமும், தொழில்நுட்பமும்
Year 5 – ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்:
குமார் சிவப்பிரகாசம்

விபரங்களுக்கு சுயவிலாசமிட்ட தபாலுறையுடன் விண்ணப்பிக்கவும்.

P.T.C.
14, Covington Road,
Batticaloa.



காண்டம்


முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு–6.
T.P:- 586218




மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.
நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831




## பிறந்தநாள் வாழ்த்து

சு. சுவீரஜன்
3வது பிறந்த நாள்
01.05.99

சு. சுவீர்தன்
1வது பிறந்தநாள்
14.04.99

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த சுவீந்திரலிங்கம்- சிவசக்தி தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள் சு.சுவீரஜன் தனது 3வது பிறந்தநாளை 01.05.99 அன்றும், சு.சுவீர்தன் தனது 1வது பிறந்த நாளை 14.04.99 அன்றும் ஜேர்மனியில் இருக்கும் தமது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார்கள். இவர்களை ஜேர்மனியில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, சுவிஸில் வசிக்கும் அப்பம்மா, இலங்கையில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா மற்றும் இலங்கை, ஜேர்மன், சுவிஸ், இலண்டன் ஆகிய நாடுகளில் வசிக்கும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் யாவரும்.

பாலையடி வைரவர் அருள் பெற்று பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:-அப்பம்மா (சுவிஸ்) தாத்தா, அம்மம்மா (இலங்கை)


BRIGHT BOOK CENTRE (PVT) LTD

தபால் மூலமான பாடநெறிகள்

SPOKEN ENGLISH & SINHALA

மூன்றேமாத காலத்தில் ஆங்கிலம்/சிங்களம் ஆகியவற்றை பேச, எழுத, வாசிக்க கற்றுக் கொள்ள முடியும். ஆயிரக்கணக்கான மாணவர்கள் கடந்த பத்து வருடங்களாக கற்று பயன் பெற்றுள்ளனர்.





METHOD OF COMPUTERISED BOOK KEEPING & ACCOUNTANCY (M.C.B.A)

கடைக் கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணுவது என்பதும், E.P.F, E.T.F, G.S.T, சம்பளம் தயாரிப்பது, சரக்கிருப்பு கட்டுப்பாடு ஆகிய அனைத்தும் கணனியின் உதவியுடன் தயாரிக்கும் முறை என்பன கற்றுத் தரப்படும் இப்பாட நெறியை மூன்றே மாதகாலத்தில் கற்றுத் தேறமுடியும்.



BUSINESS ENGLISH

வியாபார கடிதங்கள், வேலைக் கான விண்ணப்பங்கள் எவ்வாறு தயாரிக்கப் படுகின்றது என்பதும் நேர்முகத் தேர்வு, சம்பாஷனை ஆகியவற்றுடன் கூடிய பாடத் திட்டம் மேலதிக விபரங்களுக்கு விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

APPLICATION FORM
NAME :............................................
ADDRESS :............................................
............................................
விரும்பும் பாடநெறி :............................................

BRIGHT FUTURE IN YOUR HAND

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL
SUPER MARKET COMPLEX P. O. BOX NO: 162,
COLOMBO - 11. TELE: 434770, 074-718592


## மரண அறிவித்தல்



தாமோதரம்பிள்ளை யோகேஸ்வரன்
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்
26.07.1948

மறைவு
28.03.1999

திரு யோகேஸ்வரன் அவர்கள் 28.03.99 அன்று கைதடியில் காலமானார். இவர் தாமோதரம்பிள்ளை நீலாட்சி பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்பு கணவரும் சிவாஜினி (சுவிஸ்) ரவிவர்மன் (பிரான்ஸ்) தர்சினி (கொழும்பு) சிவேந்தினி (கைதடி) ஆகியோரின் அன்பு தந்தையும், சிவகுமார் (சுவிஸ்) சிவதரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், நாகரட்ணம் காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும், சஞ்ஜேயன் (சுவிஸ்) என்பவரது அன்பு பேரனும் ஆவார். இவரது இறுதி கிரியைகள் 28.03.99 அன்று கைதடியில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பாகள் ஏற்றுகொள்ளவும்.

தகவல்
திருமதி.த.சிவதரன் (மகள்), கொழும்பு.

www.padippakam.com

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

# "கெரில்லாக்களுக்கு எதிராக— குடிமக்களை தாக்கு"

## வெற்றிக்கு உதவாத உத்தி

மன்னாரில் நிலைகொண்டுள்ள படையினர் 24.04.99 சனிக்கிழமை அன்று மன்னார் பெரியமடு நோக்கி படை நகர்வொன்றை மேற்கொண்டனர்.

புலிகளும் எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள். இம் மோதலில் படையினர் தரப்பு சேத விபரங்கள் தெரியவில்லை. புலிகள் தரப்பில் பலியான மூன்று பேரின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டன.

பலியான மூவரில் ஒருவர் மலையகத்தைச் சேர்ந்த புலி. பதுளையைச் சேர்ந்த இராமையா சசிகுமாரே பலியானவர்.

இவர் மலையகத்திலிருந்தது புலிகளுடன் இணைந்து மட்டக்களப்பில் பயிற்சி பெற்றவர். பின்னர் வன்னிக்கு மேலதிக பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்.

சிலவாரங்களுக்கு முன்னர் மாங்குளம் பகுதி மோதல் ஒன்றில் கண்டியைச் சேர்ந்த புலி ஒருவர் பலியாகியிருந்தார்.

வன்னிச் சமரில் மலையக இளைஞர்களும் புலிகளது அணிகளில் இணைந்து பங்கெடுத்து வருகின்றனர்.

***

மன்னாரில் உயிலங்குளத்தில் 18.04.99 அன்று படையினரின் தாக்குதலில் புலிகள் ஐந்துபேர் பலியானார்கள்.

விசேஷ அதிரடிப்படையினரே இத் தாக்குதலை நடத்தினார்கள்.

02.04.99இல் மன்னார் நானாட்டானில் விசேஷ அதிரடிப்படைமீது புலிகள் நடத்திய தாக்குதலில் அதிரடிப்படையினர் பத்துப்பேர் வரை பலியாகினர்.

அதற்கு பழிவாங்குவதுபோல இத் தாக்குதல் அமைந்துவிட்டது. புலிகளது அணி வசமாக மாட்டிக்கொண்டதால் தப்பிச் செல்ல முடியவில்லை.

ஐந்து புலிகளது உடல்களும் படையினரால் கைப்பற்றப்பட்டன. பின்னர் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் ஊடாக புலிகளிடம் அனுப்பப்பட்டன.

உடல்களைப் பொறுப்பேற்ற புலிகள் இறுதி அஞ்சலியோடு பவனியாக எடுத்துச் சென்று குதுக்குடியிருப்பில் அடக்கம் செய்தனர்.

இத் தாக்குதலுக்கு பதிலடியாக மன்னாரில் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மன்னாரில் இருந்த படையினர் 'ரணகோஷ' நடவடிக்கைக்காக நகர்த்தப்பட்ட பின்னர், விசேஷ அதிரடிப்படையினரே மன்னார், வவுனியா சாலை ரோந்துப் பணிகளில் பெரிதும் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள்மீதே புலியணிகள் குறிவைக்கப்போகின்றன. மன்னாரில் புலிகள் நகரில்கூட தாராளமாக நடமாடுகின்றனர். பிஸ்டல் குழுவினர் அடிக்கடி நகருக்கு வந்து செல்கின்றனர்.

மன்னாாரில் புலிகளது தாக்குதல் அணிகளும் வேவுத் தகவல்களை திரட்டி வருகின்றன. எனவே தாக்குதல் ஒன்றுக்கான சாத்தியம் இருக்கிறது.

இதேவேளை களமுனையில் ஒரு வாரத்தில் சராசரி ஐந்து புலிகள் பலியாகிவருகின்றனர்.

எதிர்பாராத மோதல்கள், வேவு பார்க்கச் செல்லும்போது பதுங்கியிருக்கும் படையினரால் தாக்கப்படுதல் என்று பலவாறாக இக் களப்பலிகள் நேருகின்றன.

கடந்த சில மாதங்களாக குறைந்தது நூறு புலிகள் வரை இவ்வாறு பலியாகியுள்ளனர்.

அதேசமயம் படைத்தரப்பில் இவ்வாறான இழப்புக்கள் கடந்த சில மாதங்களில் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலிகளது அணிகளில் புதியவர்கள் சற்று அலட்சியப் போக்குடன் நடமாடுவதாகவும் தெரிகிறது.

மடுவை படையினர் கைப்பற்றியபோது நான்கு புலிகள் வரை படையினரிடம் மாட்டிக்கொண்டனர். அவர்களிடம் ஆயுதங்கள் இருந்ததாக தெரியவில்லை. அவர்கள் உடனடியாக படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவர்களது உடல்கள்தான் மடுப்பகுதியில் காணப்பட்டன. அதனையே பொது மக்களின் உடல்கள் கிடப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதேபோல பிக்-அப் வாகனம் ஒன்றில் வந்த புலி ஒருவரும் பதுங்கி இருந்த படையினரால் சுடப்பட்டிருந்தார். படையினர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு அதிகாலையிலேயே சென்ற பின்னர், அந்த விபரம் அறியாது நடமாடிய புலிகள் சிலரே இவ்வாறு மாட்டுப்பட்டனர்.

அதேசமயம் வேவு நடவடிக்கைகளில் புலிகள் பலியாவது தவிர்க்க முடியாததே. ஐந்து பேரோ பத்துப்பேரோ பலியானால்தான் நூறு பேரை பலியெடுக்கும் தாக்குதலுக்கு திட்டமிடலாம் என்பது யுத்த அவசியம்.

எதிரியின் நிலைகள், பலம், பலவீனம் பற்றி கண்டறியாது பாரிய தாக்குதல் எதனையும் மேற்கொள்ள முடியாது.

எனவே வேவுப் புலிகள் படை நிலைகளுக்

தரைப்பாதை திறப்பதை புலிகள் தடுப்பார்கள் என்று தெரிந்தும் அரசு போரை ஆரம்பித்தது.

யாழ் குடாநாட்டுக்கான இராணுவ விநியோகப் பாதையை திறப்பதும், இராணுவத் தீர்வுமே 'ஜயசிக்குறுய்' நோக்கங்கள் என்று கூறியதை அப்போது அரசு மறுத்தது.

யாழ் குடாநாட்டு மக்களுக்கு போக்குவரத்து சேவை வழங்கவே பாதையைத் திறக்க படாதபாடுபடுவதாக அரசு அறிவித்தது.

ஆனால் தற்போது அப்பாதையை திறக்க முடியாதது ஒரு புறமிருக்க, வன்னிக்கான தரைப்பாதையையும் மூடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதையை திறந்தாலும் புலிகள் படையினர்மீது தாக்குவர். அப்படியானால் புலிகள் தாக்கமாட்டோம் என்று கூறும்வரை யாழ் குடாநாட்டுக்கு

புலிகள் இலக்கறிந்து தமது ஷெல்களை ஏவக்கூடிய முறையில்தான் படை நிலைகள் பகிரங்கமாக அமைந்துள்ளன. எனவே புலிகள் ஷெல் தாக்குதல் நடத்துகின்றனர்.

ஆனால் படையினர் இனம் காணத்தக்கதாக புலிகளது முகாம்கள் எங்குமில்லை. எனவே படையினரின் ஷெல் தாக்குதல்கள் தமது எதிரியான புலிகளை அழிக்கமாட்டாது. பொது மக்களையே அழிக்கும்.

புலிகள் தாக்கினால் படையினரும் திருப்பித் தாக்குவார்கள்தானே என்று பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்கு நியாயம் கற்பிக்க முடியாது.

புலிகள் படையினரைத் தாக்கினால், பதிலுக்கு பொதுமக்களை படையினர் தாக்குவது தவிர்க்க முடியாதது என்றால், அந்நியப்படையினர் என்றே அர்த்தமாகும்.

கொழும்பில் குண்டு வெடித்தால் கொழும்பு படை முகாம்களில் இருந்து குடிமனைகள், கடைப்பகுதிகள் நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டதாக ஒரு சம்பவம்கூட இது வரைகால வரலாற்றில் நடக்கவில்லை.

ஜே.வி.பி. காலத்தில் பல பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. இராணுவ முகாம் தாக்கப்பட்டது.

கையாளப்படுகின்றன. மட்டக்களப்பில் கெரில்லா சமரை எதிர்கொள்ள குடிமனைகள்மீது ஷெல் வீச்சு நடத்துகின்றனர். இவை யுத்தம் ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களுக்கு எதிரானது என்ற அபிப்பிராயத்துக்கு வலுச் சேர்த்திருக்கின்றன.

கெரில்லா போரில் ஒரு தந்திரம் இருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் பொலிஸ், இராணுவத்திற்கு மக்கள் ஒத்துழைக்கிறார்கள் என்றால் அங்கு கெரில்லாக்கள் ஒரு தாக்குதல் நடத்துவர்.

உடனே ஆத்திரம் கொண்ட படையினர் அப்பகுதியில் உள்ள மக்களை தாக்குவர். அப்போதுதான் பொலிஸ் மற்றும் இராணுவத்தின் சுயரூபம் அப்பகுதி மக்களுக்கு தெரியவரும். அவர்கள் கெரில்லாக்களை ஆதரிக்கத் தொடங்குவர்.

இது 'குவிவு மையத் தத்துவம்' என்று சேகுவேராவின் குருவாக கருதப்படும் ரெஜிஸ் டிப்ரே கூறிய தந்திரமாகும்.

ஆனால் இங்கு புலிகளுக்கு அந்த சிரமம் இல்லாமலேயே அடிக்கடி குடிமக்கள்மீது தாக்குதல்கள் தொடருகின்றன. தம்மை அந்நியராக படையினர் நினைக்கின்றனர் என்று தமிழ் மக்கள் நம்பத்தக்க சூழ்நிலையே நாடெங்கும் வியாபித்திருக்கிறது.

எனவே, இத்தகைய நிலையில் கிழக்கில்கூட கெரில்லா எதிர்ப்பு யுத்தத்தில் படையினர் வெற்றி பெறுவது நடக்கக்கூடிய காரியமல்ல.

●□●

மடுபகுதிக்கு தனது விசேஷ தூதர் ஒருவரை ஜனாதிபதி அனுப்பி நிலவரத்தை ஆராய்கிறார் என்கின்றன செய்திகள்.

மடுவைப் பிடித்த அரசியல் நோக்கம்



கொசோவா விடுதலை இராணுவம் செர்பியப் படைகளுக்கு எதிராக கிராமப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள காட்சி.

குள் ஊடுருவ முற்படுவதும், அதன்போது படையினர் உஷாராக இருந்தால் சுடப்பட்டு பலியாவதும் நிகழவே செய்யும்.

அதேசமயம் பரந்தனில் தாக்குதல், மாங்குளத்தில் தாக்குதல், பத்துப் புலிகள் பலி, இருபது புலிகள் பலி என்று கூறப்படும் புள்ளி விபரங்கள் சரியாக இல்லை.

இரண்டை மூன்றால் பெருக்கி புள்ளி விபரம் கூறுவதே பொது விதியாகிவிட்டது. அந்தப் புள்ளி விபரப்படி பார்த்தால் வன்னியில் இப்போது படையினர் யாருடன் போரிடுகின்றனர்? என்ற கேள்வி எழும்.

●●●

புலிகளை தாக்கி அழித்து தரைப்பாதை திறந்து மக்களுக்கு உதவப் போவதாக கூறியே 'ஜயசிக்குறுய்' ஆரம்பிக்கப்பட்டது.

இப்போது புலிகள் தாக்குகிறார்கள் என்று காரணம் கூறி வன்னிக்கான தரைப்பாதையை படையினர் மூடிவைத்திருக்கின்றனர்.

அப்படியானால் வவுனியா-யாழ் சாலையை திறப்பதற்கு போரை ஆரம்பிக்க முன்னரே அது பற்றியும் புலிகளிடம் பேசியிருக்கலாமே.

உணவு அனுப்ப மாட்டோம் என்று அப்போதும் கூற வேண்டியிருக்கும்தானே.

'அமெரிக்கா நம்மைத் தாக்கினால் நாம் அல்பேனியர்களை தாக்குவோம்' என்று சேர்பிய படைகள் கூறுகின்றன. பல்லாயிரம் அல்பேனியர்களை பணயக் கைதிகளாக அமெரிக்கா குண்டு வீசும் என்று நம்பப்படும் இலக்குகளுக்குள் சிறை வைத்துள்ளனர்.

அதேபாணிதான் அப்பட்டமாக இங்கும் பின்பற்றப்படுகிறதா? புலிகள் தாக்கினால் வன்னித் தமிழர்களுக்கு உணவு அனுப்பமாட்டோம் என்று, உணவும் அத்தியாவசிய சேவைகளும் போரில் ஆயுதமாக பாவிக்கப்பட்டுள்ளன.

மருத்துவ ஆம்புலன்ஸ் சேவைக்கு அனுமதி வழங்குவதுகூட தாமதமாக மாநாடு கூடி யோசித்துத்தான் வழங்கப்பட்டது.

சேர்பியர்கள் அல்பேனிய உயிர்களுக்கு கொடுக்கும் மரியாதைக்கு (?!) இது எந்தளவிலும் குறைந்ததல்ல.

அதேபோல மட்டக்களப்பில் காவலரண்கள் புலிகளால் தாக்கப்பட்டதும், பொது மக்களுடைய குடியிருப்புகள் நோக்கி சரமாரியாக ஷெல்கள் ஏவப்பட்டுள்ளன.

பதிலடியாக ஷெல்கள் ஏவப்படவில்லை.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் மட்டுமே கெரில்லாக்கள் தாக்கி னால் குடி மக்கள் பழி வாங்கப்படுகின்றனர்.

குடிமனைகள் செறிந்த பகுதிகளில் மக்களோடு மக்களாக கலந்திருப்பதும், தாக்குதல் நடத்துவதுமே கெரில்லாக்களது உத்தி.

அந்த உத்தியை முறியடிக்க வேண்டுமானால், மக்களை தம் பக்கம் வென்றெடுக்க வேண்டும். தகவல்களை திரட்டி கெரில்லாக்களது நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். இதுதான் கெரில்லா எதிர்ப்பு யுத்த வழிமுறை.

ஆனால் கெரில்லாக்களை தப்ப விட்டபடி, குடிமக்களை தாக்குவதோ, குடிமனைப் பகுதிகளுக் குள் ஷெல் ஏவுவதோ கெரில்லா எதிர்ப்பு யுத்தமல்ல. குடிமக்கள் எதிர்ப்பு யுத்தம்தான்.

இதனால் கெரில்லாக்களுக்கு குறிப்பிட்ட குடிமக்களிடம் ஆதரவு ஏற்படுமே தவிர குறையாது.

புலிகளைப் பற்றி மக்கள் தகவல் தரமாட்டார்கள். புலிகள் தமிழர்களுக்காக போராடுகின்றனர். தமிழர்கள் அவர்களை ஆதரிக்கின்றனர் என்றொரு மனோபாவம் படைத்தரப்பிடம் இருப்பதால் அவர் கள் மக்களை மேலும் தம்மிடம் இருந்து அந்நியப்படுத்தி வருகிறார்கள்.

இந்த மனோபாவம்தான் புலிகள் தம்மைத் தாக்கினால் மக்களை பழிவாங்கும் நிலைக்கு கொண்டுசெல்கிறது. தமிழ் மக்களுக்கு அடித்தால் அது புலிகளுக்கு அடித்தது போலத்தான் என்ற திருப்தியையும் கொடுக்கிறது.

சேர்பியப் படையினர் அல்பேனியர்களை தாக்குவதை இலங்கையும் கண்டித்துள்ளது. கோசோவோ விடுதலை இராணுவம் தம்மை தாக்காதுவிட்டால் தாமும் அல்பேனிய மக்களை தாக்கமாட்டோம் என்றுதான் செர்பியப் படைகளும் அங்கு கூறுகின்றனவோ தெரியவில்லை.

வன்னியில் மரபுச் சமரில் வெல்வதற்கு மக்களை இடம்பெயரச் செய்வது, குடியிருப்புக்களை மேவிச் செல்வது என்ற அணுகுமுறைகள்

மாகாணசபைத் தேர்தலுடன் முடிந்து போய்விட்டது.

உடனே திரும்ப அழைத்தால் படையினருக்கு அரசின் நோக்கம் தெரிந்து கசப்பு ஏற்படும். அரசியல் ஆதாயங்களுக்காக தாம் பயன்படுத்தப்படுவதாக சலிப்படையலாம்.

அதனால்தான் உடனடியாக அல்லாமல் படிப்படியாக சற்று தூரம் அங்கிருந்து நகர்த்த அரசு நினைக்கிறது.

ஆனால், இங்கு ஒன்றை கவனித்தாக வேண்டும்.

மடுவில் இந்து ஆலயம் ஒன்று இருந்திருந்தால், அரசு படை அகற்றல்பற்றி பரிசீலித்தே இருக்காது.

யாழ் குடாநாட்டில் வலிகாமத்தில் உள்ள கீரிமலை நகுலேஸ்வரம் உட்பட முக்கிய தலங்களுக்கு நேர்ந்துள்ள கதி இதற்கு நல்ல உதாரணம்.

மடுமாதா விவகாரம் பாப்பரசர்வரை போயிருக்கிறது. அதுதவிர இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகள் பலவற்றில் கிறிஸ்தவ மக்களே பெரும்பான்மையினர். எனவேதான் மடுமாதா ஆலய விடயத்தை பரிசீலிக்க ஜனாதிபதி முன்வந்தார். விசேஷ தூதரையும் அனுப்ப இணங்கினார்.

முன்னர் வன்னியில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று குண்டு வீச்சுக்கு உள்ளானது என்று செய்தி வெளியானபோது, அது பற்றி விசாரிக்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார். பின்னர் விசாரணை எதுவும் நடைபெறவில்லை.

ஆக, நிர்ப்பந்தங்கள், உலக அபிப்பிராயங்கள், தமது நலன்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே தமிழ் மக்களது உடனடிப் பிரச்சனைகள் பற்றிய முடிவுகளும் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.

கீரிமலை நகுலேஸ்வரம், திருமலை கோணேஸ்வரம் பற்றியெல்லாம் தமிழ் கட்களும், தமிழ் எம்.பிகளும் எத்தனை மனுப்போட்டனர். பரிசீலிக்கப்படக்கூட இல்லை. ஏனெனில் இக்கட்சிகள் அட்டைக் கத்தி வீரர்கள் என்பது அரசுக்கு தெரியும். சும்மா கத்துவார்கள். முறைத்தால் அட்டைக் கத்தியை வீசிவிட்டு அஷ்டாங்க நமஸ்காரமாக விழுந்து விடுவார்கள். ■

**நாரதர்**

# அதிரடி அய்யாத்துரை



**உலகக் கோப்பைக்கு** புறப்பட முன்பாக சனத் தன் மணவாழ்க்கைக்கு வணக்கம் சொல்லிவிட்டார். 40 இலட்சம் ரூபா பணமாகவும், மேலும் ஒரு தொகைக்கு நகையாகவும் கொடுத்து மண உறவை இரத்துச் செய்திருக்கிறார். அதேசமயம் அரவிந்த தன் காதலியைக் கைப்பிடித்திருக்கிறார். மண முறிவுடன் ஒருவரும், மணமகனாக இனனொருவருமாக இங்கிலாந்திற்குப் பறந்திருக்கிறார்கள்.

**டென்மார்க் பேரணியில்** 'குமாரர்' தேசிய உடையில் தோன்றினாராம். கடும் குளிரில் நடுங்கிப் போனாராம். வெளிநாடுகளில் அவருக்கு பலத்த வரவேற்பாம். புலி முத்திரை குத்தியும் கலங்காமல் உலக வலம் சென்று பிரசாரம் செய்திருக்கிறார். பாராட்ட வேண்டிய சங்கதிதான்!

**கழகத்திற்குள் உட்பிரச்சனையைத்** தீர்க்கப்போவதாக தன் கட்சிக்குள் பெரும் எடுப்பாகக் கூறித்திரிகிறாராம் தமிழ்க் கட்சி ஒன்றின் செயலாளர். கழக மாணிக்கம் அவருக்கு நெத்தியடியாகப் பதில் கூறினாராம். "முதலில் உங்களுக்குள் இருக்கிற பிரச்சனையை தீர்த்துப்போட்டு என்னிடம் வாருங்கோ" என்று கூறிவிட்டாராம். தன் கட்சிக்குள் முன்னாள் முதல்வருக்கு எதிராக பிரசாரம் செய்தபடி, அடுத்த கட்சிக்குள் உள்ள பிரச்சனையில் 'மத்தியஸ்த' பாத்திரம் வகிப்பது 'ஊருக்குத்தான் மத்தியஸ்தம் தன் கட்சிக்குள் இல்லை' என்ற மாதிரியல்லோ இருக்குது!

**ரெண்டு எழுத்தாருக்கு** உதவியதாக குடும்பமாக கைது செய்வது ஒரு பக்கம், குடும்பம் குடும்பமாக காணாமல் போன விவகாரத்தையும், புதைகுழியையும் இன்னொரு புதை புதைக்க வேகம் காட்டுவது மறுபக்கம். ஒன்று தடயங்களை சோடிப்பது. இன்னொன்று தடயங்களை அழிப்பது. இரண்டிலும் வேகம்தான்!

**தலைநகரில் இருந்து** யாழுக்கு சேவை நடத்திய தனியார் விமான சேவை ஒன்று பயணச்சீட்டுக்களுக்கான பணத்தை மீளக் கொடுக்காது இழுத்தடிக்கிறதாம். வலியுறுத்திக் கேட்டால் நிறுவன ஊழியர்களால் மிரட்டப் படுகின்றனராம். "முடிந்தால் பொலிசில் சென்று முறையிடுங்கள்" என்று கூறுகிறார்களாம். தமிழ்ச் சனம் பொலிஸ் நிலையம் செல்லப்பயப்படும் என்று தெரிந்துதான் இந்த மிரட்டல்.

**துரையப்பா அரங்க** விசாரணைக்கு உதவுமாறு மண்ணியல் நிபுணரைக் கேட்க, அவரோ வெளிநாடு போக உள்ளதால் வரமுடியாது என்று கூறியுள்ளார். அவர்தான் செம்மணியை ஆய்வு செய்ய கொண்டு செல்லப்பட்டவர். துரையப்பா அரங்கை ஆய்வு செய்ய மறுத்ததில் இருந்தே அன்னாரின் அக்கறை புரிகிறதல்லவோ? இவ்வாறானவர் செம்மணியில் நியாயமான முடிவை உரைப்பார் என்பதற்கு யார் பாருங்கோ உத்தரவாதம்?

**வவுனியாவில் நடமாடும்** சேவையில் தமிழுக்கு இரண்டாம் இடம்தான். தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பூமியிலே ஏன் இந்த நிலை? சேவை நடத்திய ஆளுநரிடம் இப்படி தமிழ் தேய்ந்ததை வெகுஜன பிரதிநிதிகள்கூட காட்டமாக கண்டிக்கவில்லையே? இப்படியே குனிந்தபடி நின்று எதனைச் சாதிக்கப் போகிறோமோ? "சிங்களத்திற்கு இடம் கொடுக்காதே" என்பதல்ல, தமிழுக்கு- தமிழ்பேசும் பூமியில் உரிய இடம் கொடுக்க மறுத்தது ஏன்? என்று கேட்டிருக்கலாமல்லோ?

**யாழ்ப்பாணம் வல்லிபுரத்தில்** மண் அள்ளும்போது உடல் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளியான செய்தி வதந்திதானாம்! எலும்புக்கூடுகள் துரையப்பா அரங்கில் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் எலும்புக்கூடு வதந்தி பலமாகப் பரவித் திரிகிறதாம்.

**ஐரோப்பிய நாடுகளில்** நம்மவர்கள் 'படையப்பா'வுக்கு கட்-அவுட் வைத்து பூரிக்கிறார்களாம். படம் வெளியான அன்று திரையரங்குகளில் சொக்லேட்டுக்களுடன் போய் தயாராக இருந்தவையாம். ரஜினியின் முகம் திரையில் தெரிந்ததுதான் தாமதம், சொக்லேட்டுக்கள் திரை நோக்கிப் பறந்தனவாம். சொக்கலேட்டபிஷேகம்.

**தமிழ்க் கட்சிகள்** வலிகாமம் பற்றி முழுங்கிப்போட்டு அமைதியாகிவிட்டன. கையெழுத்து இயக்கம் நடத்தப்போவதாக கூட்டான கட்சி கூறியது. அதுவும் கைவிடப்பட்டது. வலிகாமம் பற்றி திட்டவட்டமான பதில் கூறாமல் இருந்துகொண்டு, மற்றப் பக்கத்தாலை காரைநகரில் சீநோரில் கைவைக்கப்படுகுது. இதைப் பற்றி அறியாதமாதிரி தமிழ்க் கட்சிகள் அனுஷ்டிக்கும் மௌனம் இருக்குதே, சொல்லி வேலையில்லை. 'பட்டு வேட்டிக் கனவில் இருக்க கட்டியிருந்த கோவணம் பறிபோனது!' மாதிரி, வலிகாமம் பற்றி தாம்தான் கதைத்ததாக தமிழ்க் கட்சிகள் உரிமை கோரிப் போட்டி போட்டுக்கொண்டிருக்க, சீநோர் பறிபோய்க் கொண்டிருக்குது!

**இவ்வாரப் பொன்மொழி:**

"நீங்கள் யாரிடம்
பொய் பேசுகிறீர்களோ
அவர்கள் உண்மை சொன்னாலும்
அதை உங்களால்
நம்ப முடியாது!" ■



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# கொலை வழக்கும் நீதிமன்றம் கண்டுகொள்ளாத குளறுபடிகளும்

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான வழக்கில் புலனாய்வுத் துறை பல தவறுகளை செய்திருக்கிறது.

குற்றச்சாட்டுக்கள் முன்னுக்குப் பின் முரணாக உள்ளன. அவ்வாறிருந்தும் 26 பேருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டமை ஏன்?

இக் கேள்வியை குற்றம் சாட்டப்பட்டோருக்கு ஆதரவானவர்கள் எழுப்பியதோடு, குற்றச்சாட்டுக்களில் உள்ள முரண்பாடுகளையும், புலனாய்வுத் துறையின் தவறுகளையும் பட்டியலிட்டு பிரசுரங்களை வெளியிட்டனர்.

ராஜீவ் கொலைக்கு புலிகளே காரணம் என்பதில் சந்தேகம் கிடையாது. அது பற்றிய தகவல்களையும் இங்கு தந்திருந்தேன்.

எனினும் புலனாய்வுத் துறை செய்த தவறுகள், குற்றச்சாட்டுக்களிலுள்ள முரண்பாடுகள் பற்றிய தகவல்களும் இத் தொடரின் வாசகர்கள் நிச்சயம் அறிந்திருக்க வேண்டியவையாகும்.

இங்கு சி.பி.ஐ. என்று சுருக்கமாக குறிப்பிடப்படுவது, இந்திய மத்திய புலனாய்வுத்துறை என்பதையே.

ராஜீவ் கொலை வழக்கு இந்திய மத்திய புலனாய்வுத் துறையால் அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழுவினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

'என்ன செய்தோம் ஏது செய்தோம்?' என்ற பெயரில் தமிழர் நிதிக் குழுவால் வெளியிடப்பட்ட நூலில் தரப்பட்ட தகவல்கள் இங்கு இடம் பெறுகின்றன.

## என்ன நடந்தது?

91.05.21 அன்று தேர்தல் பிரசாரம் ஒன்றிற்காக முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் நாட்டிலுள்ள சிறீ பெரும்புதூரிற்கு வந்திருந்தார். அன்றே மனித வெடிகுண்டொன்றினால் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

அக்கொலை காரணமாக பின்னர் பல்வேறு நாட்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் 26 தமிழர்கள் (இந்தியத் தமிழர் 13, இலங்கைத் தமிழர் 13) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

ராஜீவ் காந்தியின் கொலைச் சதியில் இவர்கள் ஈடுபட்டவர்கள் என மேற்குறிப்பிட்ட 26 பேர் மீதும் சிபிஐயினால் வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

ஆறரை ஆண்டுகள் கழித்து பூந்தமல்லி தடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி நவநீதம் அவர்கள் 98.01.28 அன்று இவ்வழக்குத் தொடர்பாக தீர்ப்பொன்றினை அளித்திருந்தார்.

நீதிபதி நவநீதம் வழங்கிய தீர்ப்பு இதுதான்: குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கில் தொங்கவிடுவதன் மூலம் மரணதண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்பதாகும்.

26 பேரில் ஒருவர்கூட இத்தீர்ப்பிலிருந்து தப்ப முடியாமல் போய்விட்டது.

வழக்கொன்றில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் நீதிமன்றத்தினால் தூக்குத் தண்டனை எனத் தீர்ப்பளிக்கப்படுவது இந்திய நீதிமன்ற குற்றவியல் வரலாற்றில் மட்டுமல்ல, உலக நீதிமன்ற குற்றவியல் வரலாற்றிலும் இதுவே முதற் தடவையாகும்.

இராணுவ நீதிமன்றங்களிலும்கூட குற்றவாளிகள் எனக் கருதப்படுவோர் செய்த குற்றத்தின் தன்மையின் அடிப்படையில்தான் மாறுபட்ட தண்டனைக்கு உட்படுவர்.

இப் பொதுவான நீதிமன்ற மரபை மீறி வெறும் சந்தேகத்தின் அடிப்படையில், இவர்கள் இக்குற்றத்தை செய்திருக்கலாம் எனும் ஊகத்தின் அடிப்படையில் குற்றஞ் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்குத் தண்டனை எனும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ் அநியாயத் தீர்ப்புத் தொடர்பாக பின்வரும் விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## பொது நியதி

1. ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பொதுவில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களில் சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் அந்தச் சந்தேகத்தின் பலனை (Benefits of Doubts) குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு சாதகமாக வழங்குவதுதான் நீதிமன்றின் பொதுவான நியதி.

இத்தீர்ப்பில் அந்த நோக்கம் பாதகமான முறையில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதுதான் விசித்திரம். நீதிமன்றம் சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழங்காமல், பொலிஸ் தரப்பிற்கு வழங்கியுள்ளது.

2. இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 26 பேரும் ராஜீவ் கொலையில் பங்கேற்றிருக்க வேண்டும். இந்த 26 பேருக்கும் தெரியாமல் இக்கொலை நடந்திருக்க முடியாது என்கின்ற இந்த சந்தேகம் கடுமையான தீர்ப்பு வழங்க காரணமாக அமைந்திருக்கின்றது.

தூக்குத் தண்டனை என்பதுதான் மிக அதிகபட்சமான தீர்ப்பு. அத்தகைய தீர்ப்புதான் 26 பேருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

3. வேறொரு விடயம் இங்கு கவனத்தைக் கோருகிறது. பொலிஸ் தரப்பு குற்றச்சாட்டுக்களின்படி இந்த 26 பேரில் எவரும் நேரடியாக ராஜீவ்காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவர்களில்லை.

ஆனால் நீதிமன்றம் இவை ஒன்றையும் கருத்தில் எடுக்கவில்லை. ஒரு எழுமானத்தின் அடிப்படையில் நீதி மன்றம் தனது தீர்ப்பினை வழங்கியுள்ளது.

4. முதலில், இந்த வழக்குத் தொடர் பான விசாரணையை மேற்கொண்ட இந்திய மத்திய புலனாய்வுத்துறையான சிபிஐ (CBI) மொத்தமாக 41 பேர்மீது குற்றஞ்சாட்டி யிருந்தது. இவர்களில் மூவர் தலைமறைவாகி விட்டனர். 12 பேர் பல்வேறு காலகட்டங்களில் இறந்துவிட்டனர். இந்நிலை யில் மீதமிருந்த 5 பெண்கள் உட்பட கைது செய்யப்பட்ட 26 பேர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிபிஐயினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

தடாச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தோர் 13 பேரும் இலங்கையைச் சேர்ந் தோர் 13 பேரும் ஆவர்.

5. 1991 நடுப்பகுதியில் சிபிஐயினால் தொடங்கப்பட்ட விசாரணை பல்வேறு காரணங்களால் இழுத்தடிக்கப்பட்டது.

இதனிடையில் பூந்தமல்லி கிளைச் சிறையில் அடைப்பட்டிருந்த 26 பேரும் பாதுகாப்புக் காரணங்கள் என்று சொல்லப்பட்டு 1991, ஒக்டோபர் மாதம் செங்கல்பட்டு சிறைக்கு மாற்றப்பட்டனர். அதன் பின்னர் 1992, ஒக்டோபரில் சேலம் சிறைக்கும், 1993 ஜனவரியில் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றிற்கும் கொண்டுவரப்பட்டனர்.

6. இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்தியச் சட்டத்தின்படி தடாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீது ஒருவருடம் முடிவதற்கிடையில் முழுமையாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இங்கு நடந்தது முற்றிலும் மாறுபட்டது. இந்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட 26பேர் மீதான குற்றப்பத்திரிகை 92.05.20 இல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் கூட, முழுமையாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. குற்றப்பத்திரிகை பகுதி பகுதியாக தவணை முறையில்தான் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## பொம்மை நீதிபதி

நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படுகின்ற போதே, குற்றப்பத்திரிகை தொடர்பான ஆவணங்களும் ஆதாரங்களும் தாக்கல் செய்யப்பட வேண்டும். இது முக்கியமான விதியாகும்.

இந்த விதியும் இங்கு மீறப்பட்டிருக்கின்றது. இந்த வழக்கில் விசாரணைகளை மேற்கொண்ட சிபிஐயினால் எந்த முறையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அது மட்டுமன்றி நீதிமன்றில் அவ்வப்போதும், தேவைப்பட்டபோதுமே ஆதாரங்கள் வழங்கப்பட்டன. குற்றப்பத்திரிகையின் நகலையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்குக் கொடுப்பதில் கூட சிபிஐ இழுத்தடிப்பையே மேற் கொண்டது.

7. மேலும் முக்கியமான ஒன்றினையும் குறிப்பிட வேண்டும். நீதிமன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பதாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிபிஐயினால் மிகக் கொடுரமான முறையில் சித்திவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

இறுதியில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டே ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்டது.

இதில் இன்னொன்றையும் வெளிப்படுத்த வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அளித்த தாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களின் பல பக்கங்களில் வாக்கு மூலம் அளித்தவர்களின் கையெழுத்து இடப்படவில்லை.

வாக்குமூலம் அளித்தவரின் கையெழுத்து ஒப்புதல் வாக்கு மூலத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இல்லாதிருந்தால் அந்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியாகாது. இது யாவருக்கும் தெரிந்த விடயம். நீதிபதிக்குத் தெரியாமல் விட நியாயமில்லை.

ஆனால் இங்கு நடந்தது என்ன? நீதிபதி நவநீதன் கையெழுத்தில்லாத ஒப்புதல்வாக்கு மூலங்களின் அடிப்படையில் தூக்குத் தண்டனை எனும் தீர்ப்பு வழங்கியிருப்பதானது, நீதிமன்றத்தை, சட்ட வன்மையை அவமதிக்கின்ற செயலாகும்.

தான்தோன்றித் தனமான அவரது இந்த நடவடிக்கையானது பல சந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. அரசியல் நிர்ப்பந்தம் அவரை பொம்மை நீதிபதியாக்கியிருக்கலாம் எனும் ஊகத்திற்கே வழி சமைக்கின்றது.

8. சாதாரணமான விதி ஒன்றினைக் கவனிக்க வேண் டும். ஒரு குற்றவியல் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் வழக்கின்போது குற்றவாளிக ளாக ஐயந்திரிபற நிரூபிக்கப்பட வேண்டும். நிரூபிக்கப்பட முடியாத விடத்து அவர்கள் குற்ற வாளிகள் அல்லர்.

ஆனால் தடா சட்டத்தினைப் பொறுத்து இச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் தாம் குற்றவாளிகளல்லர் என்பதை நிரூபிக்க வேண்டும். இரண்டு அம்சங்களையும் சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

சாதாரண குற்றவியல் சட்டத்தில் ஒருவரைக் குற்றவாளி என வழக்கு தொடுக்கும் அரசு அவரைக் குற்றவாளி என நிரூபிக்க வேண்டும். ஆனால் தடாச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகள் என வழக்குத் தொடரப்பட்டவர்களே தாம் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்க வேண்டும்.

அப்படி நிரூபிக்கப்படாத விடத்து அவர்கள் குற்றவாளிகள் என நீதிமன்றம் கருதும். தடாச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்ட இந்த 26 பேரும், தாம் குற்றவாளிகள் அல்லர் என நிரூபிக்கும் சந்தர்ப்பம் இருந்தும், நீதிபதி அதற்கான அவகாசத்தை வழங்கவில்லை. நீதியும் சட்டமும் செய்துவிட்ட வஞ்சகச் செயல் இது.

9. எப்போதும் குறிப்பிட்ட வழக்கிற்குரிய நீதிமன்றத்தினை முடிவு செய்த பின்னரே அந்த வழக்குற்குரிய வேலைகள் ஆரம்பமாகும்.

ஆனால் இங்கு இப்படியல்ல. இந்த வழக்கைப் பொறுத்து சிபிஐயினால் வழக்கு தாக்கல் செய்துவிட்ட பின்புதான் வழக்கு நடத்தப்படும் நீதிமன்றம் எதுவெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதனூடாகச் சொல்லப்பட்ட செய்தி என்னவென்றால், இந்த வழக்கு என்பது கண் துடைப்பு நாடகம். தீர்ப்பு இதுதான் என்பது எப்போதோ முடிவாகிவிட்டது. தீர்ப்பு எதேச்சாதிகாரத் தீர்ப்பாகும்.

10. இந்த எதேச்சாதிகாரத் தீர்ப்பை வழங்குவதற்கு சிபிஐயினால் தயாரிக்கப்பட்ட குற்றப்பத்திரிகைகூட விநோதமாக இருந்தது. வழமையாகக் கிடைக்கின்ற ஆதாரங்கள், ஆவணங்கள், சாட்சிகளின் அடிப்படையில் குற்றப் பத்திரிகை தயாரிக்கப்படுதல், குற்றவாளிகள் யாரெனத் தீர்மானிக்கப்படுதல் இவையே ஒழுங்கு முறையான நீதிமன்றத் தீர்ப்புக்கு இட்டுச் செல்வதாகும்.

ஆனால் இந்த வழக்கினைப் பொறுத்து, ஒரு அனுமானத்தின் அடிப்படையில் 'இவர்கள்தான் குற்றவாளிகள்' எனத் தீர்மானித்ததன் பிறகே வழக்கு விசாரணைக்கு வேண்டிய ஒப்புதல் வாக்குமூலங்கள், ஆதாரங்கள், ஆவணங்கள் சாட்சிகள் தயாரிக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் சிபிஐயினால் 1014 சாட்சிகள் இருப்பதாக முதலில் கூறப்பட்டது. ஆனால் 288பேர் தான் சாட்சிகளாகக் கூப்பிட்டு விசாரிக்கப்பட்டனர்.

அத்துடன் சாட்சிகளின் விசாரணையில் கூட விசித்திரம் நடந்தது. சாட்சிகளின் பெயர் முன்கூட்டியே குற்றவாளிகள் தரப்பில் ஆஜராகும் வழக்கறிஞர்க்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

சாட்சியாக அழைக்கப்படுபவர் களின் எண்கள் மட்டுமே கொடுக்கப்பட்டது. இதனால் சாட்சி சொல்ல வருபவர் யார்? அவர் எதற்காகச் சாட்சி சொல்ல வருகின்றார்? சாட்சியின் நம்பகத்தன்மை எவ்வளவு? என்பதெல்லாம் குற்றவாளிகள் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர்களுக்குத் தெரியவில்லை. சிபிஐ இந்த வழக்கை ஒரு பொருட்டாக மதிக்காமல், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தீர்ப்பை வழங்குவதில் வலு கவனமாக இருந்தது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

## இவர்கள் யார்? என்ன செய்தார்கள்?

### நளினி

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 1வது எதிரி</u>

*இந்தியத் தமிழர்*

தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்துகொண்டிருந்த எம்.ஏ. பட்டதாரி யான நளினி 21வது எதிரி பத்மாவின் மகள். இவருக்கு 91ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவிற்கு வந்த இரண்டாவது எதிரி முருகனுடன் நட்பு ஏற்பட்டது.

இந்த நட்பு சில காலத்தில் காதலாக மாறியது. இந்தக் காதலின் அடிப்படையில் ராஜீவ் காந்திகொலை செய்யப்பட்டு பத்து நாட்களிற்குப் பிறகு இருவரும் திருப்பதிக்குச் சென்று திருமணம் செய்து கொள்கின்றனர்.

பின்னர் இவர்களிருவரும் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்தபோது இவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது.

இவர் தனு, சுபா ஆகிய இருவருடனான அறிமுகங்களின் பின் அவர்களுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர். சம்பவதினமான 91.05.21 அன்று சுபா, தாணு, சிவராசன் ஆகியோருடன் இவர் சிறீபெரும்புதூருக்குச் சென்றுள்ளார்.

இதற்கு ஆதாரமாக சம்பவ இடத்தில் எடுத்த புகைப்படத்தில் இவரும் நிற்கிறார். எனவே இவர் சதியில் முழுமையாக ஈடுபட்டு அம்மூவருக்கும் உதவியாக இருந்தார் என்பது இவர் மீதுள்ள பொலிஸ் தரப்புக் குற்றச்சாட்டு.

இவர் கைதுசெய்யப்பட்டபின் இவரிடத்தில் பொலீஸார் ஒரு ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பெற்றுள்ளனர்.

## சுபாகூறியது

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில்; 91.05.21 அன்று மாலை 3 மணிக்கு நளினியின் வீட்டிலிருந்து சிவராசன், தனு, சுபா ஆகிய மூவரும் புறப்படுவதற்கு முன்பதாக "தனு இன்று வரலாற்று சிறப்புமிக்க ஒரு காரியம் செய்யப்போகிறார். சிறிபெரும்புதூரில் அவர் ராஜீவ் காந்தியை கொலை செய்யப் போகிறார்." என சுபா, நளினியிடம் சொன்னதாகவும், இதைக்கேட்ட நளினி எந்தவித அதிர்ச்சியுமடையாமல் சிரித்துக்கொண்டு சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஒப்புதல் வாக்குமூலத்தினை உண்மையாகக் கொடுத்த வாக்குமூலம் என எடுத்துக்கொண்டாலும் கூட, மாலை 8 மணிக்குத்தான் சதியைப் பற்றி நளினிக்குத் தெரியுமென நாம் கருதலாம். அதற்கு முன்பாக இந்தச் சதியைப் பற்றி நளினிக்குத் தெரியுமென பொலிஸ் தரப்புவாதம் கூட இல்லை.

இந்த வழக்கினைப் பொறுத்தவரை நளினி செய்ததெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டாவது எதிரி முருகனை காதலித்துத் திருமணம் செய்தது. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதின் பின் இருதடவை திருப்பதிக்குச் சென்று வந்தது. சிவராசன்-தாணு-சுபா ஆகிய மூவருடனும் சிறீபெரும்புதூர் கூட்ட நிகழ்ச்சிக்கு சென்றது என்பதினைத் தவிர, நேரடியாக ராஜீவ் காந்தி கொலை செய்யப்படுவதற்கு உடந்தையாக இருந்தார் என்பதாக இவர் மீது குற்றச்சாட்டு கிடையாது.

இவர் சிவராசன்-தாணு-சுபா ஆகிய மூவருடனும்சேர்ந்து சிறீபெரும்புதூர் சென்றார் என்ற ஒரேயொரு காரணத்திற்காக இந்த வழக்கில் நீதிமன்றம் இவருக்கு தூக்குத் தண்டனை வழங்கியுள்ளது.

### முருகன்

<u>குற்றஞ்சாட்டப்பட்ட 2வது எதிரி</u>

*இலங்கைத் தமிழர்*

இவர் 91ம்ஆண்டு ஜனவரி மாதம் இந்தியாவிற்கு வருகிறார். இவர் 21 வது எதிரி பத்மாவின் வீட்டில் தங்கியிருந்தபோது இந்த வழக்கில் 18வது எதிரி பேரறிவாளன், 20வது எதிரி பாக்கியநாதன் ஆகியோருடன் ஏற்பட்ட அறிமுகங்களினூடாக 1வது எதிரி நளினியுடன் நட்பு ஏற்பட்டது.

பின்னர் இந்த நட்பு காதலாக மாறி இவ்விருவரும் அடிக்கடி சந்தித்து வந்தனர். இவர் ஏப்ரல் மாத இறுதியில் இலங்கைக்குச் செல்வதற்காக கோடியாக்கரைக்குச் சென்று பின் கோடியாக்கரையில் படகு வரவில்லை என ஒரு சாட்டைச் சொல்லிவிட்டு நளினியை விட்டுப்பிரிந்துசெல்ல மனமில்லாமல் மீண்டும் சென்னை வந்து நளினியுடன் தங்கியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டதின் பின் இவர் நளினியுடன் திருப்பதி சென்று திருமணம் செய்து கொள்கிறார். பின்னர் மதுரை, விழுப்புரம், பெங்களூர் என பல ஊர்களுக்குச்சென்று மீண்டும் சென்னை வந்தபோது அங்கே வைத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர் இந்தியா வந்து விவேகானந்தாக் கல்லூரியில் ஆங்கிலம் கற்றுக்கொண்டார். அங்கே ஆங்கிலம் கற்ற காலங்களில் நளினியுடன் ஏற்பட்ட காதலின் அடிப்படையில் அவரைத் திருமணம் செய்து இரண்டு, மூன்று இடங்களுக்குச் சென்று வந்தார்.

இதனைவிட, இவ்வழக்கினைப் பொறுத்தவரை இவர் ராஜீவ் காந்தி கொலையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவரென இவர்மீது பொலிஸ் தரப்பில் எந்தவிதமான குற்றச்சாட்டுக்களுமில்லை. ஆனால் நீதிமன்றம் இவைகளை எல்லாம் கவனத்திற்கெடுக்காது இவருக்கும் தூக்குத்தண்டனை வழங்கியுள்ளது.

(தொடர்ந்து வரும்)





புலிக்கொடியுடன் தாணு



வழக்குத் தீர்ப்பின் பின்னர் புலனாய்வுத் தலைவர் கார்த்திகேயன் பேட்டி. (மத்தியில் அமர்ந்திருப்பவர்)

## கவனிக்கப்படாத முரண்பாடுகள்

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக ஆஜரான பிரபல சட்டத்தரணி துரைச்சாமி நீதிமன்ற தீர்ப்புபற்றி கூறியிருப்பது:

1. சதித் திட்டம் பற்றி ஒரு சாட்சிகூட விசாரிக்கப்படவில்லை.
2. சதிக்கு சாட்சியம் இல்லாத பட்சத்தில் பிறர் சாட்சியின் சாட்சியத்தை மட்டும் வைத்து தீர்ப்பு எழுதப்பட்டது தவறு.
3. சதித்திட்டத்தில் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் இச் சதித்திட்டம் பற்றி தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதற்கான சாட்சியம் எதுவும் கிடையாது.
4. இச்சதித்திட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிவராசன், தாணு, சுபா ஆகியோர் இறந்துவிட்டனர்.

இதேபோல பலமுரண்பாடுகள் எம்மால் சுட்டிக்காட்டப்பட்டும் அதைன நீதிமன்றம் கவனத்தில் கொள்ளவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது - இராஜதந்திரி

# ஆட்சிக் கவிழ்ப்பும் திரை மறைவுச் சதியும்

பாரதிய ஜனதா அரசு செல்வி ஜெயலலிதாவின் சொந்த நலன் சார்ந்த கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்தமையே, அவர் ஆதரவை விலக்கிக் கொள்ள காரணம் என்றே பொதுவாகக் கூறப்பட்டு வருகிறது.

பாரதிய ஜனதா அரசை கவிழ்ப்பதில் திரைமறைவில் செயற்பட்ட முக்கிய சக்திகள் பற்றிய திடுக்கிடும் தகவல்கள் தற்போது வெளியாகி வருகின்றன.

ஜெயலலிதாவின் சொந்த நலன் சார்ந்த கோரிக்கைகளையும், அதனை நிறைவேற்ற பாரதிய ஜனதா அரசு மறுத்ததால் அவருக்கு ஏற்பட்ட கோபத்தையும் சில சக்திகள் பயன்படுத்தியுள்ளன.

தமிழ்நாட்டில் தி.மு.க.அரசை கலைக்க வேண்டும் என்பதும், தன் மீதான ஊழல் வழக்குகளை அமுக்க வேண்டும் என்பதுமே ஜெயலலிதாவின் பிரதான

**இந்தியாவின் பிரபல புலனாய்வு செய்தியாளர்களது நம்பகமான தகவல்கள் இந்த வார அலசலுக்கு ஆதாரமாக அமைந்துள்ளன.**

கோரிக்கைகளாகும்.

அக் கோரிக்கைகளில் சிலவற்றுக்கு பாரதியஜனதா அரசு பணியவே செய்தது.

ஜெயலலிதாமீதான ஊழல் வழக்குகளை விசாரித்த தனி நீதிமன்றங்களை தடைசெய்ய முயன்றதுடன், அத் தடையை எதிர்த்து தீர்ப்புக் கூறிய நீதிபதி சிவப்பாவையும் பாரதிய ஜனதா அரசு பதவி நீக்கம் செய்தது.

இத்தகைய நடவடிக்கைகளால் பிரதமர் வாஜ்பேயின் நேர்மையும் கேள்விக்குள்ளானது.

பாரதிய ஜனதா கட்சியும், பிரதமர் வாஜ்பேய் அவர்களும் தமது கௌரவத்தை காப்பாற்றுவதற்கு விரும்பினால், ஜெயலலிதாவின் மிரட்டலுக்குப் பணியாது ஆட்சியை துறப்பதே மேல் என்றே பலரும் கருதினார்கள்.

பாரதிய ஜனதா ஆட்சி பீடம் ஏறியதில் இருந்தே அதன் முதுகில் ஜெயலலிதாவின் கத்திமுனை உரசிக் கொண்டே இருந்தது.

இந்திய அரசியல் கட்சிகளில் மதவாத கட்சியாக இருந்தாலும்கூட, அதன் தலைவர்கள் கறைபடியாதவர்கள், நேர்மையானவர்கள் என்ற நற்பெயரை பாரதிய ஜனதா கட்சி சம்பாதித்து வைத்திருந்தது.

ஜெயலலிதாவின் ஊழல்களை மூடிமறைப்பதற்கு துணைபோகக் கூடிய சில நடவடிக்கைகளால் பாரதிய ஜனதாவின் நற்பெயருக்கும் சேதம் ஏற்படத் தொடங்கியிருந்தது.

பதவியைக் காப்பாற்றுவதற்காக தமது கொள்கைகளை விட்டுக் கொடுக்கும் சாதாரண அரசியல்வாதிகள்போல பிரதமர் வாஜ்பேயியும் பத்தோடு பதினொன்றாகிவிட்டாரே என்று அவரது நலன் விரும்பிகளும் ஆதங்கப்பட்டிருந்தனர்.

எனினும், கடற்படைத் தளபதி நீக்கப்பட்ட விவகாரம், தி.மு.க அரசை கலைப்பது போன்றவற்றில் ஜெயலலிதாவின் கட்டளைகளை ஏற்க பிரதமர் வாஜ்பேய் திட்டவட்டமாக மறுத்திருந்தார்.

தி.மு.க அரசை கலைப்பது, கடற்படைத் படைத் தளபதி நீக்கத்தை இரத்துச் செய்வது ஆகிய இரண்டு கோரிக்கைகளிலும் விடுதலைப் புலிகளின் பெயரையே ஜெயலலிதா இழுத்திருந்தார்.

தமிழ்நாட்டில் புலிகள் நடமாட்டம் அதிகம் இருப்பதாகவும், ஆகவே தமிழக அரசை கலைக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

கடற்படைத் தளபதி விஷ்ணு பகவத் புலிகளின் கட்டளைப்படியே பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். எனவே அவரை மறுபடி பதவியில் அமர்த்த வேண்டும். பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பொர்னாண்டஸை பதவி விலக்க வேண்டும் என்றும் ஜெயலலிதா வலியுறுத்தினார்.

விஷ்ணு பகவத் விவகாரம் பற்றி பாரதிய ஜனதா மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளது கூட்டத்தில் ஜெயலலிதாவிடம் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது.

பாதுகாப்பமைச்சர் ஜோர்ஜ் பொர்னாண்டஸும் நடவடிக்கைக்கான காரணத்தை எடுத்துரைத்திருந்தார்.

விஷ்ணு பகவத் அமெரிக்க உளவு நிறுவனத்துடன் தொடர்பு வைத்திருந்ததுடன், கடற்படை இரகசியங்களை தெரிவித்து வந்ததாக தகவல்கள் கிடைத்திருந்தன.

அதனை பகிரங்கமாக கூறினால் பெரும் சர்ச்சைகளும் மற்றும் இராஜதந்திர சிக்கல்களும் உருவாகும் என்று கருதியே அவற்றை பகிரங்கமாக வெளியிட பாரதிய ஜனதா அரசு முன்வந்திருக்கவில்லை.

கூட்டணிக் கட்சிகளது கூட்டத்தில் விஷ்ணு பகவத் நீக்கம் சரியானது என்ற முடிவை ஜெயலலிதாவும் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இதன் பின்னர்தான் திரைமறைவு சதிகள் அரங்கேற ஆரம்பித்தன.

விஷ்ணு பகவத் பதவி நீக்கப்பட்டது முதற்கொண்டே புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகம் சதி வலை விரிக்க ஆரம்பித்திருந்தது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை வலைவிரித்துப் பிடித்து, விஷ்ணு பகவத் நீக்கத்துக்கு எதிராக எதிர்ப்பு காட்டும் முயற்சிகள் திரைமறைவில் ஆரம்பமாகின.

பாரதிய ஜனதா அரசு பதவிக்கு வருவதை அமெரிக்கா விரும்பியிருக்கவில்லை. அவ்வாறு பதவிக்கு வந்தால் இந்தியாவை வல்லரசாக பலப்படுத்தும் நடவடிக்கையில் பாரதிய ஜனதா இறங்கும் என்று அமெரிக்கா நினைத்தது.

பதவிக்கு வந்த பின்னர் பாரதிய ஜனதா அரசு மேற்கொண்ட அணுக்குண்டு சோதனைகளும், ஏவுகணைப் பரிசோதனைகளும் அமெரிக்காவின் நினைப்பை உறுதி செய்திருந்தன.

அமெரிக்காவுக்கு எதிரான முக்கோணக் கூட்டு பற்றிய ரசியாவின் யோசனையை இந்தியா மறுதலிக்காதிருந்ததும் அமெரிக்காவுக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியிருந்தது.

இவற்றுக்கு எதிராக இந்தியாவுக்குள் பிரச்சனைகளை கிளப்பிவிட முடியாததால் பல்லைக் கடித்துக் கொண்டிருந்தது அமெரிக்கா.

விஷ்ணு பகவத் பணி நீக்கப்பட்டதும் அதனை தக்க தருணமாக எடுத்துக்கொண்டு சதியில் இறங்கியது.

விஷ்ணு பகவத் இந்திய கடற்படைத் தளபதி என்பதால், அவரது பணி நீக்க விவகாரம் உள்ளாட்டுப் பிரச்சனையாகவே கருதப்படும். எனவே இந்திய அரசியல்வாதிகளை இதற்கெதிராக தூண்டிவிடுவது அமெரிக்காவுக்கும் அதன் புதுடில்லி தூதரகத்திற்கும் சுலபமாக அமைந்திருந்தது.

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அமெரிக்க தூதரகங்கள் உளவு நிறுவன மையங்களாகவும் செயற்பட்டு வருகின்றன.

அந்தந்த நாட்டு அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோருடன் நெருக்கமான நட்பை உருவாக்கிக் கொள்வதும் அவற்றில் ஒன்று.

விருந்துபசாரங்கள், கேளிக்கைகள், தமது நாட்டுக்கான சுற்றுப்பயண அழைப்புக்கள் என்று பல வழிகளில் அரசியல்வாதிகளை தூண்டில் போட்டு பிடித்துக்கொள்கின்றன.

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகமும் அவ்வாறான வேலைகளை நீண்டகாலமாக மேற்கொண்டு வருகிறது. சமீபகாலத்தில் தமிழ்க் கட்சித் தலைவர்களையும் விருந்துபசாரங்களுக்கு அழைத்து குதூகலப்படுத்தி வருகிறது.

இதுபோன்ற நடவடிக்கைகளால் பல நாடுகளில் அமெரிக்க தூதரக அதிகாரிகள் வெளியேற்றப்பட்டுமுள்ளனர்.

இந்தியாவிலும் பதவிக்காகவும், வசதிக்காகவும் கட்சிமாறும் அரசியல்வாதிகள் பலர் உள்ளனர். எனவே அவர்களை டொலர்களால் விலைக்கு வாங்குவது பெரும் சிரமமான காரியமல்ல.

விஷ்ணு பகவத் விவகாரத்தில் அமெரிக்கா நாடிய முக்கிய அரசியல்வாதி சுப்பிரமணியம் சுவாமி. இவர் நீண்டகாலமாகவே அமெரிக்காவின் விசுவாசியாக இருந்து வருகிறார்.

1983களில் ஈழப் போராளி அமைப்புக்களையும் இவர் பயன்படுத்த முற்பட்டிருந்தார். இவரை அமெரிக்க சி.ஐ.ஏ.யின் முகவர் என்று கூறி தமிழ் இயக்கங்கள் உறவு கொள்ளாதிருந்தன.

உலகின் பிரபல ஆயுத வியாபாரியான கசோகியுடன் கூட்டு வைத்திருந்தவர் சந்திராசாமி. அந்த போலிச்சாமியாரின் நம்பகமான சீடர்தான் இந்த சுப்பிரமணிய சுவாமி.



சந்திராசாமி | சுப்பிரமணியம் சுவாமி



முன்பு ஜெயலலிதாவின் ஆட்சியைக் கவிழ்க்க காலக்கெடு விதித்தவரும் இவர்தான். பின்னர் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவின் செல்வாக்கால் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

இவர் மூலமே அமெரிக்க தூதரகம் செல்வி ஜெயலலிதாவை அணுகியிருப்பதாக நம்பகமான தகவல்கள் கூறுகின்றன.

அதற்குரிய பகிரங்கமான ஆதாரங்களையும் காணக்கூடியதாக இருந்தது.

விஷ்ணு பகவத் விவகாரத்தை ஜெயலலிதா முதலில் கிளப்பியபோது, அதனை பாரதிய ஜனதாவை மிரட்டுவதற்கு கிடைத்த சந்தர்ப்பமாகவே பயன்படுத்தினார். இவ்வாறு தொடர்ந்து நெருக்கடிகளைக் கொடுத்தால், தனது பிரதான கோரிக்கையான தமிழக அரசை கலைப்பதற்கு பாரதிய ஜனதா அரசு இணங்கும் என்று எதிர்பார்த்தார்.

பின்னர் கூட்டணிக் கட்சிகளது கூட்டத்தில் தனக்கு முக்கியத்தும் அளித்து விளக்கம் தரப்பட்டதும் சமாதானமாகியிருந்தார். கூட்டணிக் கட்சிகளது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை ஏற்பதாக பத்திரிகையாளர் மாநாட்டிலும் கூறியிருந்தார்.

ஜெயலலிதாவின் இந்த அறிவிப்பால் அமெரிக்கத் தூதரகமே முதலில் அதிர்ச்சியடைந்தது.

உடனடியாக சுப்பிரமணியம் சுவாமி உசுப்பிவிடப்பட்டார். ஜெயலலிதாவை சந்தித்த சுவாமி, சோனியா காந்தியை சந்திப்பதற்கான ஒழுங்குகளையும் துரிதகதியில் செய்து கொடுத்திருந்தார்.

புதுடில்லியில் சுப்பிரமணியம் சுவாமியின் இல்லத்தில் சோனியாவும், ஜெயலலிதாவும் சந்தித்தனர். தேநீர் விருந்து என்று அதற்கு பெயர் கொடுக்கப்பட்டது.

இந்த சந்திப்புக்கு முன்பாக பாரதிய ஜனதா அரசை கவிழ்த்தால் ஜெயலலிதாவே பிரதமராகலாம் என்றும், அதற்கு தோதாக எம்.பி.களை வாங்க அமெரிக்கா நிதியை வாரி வழங்கத் தயாராக இருப்பதாகவும் உத்தரவாதம் தந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

அதன்பின்னரே சோனியாவை சந்தித்ததுடன், மறுபடி விஷ்ணு பகவத் விவகாரத்தையும் கிளறினார் ஜெயலலிதா. சுப்பிரமணிய சுவாமி கொடுத்த தைரியத்தில் துணிச்சலான சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

பாரதிய ஜனதா அரசில் இருந்து தனது அமைச்சர்களை உடனடியாக வாபஸ் பெற்றிருந்தார்.

**அமெரிக்க சிக்காக்கோ நகரில் ஜெயலலிதா பெயரில் நவீன மருத்துவமனை! திறந்து வைப்பவர் கிளின்டனின் தூதர்**

அவ்வாறு வாபஸ் பெற்றாலும் பாரதிய ஜனதா அரசு தப்பிப்பிழைக்க சந்தர்ப்பம் இருந்தது. எனவே, ஜெயலலிதா ஊடாக அமெரிக்க நிதி விளையாட ஆரம்பித்தது.

சென்னையில் இருந்து 48 பெட்டிகளுடன் ஜெயலலிதா புதுடில்லி சென்றிருந்தார். அவற்றில் பாதிப்பெட்டிகளில் கட்டுக்கட்டாகப் பணம் இருந்திருக்கிறது.

சென்னையிலும், புதுடில்லியிலும் வைத்து ஒரு பெரும் தொகை நிதி அமெரிக்க தூதரகம் ஊடாக கைமாறியுள்ளது.

அப்பணத்தை வைத்துத்தான் மாயாவதி உட்பட பல எம்.பிகளை இரவோடு இரவாக விலைக்கு வாங்கினார்கள். ஆட்சியைக் கவிழ்த்து முடித்தனர்.

இந்த ஆட்சிக் கவிழ்ப்பு திட்டத்தில் சோனியாவும் முன்னணியில் நின்றபோதும், பணத்தை வீசி காய்களை நகர்த்தியது சுவாமியும், ஜெயலலிதாவும்தான்.

ஜெயலலிதா பிரதமராக வருவதற்கு முடியாதுபோனாலும், மத்திய ஆட்சியை தீர்மானிப்பவர் என்ற பெயரைப் பெற்றிருக்கிறார்.

இதனால் அடுத்து வரும் ஆட்சி அவர் மீதான ஊழல் வழக்குகளை மூடி மறைக்க ஒத்துழைப்பதுடன், தமிழக அரசை கலைக்கவும் முன்வரவேண்டியிருக்கும்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் ஜெயலலிதா கணிசமான ஆசனங்களை பெறக்கூடியவராகவே இருக்கிறார்.

எனவே, ஜெயலிதாவைப் பொறுத்தவரை ஆட்சிக் கவிழ்ப்பு அவருக்கு ஆதாயமாகவே முடிந்திருக்கிறது.

அதே சமயம் அமெரிக்காவுக்கு பெரும் சந்தோசத்தை ஏற்படுத்துவதாகவும் விளங்கியுள்ளது.

அதேசமயம் பாரதிய ஜனதா அரசை கவிழ்த்ததோடு அமெரிக்கா திருப்திப் படப்போவதில்லை.

இந்தியாவில் நிலையான ஆட்சி நிலவாது, உள்நாட்டு அரசியல் நெருக்கடிகள் அடிக்கடி ஏற்படுவதையே அமெரிக்கா விரும்பி நிற்கிறது.

அடிக்கடி தேர்தல்கள், குழப்பங்கள், ஆட்சிக் கவிழ்ப்புக்கள் நடைபெற்று வருமானால் இந்தியாவின் வலிமை படிப்படியாக தேய்ந்து போகும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் வலிமை எந்தளவுக்கு தேய்ந்து போகிறதோ அந்தளவுக்கு அமெரிக்காவின் கைகள் இங்கு ஓங்குவதற்கு ஏதுவாகும்.

எனவே, இந்தியாவில் நிலையான ஆட்சியை குலைப்பதற்கு அமெரிக்கா ஜெயலலிதாவையே நம்பியாகவேண்டும்.

ஜெயலலிதாவின் தனிப்பட்ட குணாம்சங்களும், அவருக்கு எதிரான ஏகப்பட்ட ஊழல் விவகாரங்களும் காரணமாக எந்த ஆட்சிக்கும் அவர் தலைவலியாகவே இருந்து வருவார்.

அதுதான் அமெரிக்காவுக்கும் தேவை என்பதால், ஜெயலலிதாவுடன் மேலும் உறவை நெருக்கமாக்கிக் கொள்ளுவார்கள்.

இதற்கெல்லாம் முன்னோடியாக ஜெயலலிதாவை குளிர்விப்பதற்கான பெரிய காரியம் ஒன்றை அமெரிக்கா செய்துள்ளது.

ஜெயலலிதாவின் பெயரில் அமெரிக்காவில் மருத்துவமனை ஒன்று திறக்கப்பட இருக்கிறது.

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் இந்த நவீன மருத்துவமனையை ஜனாதிபதி கிளின்டனின் ஆபிரிக்க நாடுகளுக்கான விசேஷ தூதர் பாதிரியார் ஜெய்சி ஜாக்சன் எதிர்வரும் மே மாதம் 15 ம் திகதி திறந்து வைக்கவுள்ளார்.

அரசியல் தலைவர்கள், தளபதிகள், மற்றும் தமக்கு தேவையானவர்களது பலம் பலவீனங்களை அறிந்து வலை வீசுவதில் அமெரிக்க சி.ஐ.ஏ. கைதேர்ந்தது.

முகஸ்துதிகளில் நாட்டமும், எதற்கும் தன் பெயரை வைக்கும் ஆசையும் கொண்டவர் ஜெயலலிதா. அந்த பலவீனத்தை அறிந்து அவர் பெயரை மருத்துவமனை ஒன்றுக்கு வைத்துள்ளது அமெரிக்கா.

அமெரிக்காவின் தென்னாசியக் கொள்கையில் இந்தியாவை பலவீனமாக்குவதே இன்று பிரதான இடம் வசிக்கிறது. ஆகவே, இந்தியாவில் அரசியல் குழப்ப நிலையை ஏற்படுத்தகூடிய கதாநாயகியை இனம் கண்டு வலை வீசுவது ஆச்சரியமானதல்ல.

இந்தியாவில் பல் அரசியல் தலைவர்கள், தலைவிகள் உள்ளனர். அவ்வாறிருந்தும் ஊழல் வழக்குகள் அடுக்கடுக்காக தொடுக்கப்பட்ட ஒருவருக்கு கௌரவம் செய்வதற்கு அமெரிக்கா அவசரப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கதாகும்..

ஜெயலலிதா தமிழக முதல்வராக இருந்தபோது ஆற்றிய சுகாதாரப் பணிகளுக்காகவே அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளதாக கூறப்படுவது வலுவில்லாத காரணமாக இருக்கிறது.

உலகை ஆட்டிப் படைக்க ஈராக்மீதும், தற்போது யூகோசுலாவியாமீதும் குண்டுகளைப் பொழியும் அமெரிக்காவுக்கு, அவற்றைவிட சவாலான நாடு இந்தியாவாகும்.

எனவே, இந்தியாவில் அரசியல் உறுதிப்பாடின்மையை ஏற்படுத்த எந்த விலை கொடுப்பதற்கும் அமெரிக்கா பின் நிற்காது. அதற்காக இந்திய அரசியல்வாதிகளது ஆசாபாசங்களை தனக்கு சாதகமாக பயன்படுத்த ஆரம்பித்துள்ளது.

அடுத்து பொதுத்தேர்தல் நடந்தாலும் பெரும்பான்மை பலத்தோடு யாராலும் ஆட்சி நடத்த முடியாது என்பது உறுதியிலும் உறுதி.

எனவே, ஜெயலலிதாவின் தயவு அடுத்து வரும் கட்சிகளுக்கும் தேவைப்படும். அதனால் ஜெயலலிதா ஊடாக அமெரிக்க சதிகளும் தொடர்ந்து அரங்கேறுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

உயிலங்குளம் ஊடான போக்குவரத்தை படையினர் நிறுத்திய ஒருவாரத்தில் வன்னியில் ஐந்து நோயாளர்கள் பலியாகினர். அதில் ஒன்று இரண்டரை வயதுக் குழந்தை.

அவலை நினைத்து உரலை இடித்த கதையாக, புலிகளை கூறிக்கொண்டு பொதுமக்களை நெருக்கி இறுக்குகிறார்கள். போராட்டமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம் என்று சோர்ந்து சுருங்கி, ஒடுங்கி, மடங்கி, தருவதை தாருங்கள் என்று தமிழ் மக்கள் கையேந்தும் நிலை என்றுவரும்? அதுதான் பேரினவாதத்தின் எதிர்பார்ப்பு.

அந்த எதிர்பார்ப்புக்கு இந்த இறுக்கங்கள் உதவுகின்றன.

யாழ்ப்பாணத்தில் பத்து வயது பிள்ளைகளுக்கு அடையாள அட்டை. வன்னியில் போக்குவரத்து தடை. திருமலையில் சந்தை திறக்கத் தடை.

இப்படி வடக்கு கிழக்கின் தலைவிதி படையினரா லேயே தீர்மானிக்கப்படுகிறது.

அதனால் இதெல்லாம் ஆட்சியாளருக்கு குறிப்பாக ஜனாதிபதி மற்றும் முக்கிய அமைச்சர்களுக்கு தெரியாது என்பதல்ல.

வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு தான் என்று முடிவு செய்தது இராணுவத் தலைமைப் பீடமல்ல. சந்திரிக்கா அரசுதான் அந்த முடிவை எடுத்தது.

இராணுவத்தீர்வுதான் முடிவு என்று ஆகிய பின்னர் அங்கு இராணுவ நிர்வாகம்தான் நிலவ வேண்டும். இல்லையானால் இராணுவத்தீர்வை காணமுடியாது.

வன்னிப் போக்குவரத்தை தடுத்தது ஒரு மிரட்டல்தான். தொடர்ந்து அந்த தடையை நீடிக்க முடியாது என்பது தடைபோடும்போதே தெரியும்.

அந்த தடையை நீடித்தால் வன்னியை தனிநாடாக அரசே அங்கீகரித்ததாகப் போய்விடும். அதுமட்டுமல்ல போக்குவரத்து தடை மனித உரிமை மீறலாகவும் கொள்ளப்படும்.

ஆனால் புலிகள் தமது உறுப்பினர்களை சுடும்போது மட்டும் 'சகோதரப் படுகொலை' என்று கூறுகிறார்கள்.

தமிழ் கட்சிகளுக்கு இன்று யார் சகோதரர்கள்?

### சொந்த சோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்!

எனவே, நீடிக்க முடியாது என்று தெரிந்தும் மிரட்டலுக்காக வன்னி போக்குவரத்து தடை போடப்பட்டது. விளைவு, பல உயிர்கள் பலியாகின. 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது' என்ற கதைதான் இது.

போக்குவரத்து விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தியதை கண்டிக்கட்டும். ஆனால் கண்டித்தன தமிழ்க் கட்சிகள். வன்னிப் போக்குவரத்து தடையைப் பற்றியோ, அதனால் உயிர்கள் பலியானது பற்றியோ அலட்டிக்கொள்ளவே இல்லையே.

வன்னியில் உள்ள இலட்சக்கணக்கான தமிழ் மக்களை இக்கட்சிகள் தங்கள் இனத்தினராக, சோதரர்களாகக் கருதவில்லை.

நாளொரு பாதுகாப்பு விதியும், பொழுதொரு நெருக்கடியுமாக வாழும் தமிழ் மக்களை இக் கட்சிகள் தமது சகோதரர்களாக கருதுகின்றனவா?

அப்படியானால் பாரதியார் பாடல்தான் இவர்களுக்குப் பொருந்தும்.

"சொந்த சோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி கிளியே..." அடுத்த அடிகளை எழுத விரும்பவில்லை.

★★

**யா**ழில் கூட்டணி மறுபடி சுறுசுறுப்பாக களமிறங்கியுள்ளது. தந்தை செல்வாவின் திருநாமத்தோடு அடுத்த தேர்தலுக்கான ஆயத்தங்கள் ஆரம்பமாகியுள்ளன.

மாவை சேனாதிராஜாதான் கட்சிப் பணிகளை கவனிக்கிறார். "ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசுடனும், படையுடனும் கைகோர்த்து நிற்கின்றன. அவற்றுடன் கைகோர்க்க மாட்டோம்" என்று மாவை சேனாதிராசா திட்டவட்டமாக கூறியிருக்கிறார்.

அரச சார்பு நிலைப்பாட்டுக்கு யாழ்ப்பாணத்தில் ஆதரவு கிடைக்கப்போவதில்லை என்பதை நாடி பிடித்தறிந்து, கூட்டணி வியூகம் வகுக்கிறது.

ஆனால் வலிகாமம் காணிசுவிகரிப்பு விவகாரத்தில் கூட்டணிக்குள் இருந்து மாறுபட்ட கருத்துக்கள் புறப்பட்டன.

ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க உள்ளதாக அனாமதேய செய்திகளை பத்திரிகைகளுக்கு கொடுத்து மக்களது அதிருப்திகளைத் தணிக்க முற்பட்டது கூட்டணி.

வாக்குறுதிகளை நம்ப முடியாது என்று கூறியிருந்தார் மாவை சேனாதிராசா. ஜனாதிபதி கூறியதாக அந்த வாக்குறுதிச் செய்தியை வழங்கியதே தமது ஆட்கள்தான் என்பது சேனாதியாருக்கு தெரியாத சேதியாக இருக்கலாம்.



படிப்பகம்

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 59

**கடந்தவாரம்**

**தாதிகளை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய படைகளுக்கு எதிராக பெரும் போராட்டம் மூள்கிறது. மாணவர்களும், தாதிகளும் போராட்டத்தில் குதிக்கின்றனர். அவர்களது தலைவர்களை பணம் கொடுத்து சரிக்கட்டுகிறான் இடி அமீன்.**

**இனி....**

# இடி அமீன்

இடி அமீனின் நாடகங்கள் உகண்டா மக்களிடம் அம்பலமாகி வந்தன. அமீனை காட்டுமிராண்டி என்றே அவர்கள் கருதத் தொடங்கினார்கள்.

ஆனாலும் அமீனின் 'கக்வா' இனத்தவர்கள் மட்டும் அமீனை ஆதரித்தனர். 'கக்வா' இனத்தவர்களுக்கு எங்கும் முக்கியத்துவமும், முதலிடமும் கிடைத்தது.

'கக்வா' இனத்தவர் வாழும் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. காட்டுமிராண்டிகளாகவும், மனித மாமிசம் சாப்பிடும் நாகரிகமற்றவர்களாகவும் கருதப்பட்ட 'கக்வா' இனத்தவர்களுக்கு அமீனின் ஆட்சியில் பொற்காலம் பிறந்தது.

அமீன் தனது இனத்தவரையே நம்பினான். ஏனைய இனத்தாருக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிட்டு குரோதங்களை வளர்த்தான்.

'கக்வா' இனத்தின் ஆதரவும், இனச் சண்டைகளும் இல்லையானால் அமீனின் ஆட்சி அதிக காலம் தாக்குப் பிடித்திருக்க முடியாது.

மூன்று பிரிவினர் அமீனின் ஆட்சிக்கு உறுதுணை புரிந்தனர். அந்த மூன்று பிரிவினரைச் சேர்ந்த பதினைந்தாயிரம் துருப்புக்கள் அமீனுக்கு விசுவாசமாக இருந்தன.

அவர்களில் உகண்டா நாட்டவரில் 'கக்வா' இனத்தவரே பெரும்பாலானோராக இருந்தனர். ஏனைய இனத்தினர் உகண்டா இராணுவத்தில் இருந்து படிப்படியாக இல்லாதொழிக்கப்பட்டனர்.

'கக்வா' இனத்தவரைத் தவிர படைகளில் இருந்தோரில் ஏனையோர் வெளிநாட்டவர்கள்.

காலத்துக்குக் காலம் உகண்டாவில் குடியேறிய நுபியன் இனத்தைச் சேர்ந்தோரை இராணுவத்தில் இணைத்துக் கொண்டான்.

அவர்கள் தவிர சூடானியர்களும் படையில் சேர்க்கப்பட்டனர். தெற்கு சூடானின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சிகளில் ஈடுபட்டு அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்ட சூடானியர்களுக்கு அமீன் புகலிடம் கொடுத்து வந்தான்.

அவர்களை பகிரங்கமாகவே உகண்டா இராணுவத்தில் சேர்த்துக் கொண்டான்.

இந்த மூன்று பிரிவினரும் அமீனின் கட்டளைகள் எத்தகைய கொடூரமாக இருந்தாலும் சற்றும் தயக்கம் இல்லாமல் நிறைவேற்றுவார்கள்.

கொலைகள் செய்வதிலும், கொடூரமான சித்திரவதைகள் புரிவதிலும் அவர்களுக்கு அலாதியான இன்பம் ஏற்பட்டுவிட்டது.

அழகான பெண்களைக் கண்டால் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள். கூட்டமாக பாலியல் வல்லுறவில் ஈடுபடுவார்கள். இவர்களது கொடூரத்தை தாங்க முடியாது நூற்றுக்கணக்கான பெண்கள் மாண்டு போனார்கள்.

தனது நாடகங்கள் எடுபடாது என்று தெரிந்ததும் உகண்டா மக்களை பயத்தில் ஆழ்த்த முடிவு செய்தான் அமீன்.

அதுவரை மறைவாக நடந்த சித்திரவதைகள் பகிரங்கத்தில் அரங்கேற ஆரம்பித்தன.

உகண்டாவின் தலை நகரான கம்பலா நகரில் இருந்து ஜிஞ்ஜா செல்லும் பாதையில் மூன்று மைல் தூரத்தில் 'நகுரு' என்னும் ஊர் இருந்தது.

அங்கு தான் திறந்த வெளி சித்திரவதை முகாம் ஒன்று அமைக்கப்பட்டது.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு அருகே அந்த முகாம் இருந்தது. நெடுஞ்சாலையில் வாகனங்களில் சென்று வருவோர் காணக்கூடியவாறு திறந்த வெளிகளில் சித்திரவதைகள் நடக்கும்.

தலைநகருக்கு செல்லும் பிரதான நெடுஞ்சாலை என்பதால் தினமும் பல்லாயிரக்கணக்கானோர் பேருந்துகளிலும், வாகனங்களிலும் அவ்வழியே செல்லுவர்.

ஏராளமான குடியிருப்புக்களும் அப்பகுதியில் இருந்தன. தலைநகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் ஏனைய இனத்தினரே செறிந்து வாழ்ந்தனர்.

அவர்கள் மட்டும் அவ்வாறு செறிந்திருப்பது தனக்கு ஆபத்து. திடீரென்று அவர்கள் ஒன்று சேர்ந்துவிட்டால் எதுவும் செய்ய முடியாது என்பதால், 'கக்வா' இனத்தினரையும், சூடானியர் மற்றும் நுபியன் இனத்தினரையும் பரவலாக குடியமர்த்தினான்.

ஆசிய நாட்டவர்கள் விட்டுச் சென்ற வீடுகளில் அவர்கள் குடியேற்றப்பட்டனர்.

இவ்வாறு அமீனின் இனத்தினரும், அவனது விசுவாசிகளும் தம் மத்தியில் குடியேறி இருந்ததால், ஏனைய இனத்தினர் வாய் திறக்கவே பயந்தனர்.

அது போதாது என்று திறந்த வெளி சித்திரவதை முகாமின் காட்சிகளை தினமும் காண்பதால் அச்சமும் ஏற்பட்டிருந்தது.

திறந்தவெளி வதைமுகாமுக்கு எதிரே இரண்டு உயரக் கோபுரங்களுடன் கூடிய நிர்வாகப் பயிற்சியகம் இருந்தது.

திறந்தவெளி முகாமின் சித்திரவதைகளுக்கு அங்கிருந்துதான் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன.

அந்த வதைமுகாமிலிருந்து எப்போதும் கூக்குரல்கள் கேட்ட வண்ணமே இருக்கும்.

**"சித்திரவதைகளையும், கூக்குரல்களையும் கண்டும், செவிமடுத்தும் செல்பவர்கள் எமக்கெதிராக முணுமுணுக்கக்கூட அஞ்சுவார்கள்!"** என்று அமீன் கூறினான்.

திறந்தவெளி வதைமுகாம் பொறுப்பு அதிகாரியாக இருந்தவன் அலி ரெளலி. பயங்கரமான சித்திரவதைப் பிரியன்.

பெண்களை நிர்வாணமாக்கி குரூரமாக வதைப்பான். அழகான பெண்களாக இருந்தால் தனது தனிக் கண்காணிப்பில் சில நாட்கள் வைத்திருந்து வல்லறவு கொள்ளுவான்.

அதைவிட கொடூரம், ஆண் கைதிகளை பெண் கைதிகளுடன் தன் கண்முன்பாக உறவு கொள்ளுமாறு கூறி அதனைப் பார்த்து இரசிப்பான்.

மறுத்தால் கொலைவிழும் என்பதால் ஆண் கைதிகள் அவனது கட்டளைக்கு பணிந்தனர்.

ஆண் கைதிகளை ஒருவரோடு ஒருவர் மோதவிட்டும் வேடிக்கை பார்ப்பான்.

"யார் வெற்றி பெறுகிறீர்களோ அவர்களுக்கு விடுதலை!" என்று அறிவிப்பான்.

விடுதலை கிடைக்கும் என்ற ஆசையில் ஆக்ரோசமாக சண்டையிடுவார்கள்.

இச் சண்டையில் ஒருவனைக் கொன்று இன்னொருவன் வெற்றி பெறுவான். அவ்வாறு வெற்றி பெற்றவனுடன் மற்றொரு கைதி மோதவிடப்படுவான். திறந்த வெளியில் இரவு பகலாக இந்தக் கொலை வெறியாட்டம் நடைபெறும். இதனைப் பார்வையிட பொது மக்களும் அழைக்கப்படுவார்கள்.

பண்டைய ரோம இராச்சியத்தில் அடிமைகளை மோதவிட்டு எஜமானர்கள் வேடிக்கை பார்த்ததுக்கு ஒப்பானதாக இந்தக் கொலை விளையாட்டு இருந்தது.

பல கைதிகள் மாண்டுபோவார்கள். இறுதியில் ஒருவரோ இருவரோ விடுதலையாவர்.

அரச ஆய்வுப் பிரிவுக்கு நுபிய இனத்தவனான மேஜர் ;·பாருக் மினாவா தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தான்.

நக்கசெரோ என்ற இடத்தில் ஜனாதிபதியின் விடுதிக்கு அருகே அதன் தலைமை நிலையம் இருந்தது.

யூகோஸ்லாவிய நாட்டு நிறுவனம் ஒன்று இதற்கான மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொறுப்பினை ஏற்றிருந்தது.

மிகவும் நுட்பமாக இந்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் விடுதிக்கும் இந்த நிலையத்துக்கும் இடையில் சுரங்கப்பாதை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

இடி அமீனுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் தப்பிச் செல்லக் கூடியதாகவே சுரங்கப் பாதை அமைக்கப்பட்டிருந்தது.

இதன் அருகாமையில்தான் ;·பிரான்ஸ் நாட்டு தூதரகமும் அமைந்திருந்தது.

அரச ஆய்வுப் பிரிவில் ஒரே தடவையில் இரண்டாயிரம் பேருக்கு பயிற்சி தரப்பட்டு வந்தது. இங்கு பயிற்றப்படுபவர்கள் சிவில் உடை தரித்து பொதுமக்களிடையே உளவு பார்த்தனர்.

வேறு பலர் பிறநாடுகளிலுள்ள உகண்டா தூதரகங்களுக்கும் அனுப்பப்பட்டனர். ஆறு வருடங்களில் மொத்தம் பன்னிரண்டாயிரம் பேருக்கு இங்கு பயிற்சியளிக்கப்பட்டது.

இங்கு பயிற்சி பெற்றவர்களுக்கு கல்வி அறிவு போதுமானதாக இருக்கவில்லை. பயிற்சி கொடுத்தவர்களுக்கும் கல்வி அறிவு போதுமானதல்ல.

அப்படியிருந்தும் இங்கு பயிற்சி பெற்ற சிலர் பின்னர் மாகாண ஆளுநர்களாகவும் நியமிக்கப்பட்டதுதான் வேடிக்கையாக இருந்தது.

அவர்களுக்கு நிர்வாகம் செய்யவோ, மக்களுடன் தொடர்பு கொள்ளவோ தெரிந்திருக்கவில்லை.

இடி அமீன் கூறு வதையெல்லாம் அப்படியே செய்து முடிப்பதுதான் அவர்களுக்குத் தெரிந்த ஒரே ஒரு வேலை.

படித்தவர்களும், நிர்வாகம் தெரிந்தவர்களும் தன்னை ஏமாற்றிவிடுவார்கள், தனக்கு எதிராகச் சதி செய்துவிடுவார்கள் என்று அமீன் பயந்தான்.

அந்தப் பயம்தான் தாறுமாறான நபர்களை முக்கிய பதவிகளில் அமர்த்தக் காரணமாக இருந்தது.

இராணுவப் பொலிஸ் பிரிவுக்கு நுபியன் இனத்தினரான மேஜர் ஹசைன் மாரெல்லா பொறுப்பாக இருந்தான்.

இராணுவத்துக்குள் அமீனுக்கு எதிரானவர்களை களையெடுப்பதுதான் இராணுவப் பொலிஸ் பிரிவின் முக்கிய பணி.

இராணுவத்திற்குள் களையெடுப்புக்கு ஆரம்பமான இப்பிரிவு படிப்படியாக பொது மக்களையும் கைது செய்ய ஆரம்பித்தது.

ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் யாரால் கைது செய்யப்பட்டார் என்று அறிவதற்கு பல வாரங்களாகிவிடும். கைதானவரின் உயிர் பிரிந்துவிட்டால் யாரால் கைது செய்யப்பட்டார் என்ற விபரம் கடைசிவரை தெரியாமலே போய்விடும்.

அந்தளவுக்கு இராணுவத்தில் பல பெயர்களில் பல பிரிவுகள் இருந்தன. எந்தப் பிரிவுக்கும் எவரை வேண்டுமானாலும் கைது செய்யும் உரிமை இருந்தது.


ஆயினும் அமீனின் 'கக்வா' இனத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் கண்மூடித்தனமாக கைது செய்ய முடியாது.

சட்டப்படி, உரிய முறையில் 'கக்வா' இனத்தைச்சேர்ந்த எவரையும் கைது பண்ண முடியும். அதுவும் பொலிசார்தான் கைது பண்ண முடியும்.

இந்த விஷயம் தெரியாமல் நுபிய இன மேஜர் ஒருவர் 'கக்வா' இனப் பெண் ஒருத்தி மீது கண் வைத்தான்.

அவளை கடத்திச் சென்று தன் அறையில் நிறுத்தினான். அதன் பின்னர் அவன் நடந்து கொண்ட முறையும் கொடூரமானது. அவனுக்கு நேர்ந்த முடிவும் குரூரமானது.

(இடி தொடரும்)



**தருவது**

**ரசிகன்**

# ரேணுகா திருமணம்



நம்நாட்டிலும் சின்னத்திரைகளில் பிரபலமான தொடர் 'ஜன்னல்'. இந்த தொடர் மூலம் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் பிரபலமானவர் ரேணுகா. பாலசந்தரின் 'காதல் பகடை' மற்றும் 'பிரேமி' உட்பட மேலும் பல நாடகங்களிலும் நடித்துள்ளார். திரைப்படங்களிலும் தோன்றியிருக்கிறார்.

ரேணுகாவுக்கும் பட அதிபர் கிருஷ்ணன் என்பவரின் மகன் குமரனுக்கும் திருமணம் நடக்க உள்ளது.

காதல் திருமணம் என்று நினைத்து விடாதீர்கள். இரண்டு வீட்டிலும் பெற்றோர் பார்த்து நிச்சயித்த திருமணம்தான்.

ஜூன்மாதம் 24ம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது. பாலசந்தர்தான் முன்னால் நின்று நடத்தி வைப்பார்.

# பானுப்பிரியாவை சாகடித்த 'சக்தி'

இதுவும் ஒரு சின்னத்திரை செய்திதான். சன் ரி.வியில் ஒளிபரப்பாகி இங்கு சக்தி ரி.வி.மூலம் ஒளிபரப்பாகும் தொடர் சக்தி.

வாரத்தில் ஐந்துநாள் ஒளிபரப்பாகும் இத் தொடர் இங்கும் பெண்களது ஆதரவை பெற்றுள்ளது.

இந்த நாடகத்தின் முக்கிய கதாபாத்திரம் பானுப்பிரியா. திடீரென்று அந்த உயிர் நாடியான பாத்திரத்தையே சாகடித்துவிட்டனர்.

பானுப்பிரியாவின் கணவர் ஆதர்ஸ் அமெரிக்காவில் இருக்கிறார். அவருக்கு விபத்து ஒன்றில் காயம் ஏற்பட்டது. அதனால் அமெரிக்கா போனார் பானுப்பிரியா.

அவர் இல்லாதபோது காட்சிகளிலும் கதையிலும் சில மாறுதல்கள் செய்தனர். பானுப்பிரியா கோமாவில் இருப்பதுபோல கதையை நகர்த்தினர். ஆனால் பானுப்பிரியா வரத் தாமதமானதால் அவர் இறப்பதாக கதையை அமைத்தனர்.

சவப்பெட்டிக்குள் 'டூப்' நடிகை ஒருவரை படுக்கவைத்து, பானுப்பிரியாவின் படம் ஒன்றை பயன்படுத்தி கம்பியூட்டர் கிராபிக்ஸ் முறையில் ஒட்டு வேலை செய்து கதையை முடித்துவிட்டனர்.

அமெரிக்காவில் இருந்து இதனை அறிந்த பானுப்பிரியா அதிர்ந்து போனாராம்.



இந்த நாடகத்தில் சுகன்யா நுழைந்த பின்னரே பானுப்பிரியாவை ஓரம் கட்டும் வேலைகள் ஆரம்பமானதாம்.

சுகன்யா தன் வித்தைகளைக் காண்பித்து தயாரிப்பாளர், இயக்குநர் ஆகியோரை வீழ்த்திவிட்டதாக கூறப்படுகிறது.

'சக்தி' நாடக முன்னோட்டத்தில் பானுப்பிரியா தன் கணவரது சகோதரியின் குழந்தையை கொஞ்சுவது போன்றும், உணவு ஊட்டுவது போன்றும் காட்சிகள் வரும். அந்த காட்சிக்குரிய சூழ்நிலை வரமுன்னரே பானுப்பிரியாவின் பாத்திரத்தை சாகடித்து விட்டனர்.

# மர்மப்படங்கள்

மர்மப் படங்கள் மற்றும் பயங்கரமான படங்களுக்கு எப்போதும் மவுசு இருந்து வருகிறது. சமீபத்தில் 'ஹொட்ஷிலா', 'அனகொண்டா' போன்ற படங்களுக்கு நம்நாட்டிலும் பலத்த வரவேற்பு. வீடியோக்கள் மற்றும் வீ.சி.டிகளில் வெளியாகி ஏக கிராக்கி.



இவ்வாறான படங்களுக்கு மவுசு ஏன்? என்பது பற்றி மனோதத்துவ நிபுணர்கள் ஆராய்ந்தனர். ஆராய்ச்சியின் முடிவில் அவர்கள் பின்வரும் முடிவுக்கு வந்தனர்.

பயங்கரமான காட்சிகளைக் கொண்ட படங்களை பாதுகாப்பான இடத்தில் அமர்ந்து பார்ப்பதில் பலருக்கு குஷி.

பயமும் அதே நேரம் மர்மமும் கலந்த படங்கள் எதிர் பார்ப்பை உண்டாக்குகின்றன. இப்படியான உணர்ச்சிகள் ஒருவிதமான உற்சாகத்தை ஏற்படுத்துகின்றன.

எனவேதான் திகில் மற்றும் மர்மப் படங்களுக்கு எப்போதுமே வரவேற்பு இருக்கிறது.

# வெற்றிலையும் வயாக்ராவா?

வெற்றிலை போடுவதால் ஏற்படக் கூடிய பலன்கள் பற்றி சித்த மருத்துவ டாக்டர் ஒருவர் கூறியுள்ள கருத்துக்களைப் பாருங்கள்.



இரவு சாப்பாட்டுக்கு பின்னர் கணவனும் மனைவியும் வெற்றிலை பாக்குப் போடுவது என்ற பழக்கம் முன்பு இருந்தது.

தாம்பூலம் தரிப்பது என்பது தாம்பத்ய உறவுக்கு தூண்டுதலை ஏற்படுத்தக் கூடியது.

அப்படியானால் வெற்றிலை நம்நாட்டு வயாக்ராவா என்று கேட்காதீர்கள்.

தாம்பூலம் தரிப்பது தாம்பத்ய ஈடுபாட்டைக் கூட்டும். அவ்வளவுதான்.

வெற்றிலை போடுவதற்கு என்று ஒரு முறை உள்ளது. சாப்பாடு முடிந்தபின்னர் வெற்றிலையை முன்னும் பின்னும் சுத்தமான வேட்டி அல்லது சேலையில் துடைத்து, வெற்றிலையின் பின்புறம் சுண்ணாம்பு தடவி, காம்பு கிள்ளி, பாக்கையும் சேர்த்து வாயில் போட்டு மெல்ல வேண்டும்.

முதலாவதாக ஊறும் உமிழ் நீரை மூன்று முறை துப்பவேண்டும். பின்னர் சுரக்கும் உமிழ்நீரை விழுங்குவதால் நல்ல சீரணம் ஏற்படும்.

# போதை அடிமைகள்

பாகிஸ்தானில் போதை மருந்து பாவிப்போர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அத்தகையோரில் 50 சதவீதத்தினர் ஹெரோயின் என்ற போதை மருந்தையே பயன்படுத்துகின்றனர்.



பலுச்சிஸ்தான் கடற்கரைப் பகுதியில் போதை மருந்து அடிமைகளது எண்ணிக்கை அதிகமாகியுள்ளது.

இங்கு 70 வீதமான இளைஞர்கள் போதைப் பழக்கத்திற்கு இரையாகியுள்ளனர்.

வேலை இல்லாத விரக்தியில் இளைஞர்கள் போதைப் பொருட்களை நாடுகின்றனர்.

கடற்கரைப் பகுதிகளில் போதை மருந்து பாவனை அதிகமாக உள்ளதாம். இங்கு மலிவாகவும் கிடைக்கிறதாம்.

# அறுவைச் சிகிச்சை

ஸ்டார் ரி.வியில் ஒளிபரப்பப்படும் 'பேவாட்ச்' படத்தில் கவர்ச்சி காட்டி ரசிகர்களை ஜொள்ளு விட் செய்தவர் பமீலா அண்டர் சன்.

மார்பக அழகுமூலம் இவர் பிரபலமானார். இப்போது தனது மார்பகங்களை சிறிதாக்கும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளார்.



தனது தோற்றத்துக்கு அவை பொருத்தமாக இல்லை என்று கூறியே குறைத்துக் கொண்டார்.

"தற்போது முன்பைவிட நான் கவர்ச்சிகரமாக உள்ளேன்" என்று கூறும் பமீலா, எதிர்வரும் மே மாதம் புதிய பொலிவுடன் பரிசளிப்பு விழா ஒன்றில் கலந்து கொள்ளப்போகிறாராம்.



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தகவல் பெட்டி

இன்றைய விளம்பர உலகில், அழகு காட்டும் 'மொடல்' அழகிகளும் அழகர்களும் அதிகமாக இடம் பிடித்துள்ளனர். மொடல்களாக வெற்றி பெறுபவர்கள், உண்மையில் அளவான உடல் உறுப்புகளைப் பெற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

அமோகமான அழகர்களும், அழகிகளும் அறிமுகப் படுத்தினால்தான் பொருட்களின் விற்பனை விறு விறுப்பாகிறதாம்.

உலகிலேயே அதிக உயரமான மொடல் அழகி எல்லி மக்ஃபேர்சன் என்ற அவுஸ்திரேலியப் பெண்.

இவருடைய உயரம் 1.85 மீட்டர் (6 அடி 1 அங்குலம்)

## உயர அழகி



இந்த உயர அழகியின் அங்கங்களின் அளவுகள்கூட கனகச்சிதமாக - 91-61-89 செண்டிமீட்ராக (36-24-35 அங்குலம்) அமைந்திருக்கின்றன.

இதனால் இவர் 'சூப்பர் மொடல்' ஸ்தானத்தைப் பெற்று விட்டார்.

எல்லியின் முதல் திரைப்படப்பிரவேசம் 1994ல் இடம் பெற்றது. 'சைரன்ஸ்' என்ற படத்தில் தோன்றினார். வேறு படங்களிலும் இனிமேல் தோன்றுவார் என்று தெரிகிறது.

இவர் அவுஸ்திரேலியாவில் 'லிங்கரிங் லைன்ஸ்' என்ற பொது மக்களின் ஆதரவு பெற்ற வர்த்தக நிறுவனத்தை நடத்தி வருகிறார்.


இதன் மூலம் ஆண்டொன்றுக்கு 3 கோடி டொலர் வருமானம் பெறுகிறார். நம் மதிப்பில் 210கோடி ரூபாய்கள். அழகும் உயரமும் பணமாய் கொட்டுகிறது.

## அதிசய சேவல்!

கோழிக்கு இரண்டு கால்கள் என்பது வழமை. நான்கு கால்கள் இருப்பது புதுமை.

இந்தச் சேவல் கோழிக்கு நான்கு கால்கள். இது அல்பேனியாவைச் சேர்ந்தது. இதனை அதிசயச் சேவலாக ஏராளமானோர் அங்கு பார்த்து வியக்கின்றனர்.

(பட உதவி ஜி.விஜயதேவி.)



## பேச்சில் வல்லவர்கள்



மேடையில் உரை நிகழ்த்துவதானாலும் இசைக்கச்சேரி செய்வதானாலும் போதுமான பயிற்சி தேவை. பயிற்சி இல்லாமல் எச்சாதனையையும் நிலை நாட்ட முடியாது.

படத்தில் காணப்படும் ஸ்ரீவ் வுட்டமோர், (பிரிட்டன்), ,ஸ்ரீவ் பிரியோர்ஸ் (பிரிட்டன்) சீன் ஷன்னோன் (கனடா) ஆகிய மூவரும் வேகமாகப் பேசுவதில் வல்லவர்கள் என்ற சாதனை நிலை நாட்டியவர்கள்.

வுட்மோர் 56.01 நொடிகளில் 595 வார்த்தைகளைப் பேசினார். (ஒரு நிமிடத்தில் 637.4 வார்த்தைகள் என்று கணக்கிடலாம்) ஒரு நூலிலிருந்து ஒரு சில பக்கங்களை மனனம் செய்தே இத்தகைய வேகமாகப் பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

ஷன்னோன் என்பவர் ஷேக்ஸ்பியரின் 'ஹம்லட்' நாடகத்தின் சில பாகங்களைப் பாடம் பண்ணினார். இடைவிடாமல் இரவும் பகலும் வேகமாக அவற்றை பேசிப்பழகினார். 260 வார்த்தைகளைக் கொண்ட அவ்வசனங்களை 23.8 நொடிகளில் பேசினர். (ஒரு நிமிடத்தில் 655 வார்த்தைகள் என்று கணக்கிடப்பட்டது)

ஸ்ரீவ் பிரியோர்சின் சாதனை சற்று வித்தியாசமானது. பிரசித்திபெற்ற ஓர் ஒலி இசை நாடாவிலுள்ள பாடல் வரிகளை-கடைசிவரியிலிருந்து ஆரம்பம் வரையில்-தலைகீழாக 99 நிமிடம் 58.44 நொடிகளில் பேசி முடித்தார். இவ்வாறு எவ்வரிகளையும் கடைசியிலிருந்து ஆரம்பம்வரை மிக வேகமாக எவரும் பேசியதில்லை என்று உலக சாதனைப் புத்தகம் அத்தாட்சிப் படுத்துகிறது.

## இயந்திர நடிகன்



'ரோபோ' எனப்படும் இயந்திர மனிதர்கள் எதிர் காலத்தில் தம்மைப் படைத்த மனிதர்களையே ஓரம் கட்டிவிடுவார்கள் போலிருக்கிறது.

இங்கு இருப்பதும் பிரமாண்டமான இயந்திர மனிதன் தான். விஞ்ஞான மாநாடு ஒன்றில் பார்வையாளர்களை கவர்ந்தது இது. படத்திலும் இது நடித்திருக்கிறது. 'லாஸ் இன் ஸ்பேஸ்' என்ற படத்தில் நடித்திருக்கிறது.



## தொட்டால் மாற்றும்

இது ஒரு வித்தியாசமான கருவி. ஜெர்மன் மொழியில் எழுதப்பட்ட விடயங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விடும்.

எழுத்துக்கள்மீது இக் கருவியின் முனையால் தொட்டுக் கொண்டே போக, கருவியில் உள்ள சின்னத்திரையில் ஆங்கில எழுத்துக்கள் தோன்றிக் கொண்டிருக்கும்.

இந்த அதிசய கருவி ஜெர்மன் மொழியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் வகையில் மட்டுமே தற்போது தயாராகியுள்ளது. ஏனைய மொழிகளுக்கு ஏற்பவும் தயாராகுமோ தெரியவில்லை.



## தற் ~~கற்~~ காலம்

இது கற்கால பாடசாலையல்ல. தற்காலத்திய பாடசாலைதான். வன்னியில் இடம்பெயர்ந்த மக்களது பிள்ளைகளுக்கு கல்விச் செல்வம் தருவதற்கு குடிசைகளை அமைத்து பாடசாலைகளை நிறுவியுள்ளனர். தொண்டர் ஸ்தாபனங்களும் இவற்றுக்கு உதவுகின்றன.

தென்னிலங்கையில் மழை வெள்ளம் என்றால் நிவாரணப் பணிகள், நிவாரணங்கள், நிவாரணக் குழுக்கள் என்று போர்க்கால வேகத்தில் பணிகள் நடக்கின்றன. ஆனால் வன்னியிலும் சமீபத்தில் கடும் மழை. பெரும் வெள்ளம். இந்த குடில்களும் சேதமாகின. இவர்களுக்காக அரசு செய்தது என்ன? அவர்களும் இந்த நாட்டு மக்கள்தானா?!

## உலோக பட்சிணி



'கல்லைத்தான் மண்ணைத்தான் காய்சசித்தான் குடிக்கத் தான் கற்பித்தானா....' என்றொரு பழம் பாடல் இருக்கிறது. உணவு கிடைக்காத விரக்தியில் அந்நாள் புலவர் ஒருவர் பாடினார் போலும்.

கல்லையும் மண்ணையுமல்ல, கண்ணாடி. இரும்பு போன்றவற்றையும் கடித்து உண்ணாமலே விழுங்கி ஏப்பமிடுகிறார் படத்தில் காணப்படும் ஃபிரான்ஸ் நாட்டவரான மைக்கேல் லொட்டிட்டோ. 'திருவாளர் எதையும் உண்பவர்' என்ற பட்டத்தைப்யும் பெற்றுள்ளார்.

இவருடைய அன்றாட உணவில் 900 கிராம் (2 இறாத்தல்) உலோகப் பொருட்கள் கட்டாயம் தேவைப்படும்.

மைக்கேல் 1966ஆம் ஆண்டு முதல் உட்கொண்ட பொருட்களை கேட்டால் நம்பமாட்டீர்கள். பாருங்கள் பட்டியலை.

பைசிக்கிள்-18, சுப்பர் மார்க்கட்டில் பொருட்களைச் சேகரிக்கும் இரும்பு ட்ரொலிகள்-15, தொலைக்காட்சிப் பெட்டிகள்-7,கட்டில்கள்-2 வேறு பல உலோகப் பொருட்களுடன் சிறியரக 'செஸ்னா' விமானம் ஒன்றையும் புசித்திருக்கிறார்.

மேற்படி பொருட்களை மின்சார வாளால்-வாய்க்குள் போகக்கூடிய அளவில் அரிந்து ஒவ்வொன்றாக எடுத்து விழுங்கி விடுகிறார்.

விசித்திரமான இந்த உலோக உணவாளரின் முறைகளை மருத்துவர்கள் ஆராய்ந்தனர். இவை அனைத்தும் மிகச் சுலபமாக இவர் வயிற்றில் சீரணமாகிவிடுகின்றன என்று அத்தாட்சிப் படுத்தியுள்ளனர்.

சாதாரண மனிதர்களைவிட அதிக பலசாலியாக விளங்கும் மைக்கேலுக்கு 47 வயதாகிறது. இவருடைய (ஒக்டோபர் 1997 வரையிலான) 22 வருடங்களின் உணவு எட்டுத்தொன் எடையிலான உலோகப் பொருட்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இவருக்கு முட்டை, வாழைப்பழம் எதையாவது சாப்பிட்டால் தலைவலியும் வாந்தியும் வந்து விடுமாம். இத் தகவல் அனைத்தையும் உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் உறுதிப்படுத்தி உலக சாதனையாக பதிவு செய்துள்ளது.


படிப்பகம்

www.padippakam.com



# பந்து வீச்சாளருக்கு வீசிய வலை

தற்போது 'அம்மா' வேடங்களில் நடித்துவரும் ஐந்தெழுத்து நடிகை அவர். அவர் கதாநாயகியாக நடித்த போது தமிழ்ப்பட உலக மார்க்கண்டேய நடிகரை துரத்தித் துரத்தி காதலித்தார்.

நடிகரோ விலகி விலகிப் போனார். அப்படியிருந்தும் நடிகை மனம் தளரவில்லை.

அந்த நடிகருடன் சில படங்களில் வெற்றிகரமான ஜோடியாக நடித்ததுபோல, வாழ்க்கையிலும் வெற்றிகரமான ஜோடியாகலாம் என்று ஆசைப்பட்டார்.

நடிகருக்கு அப்போதே திருமணமாகியிருந்தது. உறவுக்காரப் பெண்ணை மணந்திருந்தார்.

நடிகருடன் இணைந்து நெருக்கமாக நடித்த சந்தர்ப்பங்களில் தன் ஆசையை உணர்த்துவது போலவும், நடிகரை சபலப்படுத்தக்கூடியதாகவும் சில தந்திரங்களை கையாண்டார் நடிகை.

நடிகர் அசைந்து கொடுக்கவில்லை. இறுதியில் நடிகைதான் தோற்றுப்போனார். வேறு ஒருத்தரை மணந்து கொண்டார். பெண் குழந்தையும் பிறந்தது.

அந்த மணவாழ்க்கையும் நீடிக்கவில்லை. நடிகை என்பதால் மோகம் கொண்டு மணந்தவர், மோகம் முடிந்ததும் சந்தேகம் கொள்ள ஆரம்பித்தார்.

அதன்பின்னர் மறுபடி நடிக்க ஆரம்பித்தார் நடிகை. 'அம்மா' 'அண்ணி','அக்கா' வேடங்களே கிடைத்தன.

முன்னாள் கதாநாயகிகள்மீது அதிக ஆசை கொண்ட உயரமான நடிகர் நடிகைக்காக சிபாரிசு செய்தார்.

அபிமானத்தோடு அவர் உதவுவதாக நினைத்த நடிகைக்கு ஒரு நாள் அதிர்ச்சி காத்திருந்தது.

தன் வீட்டுக்கு வருமாறு அழைத்திருந்தார். அன்று அவரது மனைவி, பிள்ளைகள் வீட்டில் இல்லை. வெளியூர் போயிருந்தார்கள்.

நடிகைக்கு அவரது நோக்கம் புரிந்துவிட்டது. நைசாக பேசி சமாளிக்கப் பார்த்தார்.

"உங்கள் அழைப்புக்கு இளம் நடிகைகளே ஓடிவருவார்களே, என்னை ஏன் அழைத்தீர்கள்?" என்று கேட்டிருக்கிறார்.

அப்போதுதான் நடிகர் உண்மையை கூறினார்: அந்தக் காலத்தில் மார்க்கண்டேய நடிகருடன் நடிகை சேர்ந்து நடித்த படங்களை பார்த்து ரசித்து ஜொள்ளு விட்டிருக்கிறார். அவரது தூக்கத்தை கெடுத்த நடிகைகளில் அவரும் ஒருவர்.

அதனால்தான் அன்றைய ஏக்கத்தை இன்று தீர்க்க அழைத்திருக்கிறார். வேறு வழியின்றி நடிகையும் அவரது ஆசைக்கு இணங்கினார்.

## அதே அனுபவம்

நடிகரது பலவீனத்தை தனது தோழியான இன்னொரு நடிகையிடம் கூறியிருக்கிறார் ஐந்தெழுத்து நடிகை. அப்போதுதான் அந்த நடிகையும் குறிப்பிட்ட நடிகரின் படம் ஒன்றில் 'அண்ணி'யாக நடித்தபோது, அதே அனுபவத்தை சந்தித்துள்ளார் என்பது தெரிந்தது.

இளம் கதாநாயகிகளைவிட அந்த நடிகருக்கு முன்னாள் நாயகிகள்மீதுதான் ஆசை அதிகம் என்பது 'கோடம்பாக்கம்' எங்கும் பரகசியமான விஷயம்.

★★

## வீரரின் காதலி

முன்னாள் நாட்டியப் பேரொளி நடிகையின் உறவுக்கார நடிகை அவர்.

இந்திய அணியின் பந்துவீச்சாளர் ஒருவர்மீது அவர் ஆசைப்பட்டார். தனது ஆசையை அவரிடமும் வெளியிட்டார். தானாக தேடி வரும்போது தட்டிவிட விரும்பவில்லை அந்த வீரர். அவரும் நடிகையை இரகசியமாகச் சந்தித்து பழகினார்.

விளையாட்டு வீரர்கள் என்றாலே நடிகைகளுக்கு குஷிதான். அந்த நடிகையும் அந்த வீரரை உடும்புப்பிடியாக பிடித்துக்கொண்டார்.

தனது சினிமா உலக வாழ்க்கையில் பல்வேறுவிதமான அனுபவங்களை சந்தித்தபோதும், அந்த வீரர் மூலம் ஏற்பட்ட அனுபவங்கள் நடிகையை அவர்மீது பைத்தியமாக்கி விட்டன.

அதனால் அந்த வீரரையே திருமணம் செய்ய ஆசைப்பட்டார். அவருக்கு அப்படியொரு ஆசை இருப்பது தெரிந்ததும் பந்துவீச்சாளர் பதறிப்போனார்.

அவர் இதனை எதிர்பார்க்கவில்லை. தனது வீட்டில் தெரிந்தால் பிரளயம் உருவாகும் என்று பயந்துபோனார். வீட்டுக்கு அடங்கிய பிள்ளை அவர்.

அவர் விலகிச் செல்ல ஆரம்பித்ததும் தனக்கும் அவருக்கும் இடையே காதல் என்று செய்திகள் வெளிவருவதற்கு நடிகையே ஏற்பாடு செய்தார்.

செய்திகள் வெளியானதும் கோபமுற்ற வீரர், தனக்கும் நடிகைக்கும் தொடர்பே கிடையாது. அவரை சந்தித்ததுகூட கிடையாது என்று ஒரே போடாகப் போட்டு, நடிகையை கிளீன்போல்ட்டாக்கினார்.

# கத்தரித்த ரோஜா

'சின்னராஜா' படம் வெளியாகி சுமாராக ஓடி முடிந்துவிட்டது. ஆனால் அப்படத்தில் நடித்த பிரியாராமனுக்கும் ரோஜாவுக்கும் இடையேயான சச்சரவுகள் அடங்கவில்லை.

படத்தில் பிரியாராமன் நடித்த பாடல் காட்சியும், அசத்தலான கவர்ச்சிக் காட்சிகளும் நீக்கப்பட்டனவாம்.

அதற்கு காரணம் ரோஜாதானாம். கார்த்திக்கிடம் தனக்குள்ள நெருக்கத்தை பயன்படுத்தி அக் காட்சிகளை நீக்க வைத்தாராம் ரோஜா.

படத்தில் ரோஜாவும் தாராளமாக கவர்ச்சி காட்டியிருந்தார். பிரியாராமனின் கவர்ச்சி தன்னைவிட தூக்கலாக இருப்பதாக நினைத்துதான் கத்தரிக்க வைத்தாராம்.

# ஒரே ஒப்பனை

'பெரியண்ணா' படத்தில் வயதானவராக முறுக்கு மீசையுடன் தோன்றுகிறார் விஜயகாந்த். அடுத்து வரப்போகும் விக்ரமனின் 'வானத்தைப் போல' படத்திலும் வயதானவராகவே தோன்றுகிறார். கிட்டத்தட்ட ஒரேமாதிரியான ஒப்பனை.

'கண்ணுபடப்போகுதய்யா' படத்திலும் இதேபோன்ற ஒப்பனைதான். அடுத்தடுத்து ஒரேவிதமான ஒப்பனைகளில் தோன்றுவது சலிப்பைக் கொடுக்கும் என்பதை விஜயகாந்த் கவனத்தில் கொள்ளவில்லையா?

முகப்பில்
பிரபு
ரோஜா
படம்: திருநெல்வேலி
ரோஹித்

# உலக சாதனைப் படம் தயார்
# முன்னணி நடிக நடிகையர் நழுவல்

உலக சாதனைப் படமாக 'சுயம்வரம்' படத்தை எடுக்கத் திட்டமிட்டது தெரிந்த சங்கதி. பின்னர் இடையூறுகள் ஏற்பட்டு திட்டத்தை கைவிடும் நிலை ஏற்பட்டது. ஆனாலும் படத் தயாரிப்பாளர் கிரிதாரிலாலின் அயராத முயற்சியால் படப்பிடிப்பு ஒரே நாளில் நடந்து முடிந்துள்ளது.

ரஜினி, கமல், பிரசாந்த், விஜய், சரத்குமார், விஜயகாந்த், முரளி ஆகியோர் நடிக்கவில்லை. அதனால் முன்னணி நாயகர்கள் அனைவரையும் ஒரே படத்தில் நடிக்க வைக்கும் எண்ணம் முழுதாக நிறைவேறவில்லை.

சத்யராஜ், பிரபு, பார்த்திபன், கார்த்திக், பிரபுதேவா, அப்பாஸ், பாண்டியராஜன், ஆகியோரும் விக்னேஷ், வினீத் ஆகியோர் உட்பட 14 கதாநாயகர்களும், 12 கதாநாயகிகளும், 10 நகைச்சுவை நடிகர்களும் நடித்துள்ளனர். ஒரே நாளில் வெவ்வேறு இடங்களில் படப்பிடிப்பு நடந்தது. 15 இயக்குநர்கள் இயக்கினார்கள்.

குஷ்பு, ரோஜா, சுவலட்சுமி, மகேஸ்வரி போன்றோரே முக்கிய நடிகைகள். மீனா, சிம்ரான், ரம்யா கிருஷ்ணன் போன்ற ஏனைய முன்னணி நாயகிகள் நடிக்க மறுத்துவிட்டனர்.

எப்படி இருப்பினும் ஒரே நாளில் படப்பிடிப்பை முடித்து தற்போது டப்பிங், பின்னணி இசை போன்ற பணிகள் நடந்து வருகின்றன. படம் விரைவில் வெளிவரும்.



நெப்போலியன்-சுவாதி
படம்: சிவன்

# காதோடு சொல்லுகிறோம்

ஃபயர் படம் வந்தாலும் வந்தது, தமிழ்ப் படவுலக ஃபயர் செய்திகள் ஒவ்வொன்றாக வெளியாகிவருகின்றன. குடும்ப தொலைக்காட்சி தொடரில் நடிக்கும் பெண் ஒருவருக்கும் சினிமா நடன ஆசிரியையாக இருக்கும் பெண்ணுக்கும் இடையே ஃபயராம். அந்த நடன ஆசிரியை இலங்கைக்கும் வந்து போனவராம்.

சூப்பரின் படம் வெளியானதால் அடுத்த படம் பற்றி வழக்கம் போல ஊகங்கள் கிளம்பிவிட்டன. பல முன்னணி நடிகைகள் தூதுவிடவும் ஆரம்பித்துவிட்டனர். சூப்பரின் படத்தின் அடுத்த இயக்குநர் யார் என்பதை அறிந்தால், அவரை மடக்கிவிடலாம் என்பதால் அந்த ஆராய்ச்சியும் பலமாக நடக்கிறதாம்.

'கவுஸ்' நடிகைமீது அரசியல்வாதி ஒருவர் கண்வைத்திருந்தார். நடிகை மறுத்துவிட்டார். எத்தனையோ வழிகளில் முயன்றும் 'கவுஸ்' பணியவில்லை. அதனால் தனது அதிகார பலத்தை பயன்படுத்தி தொல்லை கொடுக்க ஆரம்பித்துள்ளாராம்.

சூப்பர் நட்சத்திரத்தின் தற்போதைய படத்தில் அவருக்கு தங்கையாக நடித்திருக்கும் நடிகை இதுவரை எங்கே போயிருந்தார்? சாமியாரிணியாக மாறி எங்கெங்கோ அலைந்தார். இவரை இயக்குநர்தான் கண்டுபிடித்து மறுபடி நடிக்க வைத்ததுடன், நட்பையும் பூண்டிருக்கிறாராம்.

## சிம்ரான் மகிழ்ச்சி

'என்றென்றும் காதல்' படம் தோல்வி கண்டதில் சிம்ரானுக்கு சந்தோசம். அப்படம் வெற்றி பெற்றால் விஜய்-ரம்பா ஜோடி வெற்றிப்பட ஜோடியாக தொடரும்.

'துள்ளாத மனமும் துள்ளும்' படம் வெற்றிகரமாக ஓடியிருப்பதால் விஜய்-சிம்ரான் ஜோடிதான் வெற்றிப்பட ஜோடியாக இருக்கிறது. அதனை ரம்பா கெடுத்து விடுவாரோ என்றுதான் சிம்ரான் பயந்தார்.

## அடுத்தது எதுவப்பா?

'படையப்பா'வை அடுத்து ரஜினி நடிக்கும் படம் எது? என்று கேள்விகள் புறப்பட்டுவிட்டன.

ரஜினி, அமிதாப் கூட்டணியில் புதிய படம் உருவாகப்போவதாக செய்தி ஒன்று உலாவுகிறது.

ரஜினி ஜோடியாக ஷாலினி நடிக்கப்போவதாகவும், அப்படத்திற்குரிய கதையை இரண்டே இரண்டு வரிகளில் ரஜினி நேராக ஷாலினியிடமும், அவரது தந்தையிடமும் கூறியுள்ளதாகவும் இன்னொரு செய்தி கூறுகிறது.

'படையப்பா' படத்தின் கதையும் ரஜினியின் மூளையில் தோன்றிய கதைதான். 'இரண்டுவரிகளில் ரஜினி கூறிய கதையைத்தான் விரிவுபடுத்தினோம்' என்று கே.எஸ்.ரவிக்குமாரே கூறியிருந்தார்.



ரஜினி
படம்: படையப்பா

## சினிமா விமர்சனம்
# வந்ததுமே ஒரு கொலை

படம் : பெரியண்ணா
இயக்கம் : எஸ்.ஏ.சந்திரசேகரன்
நடிப்பு : விஜயகாந்த், சூர்யா, மானஸா, ஆனந்தராஜ், ஆர்.சுந்தர்ராஜன், மனோரமா, தேவன்.
இசை : பரணி.

பெரியண்ணா வீடியோ மற்றும் வி.சி.டி. கடந்தவாரம் தமிழ்நாட்டிலும் வெளியாகியுள்ளன. திருட்டுத்தனமாக பதிந்து உலகெங்கும் விற்பனையாகியுள்ளன.

விஜயகாந்த்தை கதாநாயகனாக தூக்கி நிறுத்தியவர் எஸ்.ஏ.சந்திரசேகரன். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அவர் விஜயகாந்தை வைத்து இயக்கியுள்ள படம் இது.

படத்தின் ஆரம்பமே அடி தடி கொலையில் ஆரம்பிக்கிறது. சூர்யா எடுத்து கொலை செய் படங்களைவிட இதில் சூர்ய தெரிகிறது. சூர்யாவுக்காக பாடல்களும் துள்ளவைக்க

மானஸா என்னும் பு நாயகி. கவர்ச்சிப் பிரதேசக் விளம்பரப்படுத்துகிறார். யாடி. இளசுகளின் மனதை

படம் ஆரம்பமாகி பல வரே விஜயகாந்த் வரு அட்டகாசம். வந்ததும் அஜய்ரத்னம் காலி! வி அமர்க்களம். படு கம்பீர மாற்றிப் பேசியிருக்கிறார் மந்திரியின் மகனுக்கும் சூர்யாவுக்கும் புகலிடம் காந்த். அவரது அந்த நாள் படுகிறது.

50 ஆண்டுகளுக்கு மு மைப் பெண் படத்

www.padippakam.com

## கினியின் திருமணம் ரிஷியஸில் தேனிலவு

மான ரோஜாவே' படத்தின் மூலம் த அறிமுகமானவர் மோகினி.

ங்களில் காதலர்களால் துரத்தப்பட்டும், ளச் சுற்றி பாட்டுப்பாடியும் காதலியாக மோகினிக்கு, உண்மையான காதலர் துவிட்டார்.

தலர் பெயர் பரத். ஆறடி உயரமான ன இளைஞர். நண்பர் ஒருவர் வீட்டில் நிகழ்ந்தது. பின்னர் ஒருவரை ஒருவர் தால் என்னவென்று சிந்திப்பு மலர்ந்தது. து திருமணத்தில் முடிந்து தித்திப்பாக றது.

ஏப்ரல் பதினேழாம் திகதி திருமணம் நடந்து விட்டது. பெரிய நிறுவனம் ஒன்றின் நிர்வாகியாக கடமை யாற்றுகிறார் பரத்.

திருமணம் முடிந்ததும் தேனிலவுக்கு மொரிஷியஸ் நாட்டுக்கு பறந்துள்ளனர்.

'அங்கு பொல்லாத வெய்யிலாக இருக்குமே என்று கேட்ட நிருபர் ஒருவரிடம், "அது ரூமை விட்டு வெளியே போய் சுத்தறவங்களுக்குத்தானே" என்று ஒரே குரலில் கூறினார்களாம்.

## புது நண்பிகள்

அஜித்குமார் ஹீராவை பிரிந்த பின்னரும் சந்தோசமாகத்தான் இருக்கிறார். 'உன்னைத் தேடி' நல்ல பெயரைத் தேடித் தந்திருக்கிறது.

ரோஜா, சிம்ரான், மாளவிகா, மீனா என்று புது நண்பிகள் பட்டாளம் கிடைத்திருக்கிறது.

## சிந்தனை நடிகை

'அவ்வளவு சுலபத்தில் திருப்தி அடைபவள் அல்ல நான்' என்று கூறுகிறார் கஸ்தூரி. அதாவது நடிகை என்ற குறுகிய வட்டத்திற்கு அப்பால், சிந்தனையும், செயலூக்கமும் தன்னிடம் இருப்பதாகக் கூறுகிறார்.

## மினி சினி

➾ கலைப்புலி தாணு தயாரிக்க ராஜீவ் மேனன் இயக்கும் 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' படத்தின் பெயரை மாற்றப்போவதாகச் சொல்கிறார்கள்.

➾ கஸ்தூரி ராஜா அடுத்து இயக்கும் 'ஈரக் காத்து' படத்தின் கதாநாயகியாக நடிக்க தேவயாணியை ஒப்பந்தம் செய்துள்ளார்.

➾ சிரஞ்சீவி-ரம்பா தெலுங்கில் நடித்து தமிழில் மொழி மாற்றப்படும் 'டைகர்' படத்தின் கதையும் மம்முட்டி நடித்த 'ஹிட்லர்' படத்தின் கதையும் ஒன்றாகும்.

➾ மலையாளப்படங்களில் வில்லனாக நடித்துள்ள நெப்போலியன், முதன் முறையாக 'கேங்' என்ற மலையாளப் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

➾ விஜய் கதாநாயகனாக நடிக்க, அவரது தாயார் தயாரிக்கும் 'நெஞ்சினிலே' படத்தில் விஜய் ஜோடியாக முதலில் நடிக்க இருந்தவர் ரம்பா.

➾ கார்த்திக் நடித்த 'கோபுர வாசலிலே' என்ற ஒரேயொரு தமிழ்ப் படத்தை இயக்கிய பிரபல மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் மீண்டும் தமிழ்ப்படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

➾ 'கறுப்பு ரோஜா' படத்திற்குப் பிறகு ஆபாவாணன் தயாரிக்கும் படத்திற்கு 'அடிமைகள்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கிறார்.


➾ கன்னடத்தில் தயாராகும் படமொன்றுக்கு 'சதாம் ஹுஸைன்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இப்படத்தில் அம்பிகா முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

➾ 'என்றென்றும் காதல்' படத்தை இயக்கிய மனோஜ் பட்நாகர் அடுத்து இயக்கும் படம் 'காதல் தென்றல்'. 'ஹலோ' படத்தில் நடிக்கும் பிரசாந்த்-ப்ரீத்தி ஜோடியே இப் படத்திலும் நடிக்கிறது.

➾ 'ஹேராம்' படத்தை இயக்கி நடிக்கும் கமல் முதன் முறையாக இப் படத்திற்காக பாடல் ஒன்றை இயற்றியுள்ளார். இப்பாடலை ஹரிஹரனும், கவிதா கிருஷ்ண மூர்த்தியும் பாடுகிறார்கள்.




சரத்குமார்-விஜயசாந்தி
படம்: ராஜஸ்தான்



விஜயகாந்த்
படம்: வானத்தைப் போல

## மறுத்தது ஏன்?

'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' படத்தில் நடிப்பதற்கு பிரசாந்த் முதலில் ஒப்பந்தமானார். பின்னர் நீக்கப்பட்டார்.

ஐஸ்வர்யாராயை தனக்கு ஜோடியாக போட்டால்தான் நடிப்பேன் என்று பிரசாந்த் கூறியதாகவும், அதற்கு தயாரிப்பாளர் தாணு மறுத்ததாகவும் செய்திகள் வெளியாகின.

அது உண்மைதான் என்று பிரசாந்த்தும் உறுதிப்படுத்தியுள்ளார். 'தபுவை எனக்கு ஜோடியாக போட இருந்தனர். அவர் என்னுடன் நடித்தால் வயதானவராக தெரிவார். அதுதான் ஐஸ்வர்யாராயை போடச் சொன்னேன்" என்கிறார் பிரசாந்த்.

உலக சாதனைப் படமான 'சுயம்வரம்' படத்திலும் பிரசாந்த்தை நடிக்க கேட்டனர். ஷங்கர் இயக்கினால் நடிப்பேன் என்று அவர் கூறியதாக தயாரிப்பாளர் பேட்டியளித்துள்ளார். இதற்கு பிரசாந்த் என்ன பதில் கூறப்போகிறாரோ?

## நடனப்படம்

'நினைவிருக் ம்வரை' படத்தில் பிரபு தேவாவின் டனங்களுக்கு அதிக இடமளிக்கப் படவில்லை. படத் தின் தோல்விக்கு அதுவும் ஒரு காரணமோ என்று நினைக்கிறார் பிரபு தேவா. சில நடனப்

பாடல்கள் இருந்தாலும் அவை பிரபு தேவா ரசிகர்களுக்கு தீனிபோடத்தக்கதாக இருக்கவில்லை.

அதனால் அடுத்த படமான 'டைம்' படத்தில் நடனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## தடை

பிரகாஷ்ராஜ், செண்பகா நடித்த படம் 'அனந்தகிருஷ்ணா'. படப்பிடிப்பு முடிந்தும் கூட பணப் பிரச்சனையால் படம் வெளிவருவது தாமதமாகிறது.

இதனால் பண உதவிசெய்பவர்களிடம் செண்பகாவையே தூதுவிட முடிவு செய்தாராம் தயாரிப்பாளர். பிரகாஷ் ராஜ் தலையிட்டு தடுத்துவிட்டாராம்.

நவனை புரட்டி ார். முன்னைய டம் முன்னேற்றம் விஜய் பாடியுள்ள றன.


முகம்தான் கதா ளை தாராளமாக யாவுடன் துள்ளி ள்ளிப்போகிறார். காட்சிகளின் பின் ார். வருகையே ஒரு கொலை. காந்த் ஒப்பனை தனது குரலையும்

வருடன் ஓடிவரும் ாடுக்கிறார் விஜய ஞாபகம் சொல்லப்

பட்ட கதை. அடி ல் எம்.ஜி.ஆர்.

அணிந்ததுபோன்ற உடையுடன் விஜயகாந்த். ஜாக்கெட் போடாத மீனா. அவர்களது வளர்ப்பு மகள் என்று மலரும் நினைவுகள் ஓடுகின்றன. கொத்தடிமைகளாக இருக்கும் மக்களுக்கு விடுதலை வாங்கிகொடுக்கிறார் விஜயகாந்த். மலரும் நினைவுகள் பழைய பட பாணியில் இருந்தாலும் ஓரளவு ரசிக்க முடிகிறது.

ஆயுள் தண்டனைக் கைதியான சூர்யாவுக்கும், மானஸாவுக்கும் எதிர்ப்புக் களைமீறி விஜயகாந்த் திருமணம் செய்து வைப்பதுடன், மந்திரியையும் முந்திரியாய் நசித்து கொன்றுவிடுவதோடு படம் முடிவடைகிறது. பிரமாதம் என்றில்லா விட்டாலும் பார்க்கலாம். சலிப்பூட்டாது.



மனோஜ்ராஜ்-பிரியங்கா
படம்: புண்ணியவதி

## ரம்பாவின் புது வீடு
## நடிகரின் அர்ச்சனை

ரம்பாவின் அண்ணனின் கல்யாண வரவேற்பும் புதுமனை புகு விழாவும் சமீபத்தில் நடந்தது. ரம்பா வீட்டு விசேஷம் என்றால் அழைக்கப்பட்டவர்கள் ஆஜராகாமல் இருப்பார்களா? செம கூட்டம்.

விழாவுக்கு வந்திருந்தவர்கள் கார்களையும், மோட்டார் சைக்கிள்களையும் தெருவை அடைத்து நிறுத்தி வைத்திருந்தனர். இதனால் ரம்பா வீட்டின் அயலவர்கள் ஒரே அர்ச்சனை. அதனை ரம்பா வீட்டார் அலட்சியம் செய்துவிட்டனர்.

விழாவுக்கு வந்திருந்த குணசித்திர நடிகர் ஒருவர், ரம்பாவின் காதிலும் சங்கவி காதிலும் விழக்கூடியவாறு கூறிய கருத்துதான் அவர்கள் இருவரையும் சங்கடத்தில் நெளியவைத்து விட்டது.

"சினிமாவில் தொடையைக் காட்டி விட்டு மாடிமேல மாடி வைச்சு பங்களாக்களை கட்டிடறாளுக. நாம பொய்யாக சிரிப்பு சிரித்து பிழைக்க வேண்டிக் கிடக்கு" என்றுதான் வெகும்பினாராம்.

www.padippakam.com

## வறுமை

பிரபஞ்ச மானுடத்தின்
தறிபட்ட விதியின்கால்
–o–
பித்தச் சுரப்பினுள்ளே
ஈர்ந்துகசியும் மரணச்சாயம்!
–o–
சோகங்களின் இரகசியத் தரிப்பிடம்
குழந்தை நெஞ்சிலும் சலனமாய் தெரியும்
பசிவேட்கையின் நீரும் கண்ணீர்!
–o–
ஓ! மானுடத்தால் வறுமையை
வெல்ல முடியவில்லையா? வெறுச்சிமேட்டில்
விழுந்து முளைக்கும் சோலைமரமாய்
வசந்தத்தை எழுப்புங்கள்–கூதல்
நினைவின் கொடுமையை புதையுங்கள்.
–o–
மனங்களே மண்தூவும் வெறுமையாய்
தெரிந்தால் உடலும் உள்ளமும் வரைந்து
வைத்த கோடுகளும் கூடுவிட்டுத் தாவ
நினைக்கும்
உயிர் பிரியும் சித்திரங்களோ?
–o–
ஏழைகளின் கனவுகளை நாம் நேசிக்கின்றோம்
அதனால்தான் அடுத்தவரின் மேனியில்
நாம் கீறல்கள் ஏற்படாது வரம்புகளில்
நடக்கின்றோம்.
–o–
வறுமைக்கு எதிராய் இனிநாம்
கதிர் வளர்ப்போம்–வெந்துசாகும்
சப்பிகளாய் ஆகாத புவியை கீறிக்
கிழித்து முளைவிடுகின்ற கதிர்களை
நாம் வளர்ப்போம்.
–o–
வறுமைச் சாத்தானின் கூரைக்கிடையே
ஒளிக்கீற்றைக் காணுங்கள்.
–o–
நர்த்தனமாடுகின்ற ஏழையின் தரைமீது
வாடையின் கையாய் எழுந்துசெல்வோம்.
–o–
வறுமையை தூக்கி எறிய
எறும்புகளாய் மாறுங்கள்
வெற்றி எங்கள் காலடியில்!

உவைஸ்கனி- விடத்தல்தீவு.

## ஞாபகம் இருக்கிறதா?

தோழி!
சோகத்தில் உடைந்து
கண்ணீரில் மூழ்கிய போதும்
வேதனையில் தவித்து
துன்பத்தில் வெந்தபோதும்
இந்தச் சோலை
பாலையான போதும்
அந்த நாட்களில் .
இரவில்
நட்சத்திரங்களோடு பேசி
நிலாவில்
பூக்களோடு சிரித்து
மாலையில்
தென்றலோடு கைகோர்த்து
நடந்ததெல்லாம்
பாலையிலும் ஒரு
குளிருற்றாய் எனக்குள்.
உனக்கது
ஞாபகம் இருக்கிறதா?

சிவா- மன்னார்.

## அந்தநாள் ஞாபகம்



இங்கு இரண்டு புலிகள் இருக்கின்றன. ஒருவர் நடிப்புப் புலி சிவாஜி கணேசன். மற்றது காட்டுப் புலி. நடிப்புலக இமயத்தின் அன்றைய இளமைத் தோற்றம்.

## ஏன் இப்படிச் செய்தாய்?

இதயத்தில் நீ
இருந்த இடத்தை
ஏனிப்படி
கிள்ளியெடுத்துப் போனாய்...?
வலி தெரியாது போக உன்
நினைவுகளை மீட்ட அவை
முள்ளாக தைத்து
இரத்தத்தை வடிக்கின்றன!
**
கள்ளிருக்கும் காம்பிரண்டும்
கனத்துக் கிடக்க
கண்டதையும் பருகி ஏன் கலங்குகிறாய்?
அங்கிருந்த வண்ணம் அணைக்கின்றாய்
மறுக்கின்றேன்.
இழுக்கின்றாய் சிலிர்க்கின்றேன்
இரக்கின்றாய் இரங்குகின்றேன்
உனக்காய் துகில் கலைந்து
நேரிலல்ல மானசீகமாய்!
**
உச்சி முடியில்
உதிர்ந்து விழும் முடிக்
கற்றையிலொன்றானாலும்
வெட்டிக் கழிக்கும்
நெடுவிரல் நகமானாலும்
சொந்தம் எனக்கே!
எவருக்கும் கொடுக்காதே
நீ இருந்த இடம் எப்போதும்
காலியாக கிடக்கின்றது!

ஜெ.சூரியன்.

## கல்லுக்கும் காதல்

கல்லில் விழுந்த
சிறு ஆலம் விதை
முளைத்து
பாறையையே
பிளக்குமென
எதிர் பார்க்கவில்லை!
•••
உன்னிடமிருந்த
தொடர்பு முற்றாகவே
அற்றுப் போனது.
உன் வேருக்கு
மண்ணுடன்
உறவென்பதால்...!
•••
உன்னிலிருந்து விழும்
கடிதப் பழங்களும்
நின்று போனது.
கல்லுடன்
பகையென்பதாலா?
•••
இந்தக் கல்லுக்கும்
ஈரமுள்ள தென்பது
ஒரு நாள்
தெரியவரும்.
உன் விதைகள்
என்னில்
மீண்டும்
முளைக்கும் போது!

மா. யோகராஜன்-
மட்டக்களப்பு.

## இந்தவாரம் உங்கள் பலன்

**02.05.99 முதல் 08.05.99வரை**

ஜோதிடர் 'கானா'

**மேடம்:**
எண்ணிய கருமங்கள் தாமதமானாலும் ஈடேறும். உடல் நலம் சற்றுப் பாதிப்படையும். மனக்கிலேசம், சோம்பல் முதலியன ஏற்படும். நிதானத்துடன் கருமம் ஆற்றுதல் நன்மை தரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண் : 9.
அதிஷ்ட திகதிகள் : 7, 11.

**இடபம்:**
இடை நிறுத்தப்பட்ட திருமணப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கும்- நன்மையில் முடியும். காதலர்கள் ஒன்று சேருவர். வாகனம் சேர வாய்ப்புண்டு. சனி, சுரம் சிலரை வாட்டக்கூடும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 7, 16.

**மிதுனம்:**
தொழில் விருத்தி, பண வருவாய் சிறப்படையும். தூர இடத்திலிருந்து எதிர்பார்த்த தகவல் கிட்டும்; ஆனால் எதிர்பார்த்தபடி முடிவு இருக்காது. சிநேகிதர்கள் ஒன்று சேருவார்கள். வார முற்பகுதியில் மனக்குழப்பம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : சந்தன நிறம்; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 12, 17.

**கடகம்:**
விவசாயிகளுக்குச் சோதனையான காலம். கடும் முயற்சி பலன் தரும். குடும்பத்தவரும் நண்பர்களும் பக்கபலமாக இருப்பர். வயதான நெருங்கிய உறவினரின் உடல் நிலை கவலைதரும். மனத்திடம் அவசியம். வார நடுப்பகுதியில் எதிர்பார்த்த நல்ல தகவல் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இள நீலம்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள் : 19, 21.

**சிம்மம்:**
சிக்கல்கள் மறையும். பிள்ளைகளின் நடவடிக்கை கவலை தரும். தொழில் பின்னடைவுகளும் வருமானம் குறைதலும் காணப்படும். விடா முயற்சியுடன் உழைத்தால் நல்ல பலன்கள் கிடைக்க இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 7.
அதிஷ்ட திகதிகள் : 17, 19.

**கன்னி:**
ஆண்களுக்கு அரசியல் ஈடுபாடும், பெண்களுக்கு பொது நிகழ்ச்சிகளில் நாட்டமும் ஏற்படும். காதலர்கள் உறவு கைகூடும். வார முடிவில் கவலைகள் சோர்வு தரும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண் : 8.
அதிஷ்ட திகதிகள் : 9, 11.

**துலாம்:**
வலுச்சண்டை வழியை மறிக்கும். ஒதுங்கி நடப்பதே நன்மைதரும். யாத்திரை செல்ல நேரிடும். கல்வி, கலை சிறப்படையும். வாயு உள்ள பதார்த்தங்கள் தொல்லை தரும். குடும்பத்தில் சில்லறைத் தகராறுகள் தலைதூக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை; எண் : 5.
அதிஷ்ட திகதிகள் : 20, 27.

**விருட்சிகம்:**
முயற்சிகள் கைகூடும். எதிர்பாராத இடத்திலிருந்து தொடர்பு கிட்டும். நீண்டகால ஆசைகள் நிறைவேறும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் சிலருக்கு ஏற்படும். பழைய வழக்குகளில் சாதகமான தீர்புக்கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்; 7.
அதிஷ்ட திகதிகள் : 23, 27.

**தனுசு:**
வருமானம் சீரடையும். கடன்கள் குறையலாம். வாகன பலன் ஏற்படலாம். கண்களில் பாதிப்பு ஏற்படலாம். உடல் நிலை தேறும். காதலுறவு கனிவுதரும். கணவன் மனைவியரிடத்தில் சிறு சச்சரவுக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண் : 3.
அதிஷ்ட திகதிகள் : 23, 27.

**மகரம்:**
குடும்பத் தகராறு தலைதூக்கும். மனச்சோர்வு, பணவரவு குன்றும். பெரியோர் சகவாசம் ஆறுதல் தரும். தெய்வ தரிசனம் சாந்தி தரும். வார இறுதியில் மருத்துவரை நாடவேண்டிவரும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 05, 15.

**கும்பம்:**
தெய்வத் தல யாத்திரை; பண வரவு; சுறுசுறுப்பான நிலை; குடும்ப ஒன்று சேர்க்கை ஆகியவற்றுக்கு இடமுண்டு. உறவினர் உடல் நிலை கவலை தரும். பிள்ளைகளின் கல்வி, தொழில் ஆகியவற்றில் கவனம் செலுத்தவேண்டிவரும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: செம்மஞ்சள்; எண் : 3.
அதிஷ்ட திகதிகள்: 3, 17.

**மீனம்:**
விருந்துபசார விழாக்கள் மகிழ்ச்சி தரும். தொழில் மந்தம்-எனவே பண வருவாய் குறையும். பெரியோர் நண்பர்கள் உதவி தக்க சமயத்தில் கிட்டும். வார இறுதியில் வயிற்றில் வாயுச்சிக்கலுக்கு இடமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சாமபல்; எண்: 16.
அதிஷ்ட திகதிகள் : 18, 23.

## அடிமைச்சங்கிலிகள் தெறிக்கட்டும்



மேதினத்தை இப்போதெல்லாம் சில கட்சிகள் கேளிக்கை விழாவாக்கிவிட்டன. மேதினம் என்பது உழைக்கும் மக்களும், அடக்கப்படும் இனங்களும் தங்கள் விடுதலைக்காக, தங்கள் போராட்டம் வெல்வதற்காக சூளுரைக்கும் திருநாள். தங்கள் சக்திகளை மேலும் உத்வேகப்படுத்தும் உன்னத நாள்.

"நம்மைப் பிணைத்துள்ள அடிமைச் சங்கிலிகளை உடைத்தெறிவோம்!" என்று உறுதி ஏற்கும் நாள். இத்திருநாளை போராட்டங்களை எதிர்ப்போரும், அடக்குவோரும், உழைக்கும் மக்களின் எதிரிகளும் கொண்டாட ஆரம்பித்தமை இத்தினத்தையே கொச்சைப்படுத்துவது போலாகிவிட்டது!

## ஹலோ டாக்டர்!

**கேள்வி: சிலருக்கு சில நேரங்களில் கை, கால்கள் நடுங்கிக் கொண்டே இருக்கின்றன, ஏன்?**

பதில்: கை, கால்கள் நடுக்கத்திற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் மூளை மற்றும் உளவியல் காரணங்கள் குறிப்பிடத் தகுந்தவை. மூளையில் கொரியா (Chorea), பார்க்கின்சன் நோய்



(Parkinsonisan) போன்றவை பாதிக்கும் போது கைகளும் கால்களும் நடுங்கும்.

பயம், பதற்றம், பரபரப்பு, கோபம், வேகம், மனக்கவலை, ஹிஸ்டீரியா போன்ற மனம் தொடர்பான பாதிப்புக்களாலும் அவ்வாறு ஏற்படலாம். தைரொக்ஸின் மிகைப்பு நோய் (Thyrotoxicosis) நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கல்லீரல் நோய் இவற்றாலும் நரம்புகள் பலவீனமடைந்து கை, கால்களில் நடுக்கம் ஏற்படலாம்.

மது அருந்துவது, புகை பிடிப்பது, போதை மாத்திரைகள் உட்கொள்வது போன்ற தீய பழக்க வழக்கங்களும் கை, கால்கள் நடுக்கத்திற்கு வழி வகுக்கும்.

சில சமயங்களில் கருத்தடை மாத்திரைகள், ஆஸ்த்துமாவிற்கு உட்கொள்ளும் சிலவகை மாத்திரைகள். சீத பேதிக்குக் கொடுக்கப்படும் மாத்திரைகள் ஆகியவற்றின் பக்கவிளைவாக கைகளும், கால்களும் தற்காலிகமாக நடுங்கும்.

## நில்-கவனி-முன்னேறு

மாட்டுப் பொங்கல் கொண்டாடும் மனிதன் ஏன் ஆட்டுப் பொங்கல் கொண்டாடுவதில்லை?

ஆடு, உழைப்பதில்லை. தனக்கு இரை தேடிக்கொள்வது மட்டும் உழைப்பு ஆகாது. ஆடு மனிதனுக்கு உணவாக ஆனாலும் அது உழைக்காத காரணத்தால் அதற்கு விழா கிடையாது.

எவன் தன் உழைப்பைப் பிறருக்குத் தருகிறானோ, அவனுக்கு விழா எடுப்பது பொருத்தம்.

குழந்தைகளைச் சில பெற்றோர் ஆடு மாதிரி வளர்க்கிறார்கள். வேளா வேளைக்கு 'அது' தீனி தின்று கொழுக்க வேண்டும் என்பதே அவர்கள் நோக்கம்.

'அதை' ஆடுபோல் வளர்ப்பதை விட மாடுபோல் வளர்க்க அவர்கள் முயல வேண்டும்.

மனிதனால் எந்தப் பிராணியையும் பழக்க முடியும். மனிதப் பிராணியைப் பழக்க முடியாதா என்ன?

பிறத்தியாருக்குப் பயன்படும் உழைப்பை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைக் குழந்தைக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.



தட்டில் சோறு போட்டு வைத்தால் குழந்தை எடுத்துத் தானே சாப்பிட்டால் அது ஒரு சாதனை அல்ல. நாய்க் குட்டிக்கோ, பூனைக் குட்டிக்கோ பால் ஊற்றி வைத்தால் அது கூடத்தான் தானாகக் குடிக்கிறது.

மனிதக் குட்டிக்கு இன்னும் மேம்பாடானவற்றைக் கற்றுத்தர வேண்டும். தட்டில் சோறு போட்டால் அது இன்னொரு குழந்தைக்கு எடுத்து ஊட்டிவிட வேண்டும்.

தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளுமுன் பக்கத்து வீட்டுக் குழந்தைக்கு ஊட்டிவிட அதைப் பழக்க வேண்டும்.

இறைந்து கிடக்கும் தனது பொம்மைகளை பொறுக்கிக் கூடையில் போட்டு வைக்கும் குழந்தை சமர்த்துக் குழந்தைதான். ஆனால் அம்மாவுக்கு உதவியாக இரண்டு பாத்திரங்களை எடுத்து அலமாரியில் அழகாகக் கவிழ்க்கும் குழந்தை பாராட்டுக்கு உரியது.

பிறருக்கு உழைப்பதில் நாட்டமும் பிரியமும் ஏற்படுமாறு குழந்தையை உழைக்கப் பழக்க வேண்டும்.

தான் சாப்பிடுமுன் "அப்பா சாப்பிட்டாச்சா, அம்மா சாப்பிட்டாச்சா..." என்று அது கேட்கத் தெரிந்து கொள்ள வேண்டும். கற்றுக் கொடுத்தால் அந்த நல்ல பழக்கம் அதற்கு ஏற்படும்.

என் நண்பர் ஒருத்தரின் சிறு பெண், அம்மாவோடு எந்த உறவினர் வீட்டுக்கோ, சிநேகிதி வீட்டுக்கோ போனாலும் உடனே உரிமையாக அவர்களிடம், "மாமி, உங்க வீட்டு அலுமாரியை நான் ஒழுங்குபடுத்தித் தரட்டுமா?" என்று கேட்டுக் கிடுகிடுவென்று துணிமணிகளை மடித்துவைத்து புத்தகங்களை அடுக்கி ஒழுங்கு செய்துவிடுவாள். அவளால் பிறருக்கு வேலை செய்யாமல் இருக்கவே முடியாது. குழந்தையின் நல்ல பெற்றோர் பழக்கிய பழக்கம் அது.

பிற வீடுகளுக்குச் சென்று தேனீர் அருந்துபவர்கள் பாத்திரத்தை அப்படியே மேஜைமீது வைத்து விடுவார்கள். சிலர் கழுவும் இடத்துக்கு எடுத்துச் சென்று தாங்களே கழுவி வைப்பார்கள். இன்னும் சிலர் தாங்கள் தேனீர் குடித்த பாத்திரத்தோடு மற்றவர்கள் சாப்பிட்டதையும் சுத்தமாகக் கழுவித் தருவார்கள்.

பிறத்தியாருக்காக உழைக்கும் பண்பை எப்படியாவது எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படுத்தியாக வேண்டும்.

குழந்தைகளை ஆடாக வளர்க்காமல் மாடாக வளர்ப்போம்-ஏனென்றால் மாடுகளுக்குத்தான் பொங்கல் உண்டு.

-பிரகஸ்பதி-


படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பராமரித்தால் முடி அழகு

பெண் என்றாலும் ஆண் என்றாலும் அழகாக இருக்க வேண்டுமானால், முடி நிறைய, அடர்த்தியாக நீளமாக இருக்க வேண்டும்.

ஆரோக்கியம், பரம்பரை ரீதியைப் பொறுத்தே கூந்தல் நிலை அமையும். ஆனாலும் கவனமாகப் பராமரித்தால் அழகான கூந்தலைப் பெறலாம்.



பெண்களே முதலில் நீங்கள் உங்கள் கூந்தலைப் புரிந்து கொள்ளுங்கள். சிலருக்கு கூந்தல் கடைசியில் இருந்து அற்றுப் போய்க்கொண்டே இருக்கும். அவ்வாறானவர்கள் தங்களுக்கு நீளமாக முடி வளராது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். குட்டையாக இருந்தாலும் அதை பராமரித்து, திருப்தி கொள்ள வேண்டும்.

முகத்திற்கு ஏற்றவாறு கூந்தலைக் கட்டுவதும், முடியை வெட்டிக் கொள்வதும் தப்பில்லை. அதே நேரத்தில் கூந்தலின் தன்மையை புரிந்து கொள்ளவும் வேண்டும்.

உதாரணமாக வறண்ட நீளமான கூந்தல் கொண்டவர்கள் தங்கள் கூந்தலைக் கட்டையாக வெட்டிக் கொள்ளலாம். கூந்தலை வெட்டிக் கொள்வது அல்லது நீளமாக வளர்ப்பதற்கு முன்னால் அவர்கள் பார்க்கும் வேலையையும் கருத்தில் கொள்ள வேண்டும். வேலைக்குத் தக்கபடியே கூந்தல் இருக்க வேண்டும்.

விளையாட்டு வீராங்கனைகள் முகத்தில் விழும்படியாகவோ, நீளமாகவோ கூந்தலை வளர்க்கக்கூடாது.

அது அவர்கள் தொழிலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இந்தத் தொல்லை ஏற்படாமல் இருப்பதற்காகத்தான் டென்னிஸ் வீராங்கனைகள் தங்கள் தலையில் 'பாண்ட்' மாட்டிக் கொள்கிறார்கள். இதுபோல் தங்கள் பணிக்குத் தொல்லை தராத வண்ணத்தில் கூந்தல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

பெண்கள் தங்களுக்கு எவ்வளவோ வேலை இருந்தாலும் கூந்தலை அழகாகச் சீவி, பின்னிக் கட்டிக் கொள்ள வேண்டும். 'அதற்கெல்லாம் எனக்கு நேரமில்லை' என்று சொல்பவர்கள் கூந்தலைக் கட்டையாக வெட்டிக் கொண்டால் பராமரிக்க ஏதுவாக இருக்கும்.

அதிகமான அளவு கூந்தல் இல்லாதவர்கள் கூட முடியை ஓரமாகவோ, நடுப்பகுதியிலோ சீவி, பலவிதமான கிளிப்புகளைப் பயன்படுத்தி தூக்கலாகக் கட்டிக் கொண்டால், அழகாக, கூந்தல் நீளமாக இருப்பது போல் தோன்றும்.

கூந்தலுக்கு இப்போதெல்லாம் பலவண்ண நிறங்களைப் பூசுகிறார்கள். அழகுக்கு அது நன்றாகத்தான் இருக்கும். அதே நேரத்தில் கூந்தலின் ஆரோக்கியத்திற்கு அது ஏற்றதல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கூந்தலைச் சீவும்போது அதற்கேற்ற சீப்பைப் பயன்படுத்த வேண்டும்.

## சமையலறை குறிப்புக்கள்



சமையல் அறைச் சமாச்சாரங்கள் சிலவற்றை இந்த வாரம் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

- * தக்காளி மலிவாகக் கிடைக்கும்போது அதனை அதிகமாக வாங்கி, இரண்டாகப் பிளந்து வெள்ளைத் துணியில் வைத்துக் காய வைக்கவும். அதில் இருக்கும் தண்ணீர்த் தன்மை போனதும், போத்தலில் எடுத்துப் பாதுகாப்பாய் வைத்திருங்கள். பின்பு அதனைத் தேவைப்படும்போது சமையலுக்குச் சேருங்கள். தக்காளியின் சுவை முழுமையாகக் கிடைக்கும்.
- * கடுகைத் தண்ணீரில் ஊறவைத்து அரைத்து, பூச்சி கடித்த இடத்தில் தேய்த்தால் குணமாகும்.
- * நன்றாகச் சூடான எண்ணெயில் 'கட்லட்' போட்டு பொரித்தால் கட்லட் பொடிந்து போகாது.
- * சுடுநீரில் ஆப்பிளைப் போட்டு எடுத்தால், தோலை எளிதாக நீக்கி விடலாம்.
- * எரியும் பல்ப்பின் அருகில் ஒரு துண்டு பெரிய வெங்காயத்தைக் கட்டித் தொங்கவிட்டால் நுளம்புத் தொல்லை ஏற்படாது.
- * துவரம் பருப்பை வேக வைக்கும்போது அதில் சிறிதாகச் சில துண்டு தேங்காய்களையும் நறுக்கிப் போடுங்கள். பருப்பு வெந்து விடும்.
- * மாவைச் சலிக்கப்பயன்படுத்தும் அரிதட்டுக்களை, உபயோகம் முடிந்ததும் ஒரு பொலித்தீன் பையில் போட்டு வைத்தால் அழுக்காகாமல் இருக்கும்.
- * சாலட்டில் சிறிதளவு எள்ளை வறுத்துச் சேர்த்தால் சுவை அதிகரிக்கும்.
- * மீனைச் சுத்தப்படுத்தி, வெட்டி அதில் சிறிதளவு வினாகிரி தேய்த்து வைத்தால், வேகும்போது மீன் பொடிந்து போகாது.
- * மீன் வறுக்க சேர்க்கும் மசால்ாவில் சிறிதளவு புளி பிழிந்து சாறு விடுங்கள். சுவை அதிகரிக்கும்.
- * மீனில் சிறிதளவு உப்பு, மஞ்சள் தூள் கலந்து ஃபிரிட்ஜில் வைத்தால், அதிக நாட்கள் கெட்டுப்போகாமல் இருக்கும்.
- * கருவாட்டில் அதிக அளவு உப்பு இருந்தால், அதனை அரைமணி நேரம் கஞ்சியில் போட்டு வையுங்கள். உப்புத் தன்மை பெருமளவு அகன்று விடும்.
- * மீனில் சிறிதளவு கடுகை அரைத்துக் கலந்தால், மீன் உதிர்ந்து போகாது.
- * மீனில் காரம் நன்றாகச் சேர வேண்டுமானால் மீன் மசாலாவில் சிறிதளவு எலுமிச்சம் பழச்சாறு சேர்த்துக் கொள்ளுங்கள்.
- * எலுமிச்சம் பழச்சாறு கலந்த நீரில் மீனை ஒரு மணிநேரம் போட்டு வைத்து விட்டு வறுத்தால், வாடை வீசாது சுவை கூடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FQ

பெயர்:.............................
முகவரி:.............................
.............................
தொழில்:.............................
கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-05-1999**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 85

புவனா

டோடியும் டயானாவும் நெருங்கிப் பழகத் தொடங்கியதை பத்திரிகைகளும், புகைப் படப்பிடிப்பாளர்களும் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினர்.

டோடி, டயானா காதல் செய்தி அறிந்தது முதற்கொண்டே பிரிட்டிஷ் அரச குடும்பம் விழித்துக் கொண்டது.

மனம்விட்டுப் பேசி முடிவு செய்வதாக டயானாவும், டோடியும் முடிவு செய்திருந்தனர்.

திருமண ஏற்பாடுகள் பற்றியும் இறுதியான முடிவு எடுக்கவே அந்தச் சந்திப்பு.

ஆகஸ்ட் 21ம் திகதி சென் ட்ரொப்பெஸ் என்னும் இடத்துக்கு டயானா போய்ச் சேர்ந்தார்.





செய்தி எப்படியோ கிடைத்துவிட்டது.

மிகத் தூரத்தில் இருந்து புகைப்படம் எடுக்கும் கருவிகள் பாவனையில் உள்ளதால், கடற்கரையில் தமது அசைவுகள் படம் எடுக்கப் படுவதை டயானாவோ, டோடியோ அறியவில்லை.

எனினும் தம்மை யாராவது அடையாளம் காணக்கூடும் என்று இருவரும் அதிகமாக வெளியே வரவுமில்லை.

படகுக்குள்ளேயே சந்தோசமாக இருந்தனர். டயானாவுக்கு சிறுவயது முதலே நீச்சலடிப்பதற்கு ஆர்வம்.

தன் உடைகளைக் களைந்து நீச்சல் உடையை அணிந்து கொண்டார்.

நீச்சல் உடையில் டயானாவின் மேனி அழகுகளை கண்டதும் டோடி மெய்மறந்து போனார்.

டயானாவை நெருங்கி கட்டியணைத்து முத்தமிட்டார் டோடி. இந்தக் காட்சி பதுங்கியிருந்த புகைப்படப் பிடிப்பாளரது கமராவுக்கு சுடச்சுட விருந்தானது.

படகில் இருந்து கடலில் குதித்து டயானா நீச்சலடிக்கும் காட்சிகளையும் கமரா விழுங்கிக் கொண்டது.

பின்னர் அதே படகில் ஃபிரான்சுக்கும் இத்தாலிக்கும் இடையே -மத்திய தரைக்கடலில் அமைந்துள்ள சார்டினியா என்னும் தீவை அடைந்தனர்.

இந்தப் படகுப் பயணத்தில் இருவரது திருமணமும் உறுதியானதால், 'இனிமேல் எவருக்கும் பயப்படத் தேவையில்லை, தம் காதலை மறைக்கத் தேவையில்லை' என்று டோடி கருதினார்.

எனினும் திருமணச் செய்தியை அறிவிக்கும்வரை தமது காதலை பகிரங்கப்படுத்த டயானா விரும்பவில்லை.

இதற்கிடையே டயானா, டோடி இருவரும் படகில் பயணம் செய்யும் படங்களும், இருவரும் முத்தமிட்டபடி உள்ள காட்சிகளும் உலகின் சகல செய்தித் தாள்களிலும் இடம்பிடித்தன.



டோடியுடன் டயானா

இதனை அறிந்ததும் டயானாவுக்கு செய்தியாளர்கள்மீதும், புகைப்படப் பிடிப்பாளர்கள்மீதும் கடும் கோபம் ஏற்பட்டது.

'இவர்களை ஏமாற்றிக் காட்டத்தான் வேண்டும். எந்தளவு தூரத்திற்கு பின் தொடர்கிறார்கள் பார்க்கலாம்' என்று முடிவும் பிறந்தது.

ஆகஸ்ட் 30ம் திகதி சனிக்கிழமை சார்டினியாவில் இருந்து விமானம் மூலமாக பாரிஸ் நகர் நோக்கி டோடியும், டயானாவும் புறப்பட்டனர்.

அவர்கள் இனித் திரும்பிவரப்போவதில்லை என்பது தெரியாமல் மீண்டும் அவர்களைச் சுமந்து செல்ல தயாராக உல்லாசப் படகு சார்டினியாவில் நங்கூரமிட்டிருந்தது.

## படகுப் பயணம்

முஸ்லிம் ஒருவரை டயானா மணந்தால், பிரிட்டிஷ் இளவரசர்களான வில்லியம், ஹரி ஆகியோருக்கும் அவர் தந்தை ஸ்தானத்தில் இருப்பார்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கும் முஸ்லிம் குடும்பத்துக்கும் இடையே பந்தம் ஏற்பட்டது போலாகிவிடுமே என்று பதறித்தான் போனார்கள்.

இளவரசர்கள் வில்லியமும், ஹரியும் டயானாவுடன் சென்று டோடியுடன் தங்கிவிட்டு திரும்பியதையும் அரச குடும்பம் அறிந்திருந்தது.

டயானா, டோடி ஆகியோரது நடவடிக்கைகளை கண்காணிக்க அரச குடும்பமும் ஆட்களை நியமித்தது.

இவர்களைத் தவிர மூன்றாவதாக ஒருவர் டயானா, டோடியின் ஒவ்வோர் அசைவையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

அவர் வேறு யாருமல்ல, டோடியின் தந்தையான அல்ஃபாயிட்தான்.

டோடியும், டயானாவும் நெருங்கிப் பழகுவதும், திருமணம் செய்ய முடிவெடுத்திருப்பதும் அல்ஃபாயிட்டுக்கு அதீத சந்தோஷத்தைக் கொடுத்தது.

டோடியும், டயானாவும் திருமணம் செய்ததும் அவர்களுக்கு செய்ய வேண்டிய வசதிகளை திட்டமிட ஆரம்பித்து விட்டார் ஃபாயட்.

புதுமணத் தம்பதி தங்குவதற்காக பாரிசிலுள்ள வின்சர் கோமகனின் மாளிகை மேலும் மெருகூட்டப்பட்டது.

அங்கிருந்த பழைமை வாய்ந்த பொருட்களில் 40 ஆயிரத்துக்கு மேற்பட்டவற்றை ஏலத்தில் விற்பனை செய்தார்.

நவீன தளபாடங்களால் வின்சர் மாளிகை அலங்கரிக்கப்பட்டது.

வின்சர் மாளிகையை டோடி, டயானா தம்பதி தங்குவதற்கு அல்ஃபாயிட் தெரிவு செய்ததும் பொருத்தமானதே.

வேற்று நாட்டுப் பெண்ணுக்காக அரச போகத்தை துறந்தவர் வின்சர் கோமகன்.

அரச போகத்தைத் துறந்து எகிப்திய நாட்டவரை துணைவராக வரித்துக் கொள்ளப் போகும் டயானா, வின்சர் மாளிகையில் தங்கியிருந்தால் அது பொருத்தமாகத்தான் இருந்திருக்கும். ஆனால் அல்ஃபாயிட் போட்டிருந்த திட்டம் நிறைவேற சந்தர்ப்பமே இல்லாமல் போய்விட்டது.

### படகுப் பயணம்

பொஸ்னியாவில் இருந்து டயானா திரும்பியதும் தமது எதிர்காலத் திட்டத்தை

'ஜொனிகால்' என்னும் உல்லாசப் படகு டோடிக்கு மிகவும் ராசியானது.

மனக்கவலை ஏற்படும் போதெல்லாம் அந்தப் படகில்தான் பயணம் செய்வார் டோடி.

பிரபல சில நடிகைகளுடனும் அந்தப் படகில் உல்லாசம் அனுபவித்திருக்கிறார்.

"இந்தப் படகுக்கு வந்தாலே ஐயாவுக்கு மூட் பயங்கரமாக வருகிறது. நம்மால் தாங்க முடியாதப்பா. இனி இந்தப் படகுக்கு அழைத்தால் வரவே மாட்டோம்!" என்று ஹொலிவூட் நடிகைகள் குறும்பாகக் கூறியதும் உண்டாம்.

அந்தப் படகில்தான் டயானாவுடன் புறப்பட்டார் டோடி. இருவரும் மனம் திறந்து பேசினார்கள்.

தனிமை இருவரையும் நெருங்க வைத்தது. படகின் தளத்தில் மெல்லிய குளிரில் இருவரும் கதகதப்பாக முத்தமிட்டுக் கொண்டனர்.

அந்த முத்தம் இருவரையும் மேலும் தேடல்களுக்குத் தூண்டியது. படகின் தளத்திலேயே கட்டியணைத்தபடி நின்றனர்.





ஜொனிகால் உல்லாசப் படகின் மேல்தளத்தில் டயானா

மூன்று நாட்களின் பின்னர் இத்தாலியிலுள்ள போர்டோஃபினோ என்ற கடற்கரையில் படகு நங்கூரமிட்டது. படகு என்று சொல்வதை விட 'சிறு உல்லாசக் கப்பல்' என்று அழைப்பதே பொருத்தமாக இருக்கும்.

### பின்தொடர்ந்தனர்

டோடி, டயானா இருவரது நடவடிக்கைகளையும் மோப்பம் பிடித்து அலைந்த புகைப் படப்பிடிப்பாளர் ஒருவருக்கு இத்தாலிக் கடற்கரையில் உல்லாசக் கப்பல் நங்கூரமிட்ட

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் ☞ | செ. தனுசாலினி, 46, கந்தசாமி கோவில் வீதி, திருகோணமலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்
## வைர மோதிரப் போட்டி

- ● முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
- ● 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- ● 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- ● பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- ● இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன் –முரசு எ வைர மோதிரப் போட்டி




படிப்பகம்

www.padippakam.com





வெள்ளை நிறத்தைக்கண்டால்-பதறி
வெருவலை ஒழித்தாயோ?
உள்ளது சொல்வேன் கேள்! சுதந்திரம்
உனக்கில்லை மறந்திடடா!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# குட்டி ஆடும் முதலையும்

குட்டி ஆடொன்று குழப்படி செய்து கொண்டிருந்தது. இதைக் கண்ட தாய் ஆடு அதன் முதுகில் அடி போட்டது. குட்டி ஆடு தூரமாகச் சென்று ஓர் ஆற்றங்கரையில் நின்று அழுது கொண்டிருந்தது.

அந்த ஆற்றில் இருந்த முதலைக்கு குட்டி ஆடு அழும் சத்தம் கேட்டது. முதலை ஆற்றுக்கு வெளியே எட்டிப் பார்த்தது. முதலையைக் கண்ட குட்டி ஆடு,

"என்னை என் அம்மா அடித்து விட்டார். அதுதான் அழுது கொண்டிருக்கிறேன்!" என்று சோகமாகக் கூறியது.

"எனக்கும் யாரும் இல்லை. நீ என்னுடன் வந்தால், நான் உன்னை என் பிள்ளைபோல வைத்துக் காப்பாற்றுவேன்!" என்று சொன்னது முதலை.

அழுது கொண்டிருந்த குட்டி ஆடு, முதலை சொல்வது உண்மை என நினைத்து, ஆற்றில் இறங்கியது. முதலையின் முதுகில் உட்கார்ந்து கொண்டு சென்றது.

அப்போது ஒரு குருவி வந்து முதலையின் முதுகில் உட்கார்ந்திருந்த குட்டி ஆட்டின் முதுகில் அமர்ந்தது.

இதைக் கண்ட குட்டி ஆடு, "ஏன் நீ என்னோடு வருகிறாய்?" என்று குருவியைப் பார்த்துக் கேட்டது. உடனே குருவி, குட்டி ஆட்டின் காதருகில் வந்து:

"இந்த முதலை மிகவும் பொல்லாதது. இது தண்ணீர் குடிக்க வரும் உன்னைப் போன்ற அப்பாவி விலங்குகளை ஏமாற்றி அழைத்துச் சென்று அவைகளைத் தன் குடும்பத்துடன் சேர்த்து உணவாக்கிக் கொள்ளும். அதனால்தான் உன்னை எச்சரிக்க வந்தேன்." என்று சொன்னது.

இதைக் கேட்ட குட்டி ஆடு பயந்து நடுங்கியது. அது குருவியைப் பார்த்து,

"இந்த முதலையிடமிருந்து தப்பிக்க வழி கிடையாதா?" என்று கேட்டது.

குருவி, குட்டி ஆட்டின் மேல் நடந்து வந்து அதன் காதருகில் ஏதோ கிசுகிசுத்தது. குட்டி ஆடும் தலையசைத்தது. அதன் பின் குருவி பறந்து சென்றது.

"முதலையாரே! சற்று நில்லுங்கள். என் வீட்டில் என்னை மட்டுமன்றி எனது சகோதரர்களையும் என் அம்மா அடிப்பார். அவர்களையும் எம்முடன் அழைத்து வந்தால் அவர்கள் மிகவும் சந்தோஷப்படுவார்கள்," என்று சொன்னது குட்டி ஆடு.

'இந்தக் குட்டி ஆடு இன்று ஒரு நாளைக்குத்தான் போதும். நிறைய ஆடுகள் இருந்தால் தினமும் ஒவ்வொன்றைக் கொன்று தின்னலாம்' என்று நினைத்தது முதலை.



"சரி நீ போய் அவர்களையும் அழைத்து வா. நான் உன்னைக் கரையில் விடுகிறேன்." என்று சொன்ன முதலை ஆற்றங்கரையில் குட்டி ஆட்டை இறக்கிவிட்டது.

முதலையின் மேலிருந்து இறங்கிய குட்டி ஆடு திரும்பிப் பார்க்காமல் தனது தாயிடம் ஓடியது.

குட்டியாடு ஓடும்போது,

'சரியான தருணத்தில் குருவி எச்சரித்து தப்பிக்க ஒரு வழி கூறியதால் தப்பினோம்' என குருவிக்கு மனதிற்குள் நன்றி சொல்லியது.

## அதிசயம் - ஆனால் உண்மை!



← இத்தாலியில் உள்ள ஆர்மியா என்ற இடத்தில் ஓர் அருவி ஓடுகிறது. குளிர் காலத்தில் இந்த அருவியில் வெந்நீரும், வேனிற்காலத்தில் ஐஸ் போன்ற குளிர்ந்த தண்ணீரும் விழுகிறது.

→ நைஜீரியாவில் உள்ள ஆபிரிக்க சுதேசிகள் தானியங்களை நன்றாகப் பாதுகாக்கும் நோக்குடன் தமது தானியக் களஞ்சியங்களை கடுநீர்ப் போத்தல் உருவில் அமைக்கின்றனர்.





← ஆபிரிக்காவில் உள்ள பாந்தா என்ற பழங்குடி பாடகர்களுக்கு ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. குரங்கு ரோமத்தினாலான பேலித்தாடியைப் பொருத்திக் கொள்ளாமல் எந்த வாத்தியத்தையும் இசைக்கக்கூடாது என்பதே அந்த நிபந்தனை.

## லியோ பேக்லாண்ட்

உலகில் தவிர்க்க முடியாத ஒரு பொருளாகவும் அன்றாட வாழ்வில் எல்லாமாகியும் நின்று, அத்தியாவசியமாகி விட்டது பிளாஸ்டிக். இந்த பிளாஸ்டிக்கைக் கண்டு பிடித்தவர்தான் லியோ பேக்லாண்ட்.

இவர் 1863ம் ஆண்டு பெல்ஜியம் நாட்டில் பிறந்தார். பின் 1889ல் இவர் அமெரிக்காவில் குடியேறினார். 1890ல் இவர் வேலாக்ஸ் என்னும் ஃபோட்டோகிராபிக் பேப்பரைக் கண்டுபிடித்தார். இவரது இந்த அரிய கண்டுபிடிப்பால் புகைப்படச் சுருள்களைச் சூரிய ஒளியில் கழுவும் முறை நிறுத்தப்பட்டது.


இதன் பிறகு இவரது கடுமையான முயற்சிகளால் 1907ம் ஆண்டு 'பேக்லைட்' என்ற பொருளைக் கண்டுபிடித்தார். இது செயற்கை முறையிலான ஒரு பிளாஸ்டிக் ஆகும்.

இதற்குப் பின்னர் 1909ல் இவரது ஆய்வு கூடத்தில் 'சிந்தடிக் பிளாஸ்டிக்'கை உருவாக்கினார்.



உலகில் இன்று பலராலும் உபயோகிக்கப்படும் பொருட்களை உருவாக்கப் பயன்படும் பிளாஸ்டிக்கைக் கண்டுபிடித்த லியோ பேக்லாண்ட், 1944ம் ஆண்டு தனது 80வது வயதில் நியூயோர்க் நகரில் மரணமடைந்தார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08.05.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 295
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 293

பரிசுக்குரியவர்:
செல்வன் டி. பிரியதர்ஷன்,
றோயல் கல்லூரி, கொழும்பு-07.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பாத்திமா நுஸ்ஹா, சாந்த தோமஸ் பெண்கள் பாடசாலை, மாத்தளை. | டனோஷன், பரி.தோமாவின் கல்லூரி, கல்கிசை. |
| லோ. நிலுக்ஷன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | எம்.எச். சனூன், ஜி.எஸ்.ஒழுங்கை, கல்முனை-07. |
| பாத்திமா சகீலா சலீம், கங்காராம மாவத்த, மட்டக்குளி, கொழும்பு-15. | கே.கே. சாமுவேல், யஹாலதென்ன, கண்டி. |
| கி. ஷர்மினா, கொ/சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. | செல்வன்.அ.மு. முஹ்ஷரஃப், மீராவோடை அல்-ஹிதாயா ம.வி., மீராவோடை. |
| எம். பிரதீசன், கடவளை த.ம.வி, வட்டவளை. | டி.எஸ். கிறிஸ்டோபர், கதிரேசன் மத்திய மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி. |

## அருங்காட்சியகச் செய்திகள்

★ உலகிலேயே மிகப் பெரிய அருங்காட்சியகம் நியூயோர்க் நகரில் உள்ள 'அமெரிக்கன் மியூஸியம் ஒஃப் நச்சுரல் ஹிஸ்டரி'தான்.

★ நியூயோர்க் நகரில் சித்திரக்கதை கலையை கௌரவிக்க ஒரு தனி அருங்காட்சியகத்தை உருவாக்கியுள்ளனர்.

★ நடிகர்களுக்கென்றே மெழுகினால் செய்யப்பட்ட பொம்மை அருங்காட்சியகம் அமெரிக்காவில் உள்ள கலிஃபோர்னியாவில் அமைந்துள்ளது.

★ ஜெர்மனியில் உள்ள வெய்ஸ்ஸென்ஸி நகரில் பாலுக்கென்றே தனி அருங்காட்சியகம் உள்ளது. இங்கு பாலிலிருந்து தயாரிக்கப்படும் 1500 வகையான உணவுப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

★ உலகின் மிகப்பழமையான அருங்காட்சியகம் ஒக்ஸ்ஃபோர்ட்டில் உள்ளது. 1679ம் ஆண்டு இது அமைக்கப்பட்டது.

★ இந்தியாவில் உள்ள மிகப் பழமையான அருங்காட்சியகம் கல்கத்தாவில் உள்ளது. இது 1814ம் ஆண்டு நிறுவப்பட்டது.

★ கம்பளங்களுக்காகவே ஓர் அருங்காட்சியகம் முன்னாள் சோவியத்குடியரசுகளில் ஒன்றான துர்க்மெனிஸ்தானில் உள்ளது. இங்கு 15ம் நூற்றாண்டு கம்பளங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

★ அமெரிக்காவில் கோல்ஃப் விளையாட்டிற்கென்றே அருங்காட்சியகம் ஒன்றுள்ளது. இங்கு 1971ம் ஆண்டைச் சேர்ந்த கோல்ஃப் பந்தொன்று உள்ளது. இது நிலவில் விளையாடப்பட்ட பந்து.

★ உலகப் புகழ்பெற்ற பிரிட்டிஷ் அருங்காட்சியகம் 14.01.1759ல் திறக்கப்பட்டது.

★ வத்திக்கான் நகர அருங்காட்சியகத்தில் கிரேக்க மொழியில் கி.பி.350ல் எழுதப்பட்ட புனித வேதாகமம் ஒன்று பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## விடுதலை நாணயம்

பிரான்ஸ் நாட்டின் நாணயத்திற்குப் பெயர் ஃபிராங்க். இதன் பொருள் விடுதலை என்பதாகும்.

14ம் நூற்றாண்டில் இரண்டாம் ஜோன் என்ற ஃபிரெஞ்சு மன்னரை ஆங்கிலேயர்கள் சிறைப் பிடித்தனர். அவரை மீட்பதற்குத் தேவையான பணத்தைச் செலுத்த ஒரு நாணயத்தை அச்சிட்டனர்.


பின் இந்த நாணயத்தைச் செலுத்தி மன்னரை விடுவித்தனர். அதனால் இந்த நாணயத்திற்கு விடுதலை என்றே பெயரிட்டு விட்டனர்.

## குஞ்சு பொரிக்கும் ஆண்மீன்கள்


உயிரினங்களில் முட்டையை அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் வேலையைப் பொதுவாக பெண்ணினங்களே செய்கின்றன என்பதை அறிவீர்கள். மீன்களிலும் அப்படித்தான். ஆனால் சிலவகை பெண் மீன்கள் முட்டையை மட்டும் இட்டு விட்டுச் செல்ல, ஆண் மீன்களே குஞ்சு பொரிக்கும் வேலையைச் செய்கின்றன.



சீனக் கடலில் 'பேரடைஸ்ஃபிஷ்' என்றொரு வகை மீன் காணப்படுகிறது. இதில் பெண் மீன் நீரின் மேல் முட்டைகளை இட்டுவிட்டுச் சென்று விடும். ஆண்மீன் முட்டைகள் ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து விடாமல் இருக்க ஒருவித பசை போன்ற திரவத்தை வாயிலிருந்து வெளியேற்றுகிறது. அது மட்டுமன்றி குஞ்சு பொரிக்கும்வரை பத்திரமாக முட்டைகளைப் பாதுகாக்கின்றன.



↑ 'பூனை மீன்' எனப்படும் மீன் இனத்தில் ஆண்மீன்கள், பெண் மீன்கள் இடும் முட்டைகளை எல்லாம் தன் வாயில் வைத்துக்கொண்டு, அவை குஞ்சுகளாகப் பொரிக்கும்வரை பத்திரமாகப் பாதுகாக்கும். இந்நாட்களில் ஆண்மீன்கள் எதுவும் சாப்பிடாமல் பட்டினி கிடக்கின்றன.



← 'கடற்குதிரை' என்ற மீன் இனத்திலும் இப்படித்தான். பெண் மீன் இடும் முட்டைகளை, ஆண்மீன் விழுங்கி வயிற்றுக்குள் அனுப்பிவிடும். வயிற்றுப் பையில் குஞ்சுகள் பொரித்தவுடன் வாய் வழியாக வந்து விடுகின்றன.

## பெயர் வந்த விதம்

செய்தியை ஆங்கிலத்தில் நியூஸ் (NEWS) என்று அழைப்பர். நியூஸ் என்ற சொல்லில் உள்ள 4 ஆங்கில எழுத்துக்களும் N என்பது வடக்கு (NORTH) திசையையும், E என்பது கிழக்கு(EAST) திசையையும். W என்பது மேற்கு (WEST) திசையையும், S என்பது தெற்கு (SOUTH) திசையையும் குறிக்கும்.

இந்த 4 திசைகளிலும் இருந்து அன்றாடம் நடக்கும் விவரங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுவதால் ஆங்கிலத்தில் நியூஸ் (NEWS) என்று அழைக்கப்படுகிறது.

அது போல பத்திரிகைகளை பிரஸ் (PRESS)என்றும் ஆங்கிலத்தில் கூறுவர். பிரஸ் என்ற ஆங்கிலச் சொல்லிலுள்ள அந்த 5 எழுத்துக்களும் P என்பது மக்கள் (PEOPLE), R என்பது இராச்சியம் (ROYAL), E என்பது கல்வி (EDUCATION), S என்பது காதால் கேட்பது (SOUND), S என்பது கண்களால் பார்ப்பது (SIGHT) என்பதைக் குறிக்கும்.



இந்த ஐந்து துறைகளில் இருந்தும் ஆதாரபூர்வமான விஷயங்களைச் சேகரித்து வெளியிடுவதற்கே பிரஸ் (Press) என்று அழைப்பர்.


படிப்பகம்

# புதிய தொடர் அமோக ஆரம்பம்

சொர்ணம் அந்தக் கனமான காஞ்சிபுரம் பட்டுப்புடவைக்குள் வியர்த்துக் கரகரத்துப் போயிருக்க அவள் நெற்றிக்கு இட்டிருந்த பெரிய சைஸ் குங்குமம் எந்த விநாடியிலும் இளகி விழுந்து விழக்கூடிய அபாயக் கட்டத்தில் இருந்தது. விட்ட பெருமூச்சுக்களில் ஏகப்பட்ட கலோரி உஷ்ணம்.

வரவேற்பறை சோபாவில் உட்கார்ந்து வாசலையே நிமிஷத்திற்கு இரண்டு தடவை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த தன் கணவர் நீலமேகத்துக்கு முன்பாய் வந்து நின்றாள்.

"என்னங்க...?"

"ம்..."

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர்ற நேரமாச்சு. பூவிழியை இன்னும் காணோமே...?"

"வந்துடுவா...வந்துடுவா..."

"இதையேதான் அரைமணி நேரமா சொல்லிட்டிருக்கீங்க.... அவ ஆபீஸுக்கு ஃபோன் பண்ணியாவது பார்க்கலாமில்லையா?"

"நாலஞ்சு தடவை ஃபோன் பண்ணிப் பார்த்துட்டேன். ஏதோ ஸ்டாஃப் மீட்டிங்காம். முக்கியமான டிஷ்கஷன்ல இருக்காளாம்... விஷயத்தைச் சொல்லுங்க... கன்வே பண்ணிடறோம்னு சொன்னாங்க. நான் விஷயத்தையும் சொல்லிட்டேன்."

"மறுபடியும் ஒரு தடவை ஃபோன் பண்ணிப் பாருங்களேன்.. மாப்பிள்ளை



வீட்டுக்காரங்க வரும்போது பூவிழி வீட்ல இருந்தாத்தானே நமக்கு மரியாதை?"

நீலமேகம் எழுந்து டெலிஃபோனை நோக்கிப் போனார். ரிஸீவரைக் கையில் எடுத்துக்கொண்டவர் பூவிழியின் ஆபீஸுக் குரிய டெலிஃபோன் எண்களை டயலில் தொட்டார். மறுமுனையில் உடனே ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

நீலமேகம் கேட்டார்.

"ஹலோ... கன்சல்டன்ஸி க்யூப்...?"

"எஸ்..."

"நான் பூவிழியோட ஃபாதர் பேசறேன். பூவிழியைக் கொஞ்சம் பேசச் சொல்ல முடியுமா?"

"வெயிட் எ மினிட் ஸார்..."

நீலமேகம் காத்திருந்தார்.

அரை நிமிட மௌனத்திற்குப் பிறகு ரிஸீவர் கரகரத்தது.

"பேசறது யாரு, பூவிழியோட ஃபாதரா?"

"ஆமா..."

"ஸார்... நான் கன்ஸல்டன்ஸியோட ஏ.ஓ.பேசறேன். உங்க டாட்டர் பூவிழி காலையிலிருந்து ஆபீஸுக்கே வரலை."

"என்ன சொல்றீங்க.... ஆபீஸுக்கு வரலையா...?"

"எஸ்..."

"ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி நான் ஃபோன் பண்ணிக் கேட்டப்ப பூவிழி ஏதோ ஸ்டாஃப் மீட்டிங்கில் டிஸ்கஷனில் இருக்கிறதா சொன்னீங்களே...?"

"அப்படீன்னு டெலிஃபோன் ஆப்ரேட்டர் சொல்லியிருக்கார். பூவிழி ஆபீஸுக்கு வந்திருக்கிறதா அவர் நினைச்சுட்டார். நீங்க நாலஞ்சு தடவை ஃபோன் பண்ணின விஷயமும் இப்பத்தான் எனக்குத் தெரியும்."

நீலமேகம் பதற்றமானார். "பூவிழி இன்னிக்குக் காலைல ஒன்பது மணிக்கெல்லாம் ஆபீஸ் கிளம்பிப் போயிட்டாளே...?"

"ஸாரி ஸார்... பூவிழி ஆபீஸுக்கு வரலை. நீங்க ஃப்ரெண்ட்ஸ் சர்க்கிள்களில் என்கொயரி பண்ணிப் பாருங்க."

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட நீலமேகம் அதிர்ந்து போனவராய் நிமிர்ந்து சொர்ணத்தைப் பார்த்தார்.

"சொ.... சொர்ணம்..."

"என்னங்க.... ஏன் என்னவோ மாதிரி ஆயிட்டீங்க..?"

"பூவிழி இன்னிக்கு ஆபீஸுக்கே போகலையாம். அவ மீட்டிங்க்ல இருக்கிறதா டெலிஃபோன் ஆபரேட்டர் தப்பா சொல்லிட்டாராம்... இப்போ ஃபோன்ல பேசினது ஏ.ஓ."

சொர்ணத்தின் விழிகள் ஸ்தம்பித்துக் கொண்டிருக்கும்போதே வீட்டு வாசலில் அந்த ஆட்டோ சத்தம் கேட்டது.

இருவரும் தத்தம் பார்வைகளை ஆர்வமாய் வாசலுக்குக் கொண்டுபோக- ஆட்டோவிலிருந்து கல்யாணத் தரகர் இறங்கி பணத்தைக் கொடுத்து ஆட்டோவை அனுப்பிவிட்டு தாம்பூலம் மெல்கிற வாயோடு உள்ளே வந்தார். வீட்டுக்குள் நிலவிய சூழ் நிலையின் இறுக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் உற்சாகமாய் பேச்சை ஆரம்பித்தார்.

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க புறப்பட்டு வர ரெடியாக இருக்காங்க.... ஒரு ஃபோன் பண்ணிச் சொல்ல வேண்டியதுதான் பாக்கி. கார்ல பொறப்பட்டுப் பத்து நிமிஷத்துக்குள்ளே வந்துருவாங்க..." பேசிக்கொண்டே போன தரகர் இரண்டு நபர்களின் முகங்களையும் கவனித்துவிட்டு தயக்கக் குரலில் கேட்டார்.

"என்ன முகத்துல சந்தோஷத்தையே காணோமே...?"

சொர்ணம் திகைப்பிலிருந்து இன்னமும் மீளாமல் நின்று கொண்டிருக்க நீலமேகம் கவலை ஈஷிக்கொண்ட குரலில் சொன்னார்:

"பூவிழி இப்போ எங்கே இருக்காள்னே தெரியலை... ஆபீஸுக்கு ஃபோன் பண்ணிக் கேட்டா வரலேன்னு சொல்றாங்க..."

தரகரின் முகம் இப்போது மாறியது. "எந்த சிநேகிதி வீட்டுக்காவது போயிருக்கலாம். ஃபோன் பண்ணிப் பார்த்தீங்களா...?"




"இனிமேதான் பண்ணிப் பார்க்கணும்..."

நீலமேகம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே டெலிஃபோன் அடித்தது.

ரிஸீவரை எடுத்தார். மறுமுனையில் பூவிழியின் குரல் கேட்காதா? என்கிற ஆதங்கத்தோடு "ஹலோ!" என்று குரல் கொடுத்தார்.

பதிலுக்கு ஓர் ஆண்குரல் கேட்டது.

"நீலமேகம் இருக்காரா?"

"நான் நீலமேகம் தான் பேசறேன்."

"பூவிழியோட ஃபாதர் நீங்கதானே?"

"ஆமா...."

"நாங்க பொலிஸ் ஸ்டேஷனிலிருந்து பேசறோம்."

❖❖❖

அடையார்.

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

வித்யா நகர். ஐந்தாவது க்ராஸ். தென்னை மரங்கள் சூழ்ந்த பங்களா. இராத்திரி எட்டு மணி. பொன்னிற மாக்ஸியில் அமர்க்களம் பண்ணிய அந்த இருபது வயது வர்ணா காந்தக் கண்களில் கொஞ்சம் கவலையை வைத்துக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள்.

"அம்மா..."

கிச்சன் மேடையில் காய்கறிகளை வைத்து அரிந்து கொண்டிருந்த பாக்யம் திரும்பிப் பார்க்காமலேயே கேட்டாள்.

"என்னடி?"

"என்னோட பிங்கியைப் பார்த்தியா?"

"உன்னோட பிங்கியையும் பார்க்கலை. மங்கியையும் பார்க்கலை. சமையக்கட்டுக்குள்ள சாயந்தரம் ஆறு மணிக்கு நுழைஞ்சவ இன்னும் ஒரு நிமிஷம்கூட அக்கடான்னு உட்காரலை. சமையல்காரி லீவு. அம்மா ஒருத்தியா கஷ்டப்படறாளே, கொஞ்சம் ஒத்தாசை பண்ணுவோம்னு இல்லாமே அந்த நாய்க்குட்டியோடு விளையாடறதுதான் உனக்கு முக்கியமாப் போச்சா...?"

"சரி...சரி... நான் இப்ப உன்கூட சண்டை போட வரலை... பிங்கியை நானே தேடிக்கிறேன்..." வர்ணா கோபத்தில் தரையை ஒரு உதை உதைத்துவிட்டுச் சமையலறையிலிருந்து வெளிப்பட்டாள்.

ஹாலில் நின்று குரல் கொடுத்தாள்.

"பிங்கி... நீ இப்போ வெளியே வரப் போறியா இல்லையா?"

மௌனம்.

"பிங்கி.பிங்கி..."

**ராஜேஸ்குமாரின்**
**'உடைந்த இரவு'**
**'முள் நிலவு'**
**'டிசம்பர் பௌர்ணமி'**
**போன்ற அமோக தொடர்களின் வரிசையில் மற்றுமொரு அசத்தல் தொடர்**

ஹாலை ஒட்டியிருந்த அறைகளில் அவசர அவசரமாய் எட்டிப் பார்த்துவிட்டு மாடிப்படிகளில் ஏறினாள்.

"ஏய்...பிங்கி! இப்படி நீ கண்ணாமூச்சி விளையாட்டு காட்டினே.... இனிமே உன்னோட கழுத்துக்கு சங்கிலிதான். போர்டிகோ தூண்ல கட்டிப்போட்டுடப் போறேன்..."

மூச்சிறைக்கப் பேசிக்கொண்டே பாதிப் படிக்கட்டுக்கள் ஏறியவள் சட்டென்று ஒரு திகைப்பை வாங்கி அப்படியே ஆணியடித்த மாதிரி நின்றாள்.

படிக்ககட்டின் மார்பிள் பரப்பின் கோணல் மாணலாய் சிவப்பாய் ஒரு துளி... டியூப் லைட் வெளிச்சத்தில் தெரிந்தது.

'என்னது...?'

ஒரு சின்ன திகில் பார்வையோடு வர்ணா குனிந்து பார்த்தாள்.

'இரத்தமா...இல்லை வேறு ஏதாவதா...?'

'தொட்டுப் பார்க்கலாமா...?'

யோசித்துக் கொண்டு நின்ற விநாடி பாக்யத்தின் குரல் கீழேயிருந்து கேட்டது.

"அங்க நின்னுகிட்டு என்னத்தையடி பார்த்துட்டு இருக்கே...?"

"அம்மா..! ஒரு நிமிஷம் இங்கே வா..."

"என்னடி...?"

"இங்க...பாரு..."

பார்த்தாள்...

"என்னடி இது, சிவப்பா?"

"அதைத்தாம்மா என்னான்னு பார்த்துட்டிருக்கேன்."

"இரத்தமா...?"

பாக்யம் கேட்டுக் கொண்டே இடது கை ஆட்காட்டி விரலால் அந்தச் சிவப்புத் துளியைத் தொட்டுப் பார்த்தாள். பிசுக்கென்று.

"இரத்தம் மாதிரிதான் தெரியுது."

"இங்கே எப்படி இரத்தம்..?" கேட்டுக் கொண்டே பார்வையை உயர்த்திய வர்ணாவின் முகம் மேலும் ஒரு கோட்டிங் பயத்தைப் பூசிக்கொண்டது.

"அம்மா அங்க... பாரு..." வர்ணா கை நீட்டிய பக்கம் பாக்யம் பார்த்தாள்.

மேலேயிருந்த படிக்கட்டுக்களிலும் சிவப்பு ஸ்டிக்கர் பொட்டுக்களை வாரியிறைத்த மாதிரி இரத்தத் துளிகள்.

"என்னவோ விபரீதம்... நாய் எங்கேடி..?"

"தெரியலேம்மா..."

"வா மேலே போய்ப் பார்ப்போம்."

"அம்மா...! எனக்குப் பயமாயிருக்கு. பக்கத்து வீட்டு ஆடிட்டர் அங்கிளைக் கூட்டிட்டு வரட்டுமா...?"

"வேண்டாம்... மொதல்ல என்னான்னு பார்க்க..."

பாக்யம் இரத்தத் துளிகளை மிதிக்காமல் படியோரமாய் ஜாக்கிரதையாய் நடந்து மேலே போக வர்ணா வியர்த்த முகமாய்த் தன் அம்மாவைப் பின் தொடர்ந்தாள்.

படிகளில் சிதறியிருந்த இரத்தத் துளிகள் அவர்கள் இரண்டு பேரையும் சிரத்தையாய் மொட்டை மாடிக்குக் கூட்டிக்கொண்டு போயிற்று.

இருட்டான மொட்டி மாடி வந்தது.

"வர்ணா...! அந்த பேக்லைட் ஸ்விட்சைப் போடு."

போட்டாள்.

மொட்டைமாடியின் கைபிடிச்சுவரில் பதிக்கப்பட்டிருந்த விளக்கு பளீரென்று எரிந்து மொட்டை மாடியின் பரப்பை வெளிச்சத்தில் நிரப்பியது.

பாக்கியமும் வர்ணாவும் தத்தம் பார்வைகளை நடுக்கமாய் அவிழ்த்து விட்டார்கள்.

(தொடர்ந்து வரும்)

# நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்

எனக்கு உடல் நிலை சரியில்லை. உடம்பின் ஒரு பக்கம் வலிக்கிறது!" என்றார். டாக்டரிடம் போகலாம் என்று அழைத்தேன். டாக்டரிடம் போக நாள் கூட குறிக்கப்பட்டது. ஆனால், அவர் வரவே இல்லை. வராததற்கு ஏதேதோ காரணங்கள் சொன்னார்.

டாக்டர் சியாமளாவிடம் "அவர் வரவில்லை!" என்று சொன்னேன். "இது நான் எதிர்பார்த்ததுதான். உன்னை அவர் நிராகரிக்கிறதுக்கான காரணம் எனக்குத் தெரியலை. வேறு 'பெண் தொடர்பு' ஏதாவது அவருக்கு இருக்கும்னு நினைக்கிறேன். நீ எதுல குறைஞ்சவ? கையில படம் இல்லையா.... பெயர் இல்லையா... அழகு இல்லையா.... இளமை இல்லையா?" என்றார் டாக்டர் சியாமளா.




புதுவீடு போகும் முன்பு எனக்குள்ளே ஒரு அவநம்பிக்கை. பால் காய்ச்சுகிற அன்று "இதெல்லாம் எத்தனை நாளைக்கோ?" என்று அம்மாவிடம்கூட சொன்னேன். "எதற்காக அபசகுனமா பேசறே?" என்றார் அம்மா.

அப்போதுகூட என் தாயாரிடம் எங்களுக்குள் இருக்கும் கருத்து வேற்றுமையைச் சொல்லவில்லை. பலநாள் இரவு நான் அழுதிருக்கிறேன். என் அம்மா கேட்கும் போதெல்லாம் 'நேற்று நிறைய கிளிஸரின் போட்டு நடிச்சேன்' என்று சொல்லி சமாளிப்பேன்.



ஆனால் என் ஹேர்டிரஸ்ஸர் என் அம்மாவிடம் விஷயத்தைப் போட்டு உடைத்தார். நான் படுகிற அவஸ்தை அவருக்குத் தெரியும். ஒவ்வொரு முறை நான் வெற்று செக்கில் கையெழுத்துப் போடும்போதெல்லாம் என்னை எச்சரிக்கை செய்வதும் என் ஹேர்டிரஸ்ஸர் தான்.

"வாழ்க்கையே போய்க் கொண்டிருக்கிறது... வெற்று செக்கை வைத்துக் கொண்டு என்ன பண்ணப் போகிறேன்? அவங்களுக்குத் தேவை பணம்தானே?" என்பேன்.

இந்த நேரத்துல எனக்கு 'யூரினல் இன்ஃபெக்ஷன்' வந்தது. டாக்டர் சியாமளாகிட்ட தான் ட்ரீட்மெண்ட் எடுத்துகிட்டேன். அதுக்காக நிறைய மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டேன். இதை எதுக்குச் சொல்றேன்னா, நான் ஜார்ஜை விட்டுப் பிரிந்த பிறகு, நான் சாப்பிட்ட அந்த மருந்துகளுக்கான சீட்டையெல்லாம் வைத்துக் கொண்டு 'எனக்கு மோசமான வியாதி இருந்ததென்று' செய்தி பரப்பினார்.

## கிரஹப்பிரவேசம்

புதுவீட்டின் கிரஹப்பிரவேசம் நடந்தது. வீடு மாறிய அதே நேரத்தில் அவரிடம் ஏராளமான மாறுதல்கள், என்னிடம் நெருக்கம் ஆகத் தொடங்கினார்.

ஆனா அவர் என்னைத் தொட்டுப் பேசறதுகூட அப்ப நான் விரும்பலை. நான் இதை அவர்கிட்டயே சொன்னேன். "நீங்க என்னைத் தொடறதுகூட நான் விரும்பலை. நடிக்கிறீங்கன்னு எனக்கு நல்லாவே தெரியுது. பொய்யா என்கிட்ட அன்பா இருக்கணும்னு நான் கேட்கலை. உண்மையா அன்பு காட்டுங்கன்னுதான் சொல்றேன்" என்றேன்.

இந்த சூழ்நிலையில்தான் 'சுவாதி திருநாள்' படப்பிடிப்பு. திருவனந்தபுரத்துல நடந்தது. ஒருநாள் படப்பிடிப்பு முடிந்தவுடனே, அங்கு இருக்கற சுப்ரமணியர் சுவாமி கோயிலுக்குப் போனேன். இந்தச் சமயத்தில் ஒரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும்.

நான் ஒரு கிருஸ்தவரை மணந்து கொண்டாலும், எந்தச் சூழ்நிலையிலும், அவங்க மத சம்பந்தமான நிகழ்ச்சிகளில் அவர் என்னைச் சேர்த்துக் கொண்டதேயில்லை. வீட்டு மாடியில பிரார்த்தனை நடக்கும். ஆனால், என்னைக் கூப்பிட மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு பணம் சம்பாதிக்கிற மெஷின், அவ்வளவுதான்.

மனசு தளர்ந்து போன நிலையில சுப்ரமணிய சுவாமி கோயில்ல "முருகான்னு" சொல்லிட்டு கண்ணை மூடிகிட்டு உட்கார்ந்திருக்கேன். அப்ப சில காட்சிகள் லாம் என் கண்ணுல ஒடுது. என் கணவர் ஜார்ஜ் என் முடியைப் பிடிச்சு அடிக்கிறார். இதெல்லாம் சினிமா மாதிரி மனசுக்குள்ள தெரியுது. பின்னாளில் சில சம்பவங்கள் நடந்தன. கோயில்ல உட்கார்ந்துகிட்டு அழறேன். அப்ப நான் கேரளாவில் ரொம்ப பாப்புலர். அங்க இருந்தவங்க எல்லாரும் என்னையே வேடிக்கை பார்க்கிறாங்க.

என்னோட ஹேர் டிரெஸ்ஸர் என்னைப் பிடிச்சு உலுக்கினாங்க. "அம்மா எல்லாரும் உங்களையே பார்க்கிறாங்க. முகமெல்லாம் கறுத்துப் போச்சு. வாங்க போகலாம்" என்றார்.

"என்னமோ நடக்கப் போவுது. பெரிசா என்னவோ நடக்கப் போவுது. அது எனக்குத் தோணுதுன்னு" அவங்க கிட்ட நான் சொல்லிகிட்டே கோயில்லேந்து திரும்பினேன்.

## விவாகரத்து

ஷூட்டிங் முடிஞ்சு சென்னை திரும்பினேன். எனக்குள் ஒரு சலிப்பு, பயம். 'இந்தத் திருமண உறவு தொடரக் கூடாது. அது ஆபத்தில் முடியும்' என்று உள்ளுணர்வு சொல்லிக் கொண்டேயிருந்தது.

பிரச்சினை தொடர்ந்து கொண்டேயிருந்தது. ஒருநாள் அவர், வீட்டு 'வார்ட்ரோப்'-ல் ஏதோ குடைந்து கொண்டிருந்தார். "நான் ஒரு கேள்வி கேட்டேன். அதுக்கு இன்னும் நீங்க பதில் சொல்லலை". நான்தான் ஆரம்பித்தேன். "எனக்கு டைவோர்ஸ் வேணும்"னேன்.

நான் சொன்னதை அவர் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. "நான் பேசிக்கிட்டே இருக்கேன். நீங்க அமைதியா இருந்தா எப்படின்னு?" கொஞ்சம் சூடாவே கேட்டேன்.

"என்ன வேணும் இப்போ?"

"டைவோர்ஸ். எல்லாரும் உட்கார்ந்து நிதானமா பேசி, சுமுகமா பிரிஞ்சி போயிடலாம்."

## ஸ்ரீவித்யா

சிறிது நேரம் மௌனம். பிறகு சட்டென்று எழுந்து போனார். கடகடன்னு நாலு பெக் அடிச்சாரு. 'தோகா'வுல இருக்கிற அவரோட தம்பிய ஃபோன்ல கூப்பிட்டாரு. 'இவளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்திடுடா' என்றார்.

ஜார்ஜ் என்னை கொடுமைப்படுத்தறது, ஃபிரெண்ட்ஸுன்னு சொல்லிகிட்டு வீட்டுக்கு கண்டவங்க வர்றது.... எல்லா விஷயமும் அவர் தம்பிக்குத் தெரியும்.

'என்கிட்ட பேசணும்'னு அவர் தம்பி சொல்லியிருக்கார். ரிஸீவரை என்னிடம் கொடுத்தார்.

"அவசரப்பட்டு எதுவும் பண்ணிடாதீங்க அண்ணி" என்றார் அவர் தம்பி.

"நான் எதுவும் சொல்ல விரும்பலேன்"னு சொல்லிட்டு ரிஸீவரை வச்சிட்டேன்.

## அடித்தார்

அடுத்த விநாடி, "என்னடி... அவன் கிட்ட என்னைப்பத்தி என்ன சொன்னே?"ன்னு கேட்டார் ஜார்ஜ். அதே வேகத்தில் என்னை அடிச்சு கீழே தள்ளினார். பொட்டு கலங்கிடுச்சு. எனக்கு; என்ன நடந்ததென்றே தெரியலை.

என்னை அவர் அடித்திருக்கிறார் என்பதை நான் உணரவே வெகு நேரமாயிற்று. இத்தனைக்கும் அவர் சகோதரரிடம் ஃபோனில் நான் அதிகம் பேசவேயில்லை. இவருடைய கோபத்திற்குக் காரணமே அவர் தம்பி கொடுத்த அட்வைஸ்தான்.

"என்னால் இனிமேல் எதையும் தாங்கிக் கொள்ள முடியாது. நான் அவரை எதிர்த்துக் கேட்டேன் என்பது உண்மை. ஆனால் எனக்கு ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும்" என்று மட்டும் அவர் சகோதரரிடம் சொல்லிவிட்டு ஃபோனை வைத்து விட்டேன். (தொடர்ந்து வரும்)

# இரண்டு வாரத் தொடர்

# நல்லவளா, கெட்டவளா?

## பட்டுக்கோட்டை பிரபாகர்

**சென்றவாரம்**

**மனோதத்துவ டாக்டரை சந்திரன் என்பவர் தேடி வருகிறார். அவரது மனைவி பெயர் நர்மதா.உமேஷ் என்று மகன் இருக்கிறான். தனக்கு ஞாபக மறதி இருப்பதாக கூறுகிறார். மனைவிமீது சந்தேகம் தெரிவிக்கிறார். அலுமாரியில் கருத்தடைச் சாதன பாக்கெட்டை கண்டதாகவும், அதனை தான் வாங்கியதாக மனைவி கூறியதாகவும், ஆனால் தான் வாங்கவில்லை என்றும் கூறுகிறார். டாக்டருக்கோ குழப்பம்.**

**இனி....**

"அப்படித்தான் நானும் சமாதானப்படுத்திக்க நினைச்சேன் டாக்டர். ஆபீஸ்ல இதைப் பத்தியே யோசிச்சிட்டிருந்தப்போ ஒரு ஐடியா! இப்ப கிடைச்ச பாக்கெட்ல தயாரிப்பு தேதி என்ன போட்டிருக்காங்கன்னு பார்த்தா உண்மை தெரிஞ்சிடுமே. அவ சொன்னது உண்மைன்னா ரெண்டு வருஷத்துக்கு முந்தைய வருஷம் தானே பாக்கெட்ல போட்டிருக்கும்!"

"உங்க பிரெய்ன் பிரிலியண்டா இருக்கு." என்று கூறிய டாக்டரை சந்திரன் அடுத்ததாக கூறிய வார்த்தைகள் தூக்கி வாரிப் போட்டன.

"ஆனா நர்மதா என்னை விட பிரிலியண்ட் டாக்டர். எனக்கு அந்த ஐடியா வந்த உடனே வீட்டுக்கு வந்து தனியா எடுத்து வெச்சிருந்த அந்த பாக்கெட்டைத் தேடினேன். கிடைக்கலை. 'எங்கடி?'ன்னு கேட்டேன். 'பையன் கண்ல பட்டா கேள்வி கேப்பான்னு எரிச்சுட்டேன்'னு சொன்னா டாக்டர்."

"அதுவும் அவங்க இயல்பா செஞ்சிருக்கலாமே!"

"செஞ்சிருக்கலாம். அதானே இப்ப என் பிரச்சனையே! அவ இயல்பா எரிச்சாளா, இல்லை மாட்டிக்கக் கூடாதுன்னு எச்சரிக்கையா எரிச்சாளா? அவ நல்லவளா? கெட்டவளா? எனக்கு ரொம்ப டென்ஷனா இருக்கு டாக்டர். அவ நிஜமாவே கோவிலுக்குப் போனாலும், கோவிலுக்குத்தான் போறாளான்னு மனசு கொக்கி போடுது. 'இன்னிக்கு வேணாம், டயர்டா இருக்குது'ன்னு சொன்னா. எதுக்கு இப்படிச் சொல்றான்னு கேள்வி குடையுது டாக்டர். என் ஞாபக மறதியை அவ எக்ஸ்ப்ளாய்ட் பண்ணிட்டாளா? இல்லை, ஒவ்வொரு சம்பவத்திலயும் என் ஞாபக மறதிதான் சதி செஞ்சிருச்சா? சொல்லுங்க டாக்டர், எனக்கு எப்படித் தூக்கம் வரும்?

"உங்க பிராப்ளம் எனக்குப் புரியுது சந்திரன். இந்த மனசுக்கு அபாரமான கற்பனைச் சக்தி உண்டு. நிறையப் பிரச்சனைகள் இப்படி கற்பனைகளால வர்றது தான். இது தாம்பத்தியத்தில மட்டும் இல்லை, ஒரு முதலாளி தன் தொழிலாளியை சந்தேகப்பட்டாலும் சரி, ஒரு நண்பன் தன் நண்பனைச் சந்தேகப்பட்டா லும் சரி... நிம்மதி போயிடும். கற்பனை உள்ளே வந்திடும். ஒவ்வொரு சம்பவத்துக்கும் அந்தக் கற்பனை அழகாக வர்ணம் தீட்டும்."

சந்திரன் கை கட்டி அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"நீங்க லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக் கிட்டதாச் சொன்னீங்க ரைட்?"

"ஆமாம்."



"லவ் மேரேஜ்ல இந்த மாதிரி துரோகத்துக்கு வாய்ப்பு இல்லை சந்திரன். உங்ககிட்ட எதிர்பார்த்தது ஏதாச்சும் கிடைக்கலைன்னா தான் ஏமாற்றம் வரும். உங்களை லவ் பண்ணி மேரேஜ் பண்ணிக்கிட்டு ஏன் துரோகம் செய்யப்போறாங்க?"

"அவ துரோகம் பண்ண மாட்டான்னு தான் நம்பறேன். ஆனா..."

"இந்த 'ஆனா'வுலதான் பிரச்சனையே ஆரம்பமாகுது. உங்க மனைவியை நீங்க நூறு சதவீதம் லவ் பண்றீங்களா?"

"கண்டிப்பா!"

"அப்போ நூறு சதவீதம் நம்பிக்கை வைங்களேன். ஒரு பர்சண்ட் சந்தேகம் உள்ளே வந்துட்டாலும் போச்சு."

"வந்துடுச்சே டாக்டர்! அவ நல்லவளா? கெட்டவளாங்கற கேள்வி என்னை அரிக்குதே"

"ஓ.கே. உங்க சந்தேகங்கள் எல்லாமே உங்க யூகங்கள்தானே? ஏதாச்சும் ஆதாரம் இருக்கா?"

"அவ ஆதாரத்தை அழிச்சுட்டாளோன்னு...."

"பார்த்தீங்களா? மனசு மறு படி விஷமமா நினைக்குது."

"விஷமம்தான். ஆனா நினைக்குதே!"

"ஏதாவது கண்ணால பார்த்தீங்களா?"

"பார்த்துடப் போறேனோன்னு பயமா இருக்கு டாக்டர்."

"நீங்க படிச்சவர். இதைப் பத்தியே சுத்திச் சுத்தி சிந்திச்சிருக்கீங்க. அதான் உங்களுக்கு மனசு சமாதானமாக மாட்டேங்குது. முதல்ல நல்ல தூக்கம் வேணும். டென்ஷன் குறையணும். அதுக்கு மெடிசன்ஸ் தர்றேன். பத்து நாள் லீவு போட்டுட்டு உங்க மனைவியோட ஒரு டூர் போயிட்டு வாங்க. அவங்களை எந்தக் கேள்வியும் கேட்காதீங்க. அவங்களைச் சந்தேகப்படறதா நேரடியாச் சொல்லிட்டீங்களா?"

"இல்லை. ஒவ்வொரு விளக்கத்துக்கும் நான் சமாதானமாயிட்ட மாதிரி நடிச்சிட்டிருக்கேன்."

"நடிக்காதீங்க. நிஜமாவே நீங்க சமாதானமாயிட்டீங்க."

"இல்லையே, ஆகலையே."

"நான் எழுதித்தர்ற மெடிசன்ஸ் சாப்பிடுங்க. நான் சொல்றபடி நடந்துக்கங்க. சமாதானமாயிடும். உங்க அட்ரஸ் கொடுங்க. நாளைக்கு நான் உங்க வீட்டுக்கு வர்றேன். உங்க மனைவீ கிட்ட என்னை உங்க கம்பெனிக்குப் புதுசா வந்திருக்கிற ஆபீஸர்ன்னு சொல்லி அறிமுகப்படுத்துங்க. அவங்களோட கொஞ்ச நேரம் பேசிப்பார்க்கறேன்."

"ஓ.கே. டாக்டர். பேசிப் பாருங்க. உங்க ஜட்ஜ் மெண்ட் கரெக்ட்டா இருக்கும். நீங்க சைக்காலஜி படிச்சவர். எப்படியாவது அவ நல்லவளா கெட்டவளான்னு தெரிஞ்சி சொல்லிடுங்க டாக்டர்." என்றான் சந்திரன் டாக்டரின் கையை முன்வந்து குலுக்கினான்.

டாக்டர் செல்வகுமார் லிஃப்டில் நான்காவது மாடிக்கு வந்து தன்னிடம் இருந்த விலாசச்சீட்டை சரி பார்த்துக்கொண்டு அழைப்பு மணியை அழுத்தியதும், கதவைத் திறந்தான் சந்திரன். கைலி, பனியனில் இருந்தான். கையில் சோப்பு நுரை.

"வாங்க டாக்டர், துவைச்சிட்டிருந்தேன்" என்று கைலியில் துடைத்துக்கொண்டு, கை குலுக்கி உள்ளே அழைத்தான். சோபாவில் அமர வைத்து, கதவை அவசரமாக மூடி விட்டு வந்து அருகில் அமர்ந்தான்.

"என்ன, என் வைஃபைத் தேடறீங்களா? என் பிரச்சனை, நேத்தோட தீர்ந்துடுச்சி டாக்டர்." என்றவன் குரலைக் குறைத்து, "நேத்து உங்களைப் பார்த்துட்டு வீட்டுக்கு வந்தப்போ எதைப் பார்த்துடக் கூடாதுன்னு நினைச்சேனோ அந்தக் காட்சியைப் பார்த்துட்டேன் டாக்டர்!" என்றான்.

"மை காட்!"

"யெஸ்! அவளும் அவனும் கையும் களவுமா மாட்டிக்கிட்டாங்க! என்ன சொல்லிச் சமாளிப்பா அவ! அவன் உடனே ஓடிட்டான். இவ என் கால்ல விழுந்து அழுதா. மன்னிச்சிடச் சொல்லிக் கெஞ்சினா. மன்னிக்க முடியுமா டாக்டர்! எனக்கு துரோகம் செஞ்சதுகூட வலிக்கலை. என்னை முட்டாளாக்கி... பைத்தியமாக்கி... உங்ககிட்ட வர்ற அளவுக்கு செஞ்சி.. எப்படி டாக்டர் மன்னிக்கிறது?"

"என்ன செஞ்சீங்க?" பதறினார் டாக்டர்.

"பக்கத்துல ஒரு குத்து விளக்கு இருந்திச்சி, எடுத்து ஒரே குத்து! ரூம் பூரா இரத்தம்! செகண்ட்ஸ்ல செத்துடா! என் ஃபிரண்டோட கார் எடுத்துக்கிட்டு வந்தேன். வாட்ச்மேனுக்கு ரெண்டாயிரம் கொடுத்தேன். நடு இராத்திரி பெட்ஷீட்ல பெட்ரோல் ஊத்தி எரிச்சுட்டோம். வீட்டைக் கழுவித் தள்ளிட்டோம். என் சட்டையில இரத்தக் கறை மட்டும் போகலை. அதான் மறுபடியும் துவைச்சுட்டு இருக்கேன். நீங்க வந்துட்டீங்க. இன்னும் கொஞ்ச நேரத்துல இந்த ஊரை விட்டே போகப்போறேன். ப்ளீஸ்... டாக்டர், நீங்க பொலிஸ்கிட்ட சொல்லிட மாட்டீங்களே?" என்று அவர் கையைப் பிடித்துக் கொண்டான்.

டாக்டர் அதிர்ச்சியில் உறைந்திருந்தார்.

"உங்க.... உங்க... பையன்?"

"அட... ஆமாம்! அவனை நான் என்ன செஞ்சேன்?" என்றான்.

சந்திரன் யோசித்து விட்டு, "இதோ வர்றேன்" என்று ஒரு அறைக்குள் சென்றான்.

இப்போது மற்றொரு அறையில் இருந்து ஐம்பது வயது அம்மா தூக்கக் கலக்கமாக வெளிப்பட்டு, "யாரு? என்ன வேணும்?" என்றார்.

"நான் ஒரு டாக்டர், சந்திரன் நேத்து என்கிட்ட வந்து... ஆமா, நீங்க?"

"அவன் அம்மாங்க. வெளில போகாதேடான்னாலும் கேக்றதில்லை. என்ன சொன்னான் உங்ககிட்ட? தப்பா நினைக்காதீங்க. மைண்டு சரியில்லை. நல்லாப் படிச்சி நல்ல வேலையிலதான் இருந்தான். லவ் செஞ்சான். திடீர்னு அந்தப் பொண்ணு நர்மதா லாரி மோதி செத்துடுச்சி. அதிலேர்ந்து சரியில்லை. திடீர்னு எனக்கு கல்யாணமாயிடுச்சிம்பான். திடீர்னு எனக்கு ஒரு பையன் பொறந்திருக்கான்ம்பான். அவன், வேற ஒரு உலகத்தில வாழ்ந்துட்டு இருக்கான்" என்றார்.

அறைக்குள்ளிருந்து வெளியே வந்த சந்திரன், "டாக்டர், என் பையனை நான் என்ன செஞ்சேன்னு தெரியலையே..." என்றான் கண்ணீரோடு.

(முற்றும்)

**அடுத்த வார முரசில்**

**அசத்தப்போகும் புதிய தொடர் எது?**

**அடுத்தவாரம் வரை சஸ்பென்ஸ்**

---

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

—கண்ணதாசன்—

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 09**

'மா பெரும் தலைவருக்கு மா பெரும் கோபமே அதில்தான் வரும்' என்பது அவருக்குத் தெரியும்.

தான் பார்த்த பெண்ணை இன்னொருவர் பார்ப்பதை அவர் சகிக்க மாட்டார் என்பதை, நன்றாகப் புரிந்து வைத்திருப்பவர் தங்கசாமி.

அந்தப் பெண்களைச் சந்திக்கும் போதே சொல்லிவிடுவார், "என்னைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாதீர்கள்!" என்று.

இப்போது தங்கசாமியும், சந்திரசூரியனும் உலக க்ஷேமத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

எடுத்த எடுப்பிலேயே சந்திரசூரியன் சொன்னார், கட்சியின் செயற்குழுவில் சிலரைத் தான் நீக்கி இருப்பதாகவும், சிலரைச் சேர்த்திருப்பதாகவும்.

"ஆகா! அப்படியே செய்யுங்கள். அந்த அதிகாரம் தங்களுக்குத்தானே உண்டு!" என்றார் தங்கசாமி.

"நம்முடைய கட்சியின், மாதர் சேவா சங்கப் பிரிவைச் சேர்ந்த லட்சமியோடு, மதுரை ராமன் அடிக்கடி சுற்றுகிறாராம். ஆகவே இனிமேல் அவரை கூட்டங்களுக்குக் கூப்பிட வேண்டாம் என்று பத்திரிகையில் அறிவிப்புக் கொடுத்து விடுங்கள்!" என்றார் சந்திரசூரியன்.

"நல்லது!" என்றார் தங்கசாமி.

பிறகு கட்சியின் செயற்குழுவில் வைக்கப்போகும் தீர்மானங்களை ஒவ்வொன்றாக சந்திரசூரியன் கூறினார்.

தீர்மானம் ஒன்று: "நெல்லைத் தனியாகவும், கோதுமையைத் தனியாகவும் பயிரிடும் முறையை இந்தச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இரண்டையும், சேர்த்தே பயிரிடுமாறு தமிழக அரசை இந்தச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது. அப்படிச் செய்யாவிட்டால், மந்திரிகளின் வீடுகளுக்கு முன்னால் கோதுமையையும் அரிசியையும் சேர்த்துச் சமைத்து, 'உண்ணும் விரத'ப் போராட்டத்தை மக்கள் கட்சி ஆரம்பிக்கும் என்று இந்தச் செயற்குழு எச்சரிக்கிறது."

தீர்மானம் இரண்டு: "அரசாங்கத்தில் இருப்பவர்கள் லஞ்சம் வாங்குவது தடுக்கப்பட வேண்டும். அப்படி வாங்குவதென்றால் செக்காகவோ, டிராப்டாகவோ தான் வாங்க வேண்டும் என்று இந்தச் செயற்குழு கருதுகிறது."

தீர்மானம் மூன்று: "இருபத்தைந்து வயதிற்கு உட்பட்டவர்கள் சினிமாவில் கதாநாயகர்களாக நடிப்பதை இந்தச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. ஐம்பது வயதுக்கு மேல்தான் நடிக்க வேண்டும் என்று ஒரு சட்டம் செய்யுமாறு இந்தச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது."

தீர்மானம் நான்கு: "கடிகாரத்தில் ஒரு நாளைக்கு இருபத்து நாலு மணி நேரம் என்று வருவதை இனிமேல் தசாம்ச கணக்கில் இருபது மணி நேரமாக மாற்றும்படி இந்தச் செயற்குழு யோசனை தெரிவித்துக் கொள்கிறது."

ஒவ்வொரு தீர்மானத்தையும் படிக்கப் படிக்க தலைவர் தங்கசாமி, "சபாஷ்! சபாஷ்!" என்றார்.

அப்படிச் சொல்லாவிட்டால் தன் பதவி போய்விடும். என்பது, அவருக்குத் தெரியும்.

"இந்தத் தீர்மானங்களைச் செயற்குழுவில் வைக்க வேண்டும். இவற்றை எதிர்த்து யாராவது பேசினால். அவர்களைக் கட்சியிலிருந்து நீக்கி இருப்பதாக அறிவித்து விட வேண்டும்!" என்றார் சந்திரசூரியன்.

அப்போது டெலி'ஃ'போன் மணியடித்தது.

ஒரு பத்திரிகை ஆபீஸிலிருந்து தலைவர் சந்திர சூரியனை அழைத்தார்கள்.

"இன்றே எழுதி அனுப்பிவிடுகிறேன்" என்று சொன்ன சந்திரசூரியன் டெலி'ஃ'போனைக் கீழே வைத்தார்.



திரும்பி தங்கசாமியிடம், "பத்திரிகைக்காரர்கள் உயிரை வாங்குகிறார்கள். 'ஜனநாயகத்தைக் காக்கும் வழிகள்' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டுமாம்! நீங்கள் போய்ச் செயற்குழுவுக்கான வேலைகளைத் தொடங்குங்கள்!" என்று அவரை அனுப்பிவிட்டு, தனது 'செயற்குழு' இருக்கும் அறைக்குள் நுழைந்தார்.

ரஸலீலா ஆரம்பமாகும் சமயம். யாருடைய அனுமதியும் இல்லாமல் எங்கேயும் நுழையக் கூடிய திருமதி விஜயா வேதாசலம் உள்ளே நுழைந்தபடி, "என்ன நான் வேண்டாமா?" என்றார்.

"அநுமார் இல்லாத ராமாயணமா? உட்கார்" என்றார் சந்திரசூரியன்.

விஜயா வேதாசலம் அவரை அப்படியே கட்டியணைத்து ஒரு முத்தமிட்டார்.

"இனி இதெல்லாம் செய்யாதே, உனக்கு வயதாகிவிட்டது!" என்றார் சந்திரசூரியன்.

எப்போதுமே மற்றவர்கள் வயதை அவர் ஞாபகப்படுத்துவாரே தவிர, தன் வயதை யாராவது ஞாபகப்படுத்தினால் அவருக்குக் கோபம் வந்துவிடும்.

அதனால் தனக்கு வயதாகிவிட்டது என்பதை மவுனமாக ஒப்புக்கொண்டார், விஜயா வேதாசலம்.

"இந்தப் பெண்ணைப் பார்த்தாயா? பால் மாதிரி பளபளவென்றிருக்கிறாள்!" என்று பதினாறு வயதான ஒரு பெண்ணை அவர் சுட்டிக் காட்டினார்.

மறுபடியும் டெலி'ஃ'போன் மணி.

கோடம்பாக்கத்தில் சில குடிசைகள் எரிந்து விட்டனவாம்!

சந்தர்ப்பத்தை விடுவாரா சந்திரசூரியன்!

"அப்பாடா! ஆறுமாத காலம்... இந்த வாய்ப்பே இல்லை. எடு ஆயிரம் ரூபாயை!" என்று சட்டையை மாட்டினார்.

(அந்தரங்கம் வரும்)



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

> "அந்த ஆறுதல் நொடிப் பொழுதில் தகர்ந்தது. அவள் வசிக்கும் திசையில் வெடிச்சத்தங்கள்....."

மாலை மணி ஏழு தான் ஆகியிருந்தது. இருந்தும் இருள் கும்மிருட்டாக எங்கும் சூழ்ந்து பரந்து வியாபித்திருந்தது. இரண்டு 'ஹெலிக்கொப்டர்கள்' வானத்திலே தாழப் பறந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

அங்கொன்றும் இங்கொன்றுமாக சில இடங்களில் கேட்கும் வெடிச்சத்தங்கள் ஊர் மக்களை கிலிகொள்ள வைத்துக் கொண்டிருந்தன. தெருக்கோடிகளிலிருக்கும் நாய்களின் குரைப்புக்களும் அதனைத் தொடர்ந்து சில முனகல் ஒலிகளும் துல்லியமாகக் கேட்டவண்ணமிருந்தன.

சாரதாவிற்கு இருப்பே கொள்ளவில்லை. அவள் குட்டிபோட்ட பூனைபோல துடித்துக் கொண்டிருந்தாள்.

அவளைப் பொறுத்தவரை இந்தக் ஹெலி, குண்டு எல்லாம் பழக்கப்பட்ட ஒன்றுதான்; ஆனால் இப்பொழுது அவளின் உயிரான கணவன், காலையில் விறகுக்கு காட்டிற்குப் போனவன் இன்னமும் வீடு வந்து சேரவில்லை. அவளின் அதிகரிக்கின்ற துடிப்பிற்கும், பயத்திற்கும் அதுதான் காரணமாயிருந்தது.

வழக்கத்திற்கு மாறாக காலை ஆறு மணிக்கே புறப்பட்டவன், மூன்று மணிபோல் திரும்பியிருக்க வேண்டியவன், இரவு ஏழு மணியாகியும் வரவில்லையென்றால்..?

# விடியாத பொழுதில்!



## களுவாஞ்சிக்குடி-யோகன்

இப்படித்தானே ஒரு சித்திரை மாதத்தில் செல்லம்மாக்காவின் புருஷனும் விறகுக் காட்டிற்குப் போனவர்; போனவர் போனவர் தானே...!

இப்பொழுது உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? என்ற எந்தத் தகவல்களுமே தெரியாமல் காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு செல்லம்மாக்கா படுகின்ற வேதனையும் அனுபவிக்கின்ற துயரமும் அவள் அறியாததா என்ன?

இவைகளை நினைக்கும்போதுதான் சாரதாவிற்கு இதயத்துடிப்பே நின்றுவிடும் போலிருந்தது.

எல்லாவற்றையும் விட அவளின் வீட்டில் இன்று ஒரு சிறிய விசேஷம்.

அவளின் பெரியமகள்- கேட்கும் சக்தியை இழந்த மூத்த மகள்- இன்று காலைதான் பெரியவளாகியிருந்தாள். இது அவளின் கணவனுக்குத் தெரியாது. இதை அவன் அறிந்திருக்கவில்லை.

மதியம் அவளுக்குப் பத்தியமாகச் சமைத்துக் கொடுத்து அவளைப் பராமரித்த சாரதா கணவன் வந்ததும் இந்தச் சிறிய சந்தோஷத்தைப் பகிர்ந்துகொண்டு சேர்ந்து சாப்பிடலாம் என்று காத்திருக்கத் தொடங்கினாள்.

ஆனால் அவளது காத்திருப்பு என்பது பயனற்றுக் கொண்டே போனது. அப்பொழுதிலிருந்தே சுற்றத் தொடங்கிய 'ஹெலி' இன்னமும் நிற்பதாக இல்லை. அவளுக்கு எதுவுமே செய்யத் தோன்றவில்லை.

"கடவுளே என் கணவருக்கு எதுவுமே ஆகக்கூடாது. அவர் ஒழுங்காக வீடு வந்து சேரவேணும்." இப்படித் தனது இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொண்டிருந்தாள். அந்த நேரம் பக்கத்து வீட்டுப் பூபதி அக்கா ஓசைப்படாமல் மூச்சிரைப்போடு அவளின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

"பிள்ளையார் கோவிலடியில இரண்டு ஆம்பிளைகளின்ர சடலம் கிடக்காண்டி. சாரதா, எனக்கெண்டா ஒன்றுமே விளங்கேல்ல..." அங்கலாய்ப்போடும், வேதனையோடும் குசுகுசுத்துவிட்டு நகர்ந்தாள்.

சாரதா துடித்துப்போனாள். அது அவளின் உயிரானவன் வருகின்ற பாதை. தலையிலடித்துக்கொண்டு கதறினாள்.

அவள் வீட்டைவிட்டு வெளியேறியே விட்டாள். குனிந்து, தவழ்ந்து, ஊர்ந்து, நடந்து ஊர் எல்லையிலுள்ள பிள்ளையார் கோவிலடிக்கு வந்தாள்.

கிட்டத்தட்ட இரண்டு கிலோமீட்டர் தூரம். அவளுக்கு அதெல்லாம் தெரியவே வாய்ப்பிருக்கவில்லை.

கோயிலுக்கு அண்மித்த பகுதியொன்றில் கட்டடமொன்று எரிந்து புகையைக் கக்கிக் கொண்டிருந்தது.

அந்தத் திகிலான நேரத்திலும் அந்தப் பிரதேசங்களின் அருகில் நின்று அவளைப் போன்று சிலர் அவைகளை அடையாளங் காண முனைந்து கொண்டிருந்தனர்.

சாரதாவும் கடவுளை வேண்டினாள். கண்களைத் தேய்த்து, ஊன்றி பக்கத்தில் ஒருவர் வைத்திருந்த வெளிச்சத்தின் உதவியுடன் பிரேதங்களை நோக்கினாள்.

பிரேதங்கள் 'ஷெல்' வீச்சில் சிதைந்திருந்தாலும் நல்லவேளை முகங்களை அடையாளங் காணக்கூடியதாக இருந்தது. அதில் தனது கணவன் இல்லையென்று உறுதி செய்தது அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

இருந்தும் அந்த ஆறுதல் நொடிப்பொழுதில் தகர்ந்தது. இப்பொழுது அவள் வசிக்கும் திசையில் வெடிச்சத்தங்களும், 'ஹெலி' ஊர்வதுமாக அந்தத் திசையே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

பதறியடித்துக் கொண்டு மீண்டும் வீடு நோக்கி ஓடத்தொடங்கினாள் சாரதா.

அவள் குடியிருக்கும் பகுதிகளின் மேல் ஊர்ந்த 'ஹெலி'யிலிருந்து வெளிப்பட்ட மின்னல் கீற்றுப்போன்ற ஓர் ஒளி கிறீச் சென்று காற்றைக் கிழித்துக்கொண்டு பூமியில் வந்து விழுந்தது. இடிச்சத்தத்துடன் அது வெடித்தது.

சாரதா தன் வீட்டுப் பகுதியை அண்மித்தபோது கண்ட காட்சி நெஞ்சையே உறைய வைத்துவிட்டது.

எதையுமே அனுமானிக்க முடியாத அந்த இருட்டு நேரத்திலும் அவளின் வீட்டுப் பகுதி தரைமட்டமாகக் காட்சியளித்தது தெரிந்தது.

மரண ஓலங்கள் எழுந்தன. கூக்குரல்கள் கேட்டன. இப்போதவளுக்குக் கணவனின் நினைவு மறைந்து குழந்தைகளின் ஞாபகம் எழுந்து வதைத்தது.

"கடவுளே! என் குழந்தைகள் எங்கே? என்ர வீடு எங்கே? காலையிலதான் பூப்பெய்திய என் குஞ்சு எங்கே?" பெற்ற வயிறு நெருப்பாய்க் கொதித்தது. பதறினாள். வயிற்றில் அடித்து அடித்துக் கதறித் துடித்தாள் சாரதா.

அவள் குமுறி, அழுது, ஓய்ந்து நிலத்திலே சரிந்தாள். அப்பொழுது அந்தப் பலவீனமடைந்த நிலையிலும் அவளுக்குள் ஓர் உணர்வு. தனது சேலைத்தலைப்பை யாரோ பிடித்து இழுக்கும் உணர்வு. மெதுவாகக் கண்களைத் திறந்து உற்று நோக்கினாள்.

தட்டுத் தடுமாறி "அம்மா அம்மா" என்று ஏதோ சொல்லத்துடிக்கும் இரண்டாவது மகள் எரிகாயங்களின் அகோரத்துடன் நின்றிருந்தாள்.

"மகளே அக்கா எங்கேயடி?" சாரதாவின் கூக்குரல் வானைப் பிளந்து எதிரொலித்துக் கேட்டது.

எரிந்து கொண்டிருக்கும் நெருப்பு வளையங்களை நோக்கி அந்த மகள் கைகளைத் தூக்கிக் காட்டுவதற்கு முனைந்தாள். காலையில் பூத்த புத்தம் புதிய மலரொன்று மாலையில் எரியும் நெருப்பில் கருகிக் கொண்டிருந்தது.

---

அந்தப் பொன்மாலைப் பொழுதில் நகரத்தின் மின் விளக்குகள் கண் விழித்துக்கொண்டன. அருண் ஆத்திரமிகுதியில் தன் நடையின் வேகத்தைக் கூட்டினான். எங்கே போவது? என்று அவன் கால்களுக்குத் தெரியவில்லை. கண்கள் மட்டும் நீரைச் சொரிந்து அவன் பார்வையை மறைத்தது.

அவனைச் சுற்றி நடமாடிய மனிதக் கூட்டங்கள் அவனுக்கு எரிச்சலூட்டியது. தான் வீட்டுக்குத் திரும்பி மீண்டும் அம்மா முகத்தில் முழிக்கப்போவதில்லை என்ற தீர்க்கமான முடிவுடன் ரயிலுக்குக் காத்திருந்தான்.

வாழ்ந்துதான் என்ன பயன்? என்ற எண்ணம் அவனுள் கறையானாய் அரித்தது. "வண்டிவர ஒரு மணி லேற்றாகும்" என்ற நிலைய அறிவித்தல் கேட்டு அருண் அலட்டிக் கொள்ளவில்லை.

சனங்களின் பரபரப்பும் முறுமுறுப்பும் அவன் காதுக்கு எட்டவில்லை. அமைதியாக நடந்து, அந்த மேடையில் போடப்பட்டிருந்த இருக்கை ஒன்றின் ஓரத்தில் உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

கண்டியில் உள்ள தன் நண்பனின் வீட்டுக்குப் போவதா? இல்லை ஓடும் ரயிலில்

# மறைக்காதே...



இருந்து குதித்து உயிரை மாய்ப்பதா? என்று குழம்பினான். இடையிடையே அவன் கண்களில் முட்டிய நீரை அருண் தன் புறங்கையால் அழுந்தத் துடைத்துக் கொண்டிருப்பதை, அவனருகில் இருந்த ஒரு வயதானவர் கவனித்தார்.

"ஏன் தம்பி நீ எங்கே போறே?" கனிவுடன் அவர் கேட்டார்.

"யமலோகத்துக்கு!" நறுக்கென்று பதிலளித்த அருண் வெறுப்புடன் மறுபக்கம் பார்த்தான்.

வயதானவர் வாய்விட்டுச் சிரித்தார். "வடே வடே..." வியாபாரஞ் செய்து நின்ற இளைஞனிடம் இரண்டு வடைகளை வாங்கி ஒன்றை அருணிடம் நீட்டினார் அந்த வயோதிபர். அருண் அதை வாங்க மறுத்தான். வேறொரு இடத்தில் போய் உட்கார எழுந்தவனின் கையைப் பிடித்து இருத்தினார் வயோதிபர்.

"தம்பி நீ எமலோகம் போவதாய்ச் சொன்னியே அங்கு என்ன சாதிக்கப் போகிறாய்?"

"நான் பூலோகத்தில் இருந்து என்ன சாதிக்கப்போகிறேன்?" என்று எதிர்க் கேள்வி போட்டான் அருண்.

"அப்போ காதலில் தோல்வியா? இல்ல பரீட்சையில் பூஜ்யமா?" வயோதிபர் மெல்லியதாய் புன்னகைத்தார்.

"இரண்டுமில்ல," என்று சத்தமாய்க் கத்தினான் அருண்.

"தம்பி வாழ்க்கையில் சுகங்கள் மட்டுமில்ல சுமைகளும் இருக்கும். சுமைகளுக்குப் பயந்து சாக நெனச்சா சுடுகாடுதான் மிஞ்சும். வருவதை ஏற்று வாழும் வழியைக் காண்பதே அறிவு!" என்று சொல்லிவிட்டு அருணை ஏறெடுத்தார் அவ்வயோதிபர்.

"ஐயா...! என் கதையைக் கேட்டா நீங்களும் என் வழிக்கே வருவீர்கள்." சொல்லிவிட்டு நடந்துவிட்ட நிகழ்வை அவர் முன் கொண்டுவந்து நிறுத்தினான் அருண்.

"ஒரு காலத்தில் எங்கள் குடும்பம் வசதியாய் இருந்தது. என் தந்தை ஒரு பிரபல வியாபாரி. திடீரென்று வியாபாரத்தில் நஷ்டம், கடன் தொல்லையால் கடை கை மாறிற்று. கவலை என் அப்பாவைப் படுக்கையில் தள்ளியது. இந்த சந்தர்ப்பத்தில் தான் நான் பல்கலைக்கழகம் போகத் தகுதி பெற்றேன்.

குடும்பத்தைக் கவனிப்பதா? படிப்பைத் தொடருவதா? என்று குழம்பியபோது என் அக்கா, "டேய் அருண்! கெம்பஸ் போய் படிக்கக் குடுத்து வைக்கணும். நீ படி, நான் வேலைக்கு- அதான் சவூதிபோய் ரெண்டு வருஷம் வேலை செய்யிறன். நம்ம கஷ்டம் தொலைஞ்சிடும்!" என்றபோது வேறு வழியின்றி எல்லாரும் சம்மதிச்சம். இப்போ அக்கா தயவில ஓரளவு வசதியாயிருக்கிறம்." சொல்லிவிட்டு வயோதிபரைப் பரிதாபமாகப் பார்த்தான் அருண்.

"சீக்கிரம் சொல்லுப்பா. ரயில் வரப் போகுது." வயோதிபர் அருணை அவசரப் படுத்தினார். பெருமூச்சுடன் அருண் தொடர்ந்தான்.

"மூன்று வாரங்களுக்கு முன் எங்க வீடு களை கட்டியது. என் அக்காவுக்குக் கல்யாணம் ஜாம் ஜாமென்று நடந்து முடிந்தது. மாப்பிள்ளை வசதியான குடும்பம். சுமாரான உத்தியோகம். எங்க வீட்ல எல்லாருக்கும் தலைகால் தெரியாத சந்தோஷம். புதுத் தெம்புடன் அக்காவுக்காகச் செய்ய வேண்டியதெல்லாம் செய்தோம். மாப்பிள்ளை தனிக்குடித்தனம்போக விருப்பந் தெரிவித்தார். அக்காவைப் பிரிவது மனதுக்குக் கஷ்டமென்றாலும் மறுப்புச் சொல்ல முடியவில்லை.

அந்த நாளும் வந்தது.... 'ஏய் அமுதா! நல்லாக் கேட்டுக்கடி. புருஷனோட வாழப் போறே ஒளிவுமறைவுகூடாது. கட்டினவனிட்ட எதையும் மறைக்கப்படாது. புரிஞ்சு கொண்டு புத்தியா நட.' கண்ணீரில் வார்த்தைகளை நனைத்து வழியனுப்பி வைத்தாள் அம்மா."

"அப்புறம் என்னாச்சு?" எங்கே ரயில் வந்துவிடுமோ? என்று அவசரப்படுத்தினார் வயோதிபர். அவருடைய முகத்தில் ஆவல் பரபரத்தது.

## ரூபராணி

"என்ன ஆகனும் ஐயா. நேற்று ஞாயிறு மாலை ஏழுமணி இருக்கும். எங்கள் வீட்டு கோலிங்பெல் அலறியது. கதவைத் திறந்த போது வாசலில் வாடிய சருகாய் பெட்டியுடன் வந்து நின்றாள் அக்கா.

"என்னடி இந்தநேரம் தனியா- மாப்பிள்ளை இல்லாம?" அம்மா தவித்தாள். உள்ளே வந்த அமுதா பதிலேதும் சொல்லாமல் தேம்பி அழுதாள்.

"என்னாச்சு?" நான் பொறுமையிழந்து கத்தினேன்.

"நான் சவூதியில் பணிப்பெண்ணா இருந்த செய்தி அவருக்கு தெரிஞ்சுபோச்சி!" அதிர்ச்சியில் ஆடிப்போனோம் நாங்கள்.

"அதெப்பிடித் தெரியும்?"அப்பா ஆச்சரியத்தில் வாய் பிளந்தார். அக்கா அம்மாவைக் கவலையுடன் பார்த்தாள்.

"புருஷனிட்ட எதையும் மறைக்கப்படாதெண்டு அம்மா சொன்னா, அதனால நான் தான்..."அக்கா வார்த்தையை முடிக்கும் முன் அப்பாவின் கோபம் அம்மாவில் தாவியது.

எல்லாம் அம்மாவால் வந்த வினை என்று எண்ணியதும் எனக்கு வீட்டிலிருக்கப் பிடிக்கல. உயிர்வாழப்பிடிக்கல." முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு குழந்தையைப் போல் அழுதான் அருண்.

வயதானவர் உரத்துச் சிரித்த சத்தங் கேட்டு அருண் அவரை வெறுப்புடன் பார்வையால் சுட்டான்.

"இதபார். உன் அம்மாமேல எந்தத் தப்புமில்ல, உன் அக்கா எதையும் மறைக்காம உண்மையைச் சொன்னதால பொறந்த வீட்டுக்கு வந்தா. என் பேத்தி சின்ன வயசில யாரையோ காதலிச்சதச் சொல்லாம மறைச்சதால அவ புருஷன் அவளத் தள்ளி வச்சிட்டான். சொன்னாலுங் குற்றம், சொல்லாவிட்டாலுங் குற்றம்."

ரயில் வண்டி பேரிரைச்சலுடன் வந்து நீண்டதோர் மூச்சு விட்டு நின்றது. வயோதிபர் எழுந்து வண்டியை நோக்கி நடந்தார். அருண் அசைய மறந்து உட்கார்ந்திருந்தான்.

---

அந்த அறைக்குள்ளே கொண்டு சென்றார்கள். ஜன்னல் கதவுகளெல்லாம் நன்றாகவே பூட்டப்பட்டிருந்தன. ஜன்னலுடன் இணைந்ததாக செய்யப்பட்டிருந்த 'லுவர்ஸ்' வேலைப்பாடுகளையெல்லாம் மூடியபடி திரைச்சீலை தொங்கிக்கொண்டிருந்தது. அதன் வழியாக வந்த மங்கலான வெளிச்சத்தில் அங்கிருந்த பொருட்களைக் கண்டதும் அவனுக்குள் உதறல் அதிகரித்தது.

இடத்தின் தன்மையைவிட நெருங்கிக் கொண்டு முரட்டுத்தனமாக கூட்டிக் கொண்டு சென்றவர்களின் ஆஜானுபாகுவான உடற்தோற்றமும் அவர்களின் வக்கிரமான வார்த்தைப் பிரயோகங்களும் வயிற்றுக்குள் என்னவோ செய்தது...

"யாரென்று சொல்லிட்டால் பிரச்சனையில்லை..."

மீண்டும் மீண்டும் கேட்கப்பட்ட கேள்விகள் அதுதான். பதில் சொல்வதற்கு முன் சொன்ன பதிலையே சொல்ல வேண்டும் அல்லது மெளனமாக இருந்திட வேண்டும் என்று உள்மனம் உணர்த்திட- வைராக்கியம் மனசு பூராகவும்.

தான் யாரென்பதையும் திருமலை வந்த நோக்கம் எது என்பதையும் பல தடவையாகச் சொல்லியும் அவர்களுக்கு அவன்மீது பலத்த சந்தேகம். எப்படித் தீர்ப்பது...?

"தொலைந்ததற்காக பொலிஸ் என்ட்ரி போட்டதா...?"

"இல்லை சேர்..."

"ஏன்...?"

"............"

"ஏன் பொலிஸ் ஸ்டேசன் போகப் பயமா...?"

"............"

"சேர்!"

"யெஸ்."

"பொடியன் தங்கியிருந்த வீட்டுக்காரரைக்கொண்டு வந்திருக்கோம்."

"விசாரிச்சதா...?"

"யாழ்ப்பாணத்துல இவனோட ஊர் தானாம். அவனைப் பற்றி வேறு எதுவும் தெரியாதென்கிறார். அடுத்த கப்பலில பொடியன் போக இருப்பதால் கொஞ்ச நாள் தானே என்று இருக்க இடம் கொடுத்தாராம்."

"அவ்வளவுதானா...?"

"முக்கியமானதை மட்டும் விசாரிச்சோம்."

"பொடியன் சொல்றதெல்லாம் உண்மையென்பதற்கான கடிதங்கள் எதையாவது பார்த்தாராமா...?"

"கேட்டோம் சேர். பொடியன் சொன்னதை நம்பினாராம். நிறைய கடிதங்கள் எல்லாம் கையோட வைச்சிருந்தானாம் எந்த மாதிரியானதென்று ஒன்றும் தெரியாதாம் மேற்கொண்டு..."

"ஆளை வைச்சிருந்து விசாரிச்சுப் பாருங்க சந்தேகமாகத்தான் இருக்கு."

"ரீலிஸ் பண்றது..."

"ஆதாரமா கடிதங்கள் ஒன்றாவது கிடைத்தால் விட்டு விடுங்க."

சல்யூட் அடித்துவிட்டு அவர்கள் விலகியதும் அவனுக்குள் ஏகப்பட்ட சோகங்கள். "என்னோட கவனயீனம் எனக்கு மாத்திரம் சிக்கலை ஏற்படுத்தியிருந்தால் பரவாயில்லை. அவதிப்படுறதைக் கண்டு நல்ல மனதோட செய்த உதவிக்கு- ச்சே! என்ன கொடுமை. கடவுளே! எனக்கு ஏதாவது நடக்கட்டும் அவரைக் காப்பாத்திடு."

"ஐயா! அவருக்கு ஒன்றும் தெரியாது..."

# மு.கா.வாழட்டும்



## தி. இளையவன்

"அப்போ நீ உண்மை சொல்லு."

"சனக்கூட்டத்திற்குள்ளே டீ.எஸ். காரியாலய வளவிற்குள்தான் கடிதமெல்லாம் தொலைந்திருக்க வேண்டும்."

"ஆட்களையெல்லாம் போட்டுத் தேடிப் பார்த்தாச்சு எதையும் காணவில்லையாம்."

"............"

"தம்பி! உன்மேல சந்தேகம் வரக்கூடிய வாய்ப்புக்களே அதிகமிருக்கு. சரியாக நீ யாரென்பதற்கொரு கடிதமாவது கிடைச்சால் போதும். எல்லாத்தையும் தொலைச்சிட்டதாகச் சொல்ற நீ யாழ்ப்பாணம் என்று சொன்னதாலதான் சந்தேகம் பலமாயிருக்கு."

எதை எப்படிப் புரியவைப்பதென்ற தடுமாற்றம் அவனுக்குள் இமயமாக; எல்லாவற்றிற்கும் மொத்தமாக மெளனம் அடிக்கடி அவனை ஆட்கொண்டிருந்தது. இப்படியொரு சிக்கல் நிலைமை தோன்றுமென்று முன்பே அறியக்கூடிய சக்தி இருந்திருந்தால்... ரெண்டு கண்ணும் போனாலும் பரவாயில்லை என்று ஊரிலே இருந்திருக்கலாம்.

கண்பார்வை குறைந்துகொண்டு வருவதை தனியார் வைத்தியசாலையில் காண்பித்தது தவறாகப் போய்விட்டது. அரசாங்க ஆஸ்பத்திரியில் காண்பித்திருந்தால் தொலைபேசி தகவலைக் கொண்டாவது நல்லது ஏதும் நடந்திருக்கும்.

ஒரு காலத்தில் திருகோணமலையில் இருந்து விசேட சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணத்திற்குப் போய் வெற்றிகரமாகத் திரும்பிவந்த நோயாளர்களையும் அந்த நாட்களையும் நினைத்துப் பார்த்துக் கொண்டான். என்னே மாற்றங்கள்...!

யாருக்கு வெளியிலே அடிக்கின்றார்களோ தெரியவில்லை. வேதனைக் குரலும் அடிகளின் ஓசைகளும் இணைந்து தெளிவாகக் கேட்டன. அந்த ஏற்பாடு அவனுக்குள் சகிக்க முடியாமல் இருந்தது. மனம் வெறுத்துப்போன நிலைமையில் தன்னோடு முடிவைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. முடிவை எதிர்கொள்ளத் துணிந்து கொண்டான்.

"சேர்! நான் கப்பலில் வந்த லிஸ்டில் பெயர் இருக்கும்தானே...?"

"அதெல்லாம் பார்த்தாச்சு. வந்த நோக்கம் அதில் இருக்காது. தப்பானதாக இருந்தாலும் பரவாயில்லை சொல்லிடு. பொலிஸ் தரப்பா மாத்தி தண்டனை குறைவிற்கு ஏற்பாடுகளைச் செய்கின்றேன். பலருக்கும் அப்படி நடந்திருக்கு." வார்த்தைகள் சற்று இறுக்கமாக வெளிவந்தமையினால் ஆடிப் போனான். சற்று மனதிற்குள் தோன்றிய தெம்பு அதள பாதாளத்தை நோக்கி...

அவனது தொடர்ச்சியான மெளனம் பொலிஸ் அதிகாரியை எரிச்சல்படுத்த வெறுப்புடன் திடீரென்று நாற்காலியை விட்டு எழ நிலைதடுமாறிப்போன நாற்காலி சரிந்து சப்தத்துடன் வீழ்ந்தது. எதையுமே பொருட்படுத்தாது அந்த அறையை விட்டு அவர் வெளியாகிக் கொண்டார்.

இரண்டு கன்னத்திலும் கை வைத்து அழுத்தியதும் உணர்வில் கண் விழித்துக் கொண்டவன் வாரிச்சுருட்டி எழுந்து கொண்டு பரபரப்பாக விழித்தான். சிறிது நேரத்திலேயே அந்த இடத்தின் தன்மையை மீண்டும் உணர்ந்து கொண்டதும் குறைத் தூக்கக் கலக்கம் இருந்த இடம் தெரியாமலேயே காணாமற் போனது- அவனது ஆவணங்கள் போல.

"சரி நீ போகலாம்..."

வார்த்தைகள் அவனுக்குள் திருப்தியாக இல்லை. ஒருவேளை விட்டுப்பிடிக்கப் போகிறார்களோ...? வழக்கம் போலவே மெளனம்.

"எல்லாத்தையும் தெரிந்து கொண்டோம். வீட்டுக்குப் போகலாம்." வார்த்தைகள் வலியுறுத்திக் கூறப்பட்டதும் அதன் நிஜத்தையுணர்ந்து கொண்டு தயாரானாலும் உள்ளுக்குள் போராட்டம். எப்படி...?

"சேர் எப்படி என்ன...?"

"யாரோ உன்னோட கடிதங்களைக் கண்டெடுத்துக் கொடுத்திருக்காங்க. தங்கியிருந்த வீட்டுக்காரரின் பெண்சாதி வந்து எல்லாத்தையும் கொடுத்தா. இங்க இருந்ததினால நாளைக்குப் போற கப்பலும் மிஸ் இல்லையா? உனக்கு நாங்க உதவுகிறோம். நாளைக்கு கப்பலில் போக ரெடியா இரு." புன்சிரிப்புடன் அவர் அவ்விடத்தை விட்டுச் சென்றதும் அங்கும் ஒரு மனிதத்தைக் கண்டான்.

அவன் வாழ்வில் நல் விடிவைக் காட்டிய அந்த (மு)முகம் (கா)காணாதவரின் நீண்ட க வாழ்விற்காக மனதாரக் கடவுளை வேண்டிக்கொண்டான்.



படிப்பகம்

www.padippakam.com

# பேதை மனம்



எல்லாமும்
மறந்து போய்விட்டது
உன்னைத் தவிர!

ஞாபகத்திலிருந்து
எவையெல்லாமோ
உதிர்ந்து போய்விட்டன
நம் காதலைத் தவிர!

காதலில் மட்டும்
மறதி என்பது
வருவதே இல்லை!

முதல் சந்திப்பிலிருந்து
ஒவ்வொரு படியும்
கல்வெட்டாக
நெஞ்சுக்குள் நிற்கிறது!

மறதிக்கு
கட்டுப்படாதது
காதல்!

அடுத்த சந்திப்பு
எப்போது என்பது
தூக்கத்தில்கூட
நினைவில் நிற்கும்!

எப்போதெல்லாம்
என்ன பேசினோம்
என்பதெல்லாம்
மனப் பாடமாய்
மனதில் புரள்கிறது!

எப்போது உண்டேன்
எப்போது உறங்கினேன்
என்பதுகூட
உன் நினைப்பில்
அடிக்கடி மறந்துபோகிறது!

எல்லாவற்றையும்
மறக்கடித்துவிட்டு
தன்னை மட்டும்
நினைக்க வைப்பதும்
காதல்தான்!

காதல்
அபின் போன்றது!

உட்கொண்டவர்களுக்கு
உலகம் மறந்து போகும்!

வெட்கம் தெரியாது
சமயத்தில்
விவேகம்கூட இருக்காது!

உற்சாகம் கொப்பளிக்கும்
உருக்கொண்டு கொக்கரிக்கும்!

ஒரே நினைப்பிலேயே
உழல வைக்கும்!

ஒரே நினைப்பிலேயே
எதனையும் செய்யத் தூண்டும்!

ஞாபகங்கள்
பூக்கள் அல்ல,
உதிர்ந்து போவதற்கு!

ஞாபகங்கள்
கற்கள் அல்ல
வீசியெறிந்து போவதற்கு!

ஞாபகங்கள்
முட்கள் அல்ல
பிடுங்கி எறிவதற்கு!

தூரமாய் போனவனே
உன் பாதையிலிருந்து
ஓரமாய் ஒதுங்கினாலும்
ஈரமாய் இருக்கின்றன
உன் ஞாபகங்கள்!

தண்ணீரில் எழுதுவது
தங்கி நிற்காது!

நான் கண்ணீரில்
எழுதுகிறேன்
என் சோகத்தை,
காலத்தின் கரம்
தாங்கி நிற்கும்!

காதலுக்கு
கருக்கலைப்பு செய்ய
நீ முடிவு செய்தபோதே
எனக்குள் உன்னை
கொன்றிருக்க வேண்டும்!

பிச்சைப் பாத்திரம்
அல்ல காதல்
ஏந்திவந்து
உன்னிடம் யாசிப்பதற்கு!

அமுத சுரபிதான்
காதல்!

அதனைத்தான்
நீ வீசியெறிந்திருக்கிறாய்!

ஆகவேதான்
உன்னை நான்
பின்தொடர்ந்து
மன்றாடவில்லை!

உன் முன்னால்
மண்டியிட்டு
மடிப்பிச்சை கேட்கவில்லை!

மறுபடி நீ
என்னிடம் வந்தாலும்
ஏற்றுக் கொள்ளவும்
என்னால் இயலாது!

உன்னை
வெளியேற்றிவிட்டு
உன் ஞாபகங்களுடன்
உறங்கிக் கொண்டிருக்கிறேன்!

ஒன்றுக்கொன்று
முரண்பாடான
வாக்குமூலமாக
இருக்கிறதல்லவா!

அதுதான்
காதல்!

எனக்கு பிடிக்காத
உன்னை
மனது ஞாபகங்களாக
பிடித்து வைத்திருக்கிறது!

என்னை வெறுக்கும்
உன்னை
மனது இன்னமும்
உதறிப் போடவில்லை!

முத்தத்தில்
இதழ்கள் வதைந்ததும்
சித்தத்தில்
மயக்கம் விளைந்ததும்

மோகத்தில்
மேனி தவித்ததும்,

கைபட்ட இடமெல்லாம்
வலித்தாலும் இனித்ததும்,
கண்மூடி சாய்ந்தபோது
நீ என்னை மூடி
எழிலெல்லாம் மேய்ந்ததும்....

அதுவெல்லாம்
கனவா?

அதுவெல்லாம்
நினைவுக் கல்வெட்டு!

ஒவ்வொன்றும்
ஒரு கல்லெழுத்து!

நான் உன்னை
இழந்தாலும்,
நீ என்னை
மறந்தாலும்
என் மனம் உன்னை
தொலைக்காது!

நீ வேண்டாம்
போ!
நினைவு எனக்கு
வேண்டும்!

ஏன் இந்த
முரண்பாடு?

## இலக்கிய நயம்

தருவது ரதீகன்

இதுதான்
மனம் செய்யும்
மாயம்!

மனம் ஒரு பேதை
பிரிந்தவர் பின் சென்று
அவர் சார்பாக
பரிந்தும் பேசி நிற்கும்!

அன்புக்காக ஏங்கும்
பிரிந்தவரை நாடித் தொங்கும்!

பேதை மனதில்
காதல் போதை!
கேட்கவா வேண்டும்!

வெட்கம் இன்றி
பிரிந்தவர் பின்னால்
விரட்டி அலைகிறது!

நினைவுகளை சுமந்து
மெலிந்து போகிறது!

நினைவுகளுடன்
கரைந்து போகிறது!

மனம் ஒரு பேதை
நீயோ அதனை
ஏமாற்றுவதில் மேதை!

**"பரிந்தவர் நல்காரென்று ஏங்கிப் பிரிந்தவர்**
**பின் செல்வாய் பேதை என் நெஞ்சு"**

அதிகாரம்: 125 குறள்: 1248

(ஸ்போர்ட்ஸ்)

## இந்த வருடத்தில் அதிக ஓட்டங்கள்



இந்த வருட ஆரம்பம் முதல் 15.04.99 வரையான காலப்பகுதியில் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் இருக்கிறார் ராகுல் ட்ராவிட். இந்த வருடத்தில் அதிக ஓட்டங்களைக் குவித்த முதல் 10 வீரர்களின் விபரம் இதோ:

| வீரர் | போட்டிகள் | ஓட்டங்கள் | அதிகபட்சம் | சராசரி |
|---|---|---|---|---|
| 1. ராகுல் ட்ராவிட் (இந்தியா) | 14 | 658 | 123* | 50.62 |
| 2. கிரஹாம் ஹிக் (இங்கிலாந்து) | 14 | 635 | 126* | 45.36 |
| 3. மார்க் வோவ் (அவுஸ்திரேலியா) | 16 | 570 | 85 | 47.50 |
| 4. அடம் கில்கிறிஸ்ட் (அவுஸ்திரேலியா) | 13 | 527 | 154 | 40.54 |
| 5. சௌரவ் கங்குலி (இந்தியா) | 13 | 521 | 130* | 43.32 |
| 6. ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா) | 14 | 521 | 100 | 40.08 |
| 7. இன்ஸமாம்-உல்-ஹக் (பாகிஸ்தான்) | 10 | 459 | 107 | 51.00 |
| 8. அஜய் ஜடேஜா (இந்தியா) | 14 | 451 | 103* | 41.00 |
| 9. லான்ஸ் குளூஸ்னர் (தென்னாபிரிக்கா) | 14 | 443 | 103* | 88.60 |
| 10. நீல் ஃபெயாபிரதர் (இங்கிலாந்து) | 13 | 440 | 81* | 48.89 |

## இங்கிலாந்து இரசிகர்கள் அதிர்ச்சி

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நடத்தும் இங்கிலாந்து, அண்மையில் ஷார்ஜாவில் நடந்த போட்டிகளில் தோல்விகளைச் சந்தித்தது. இதனால் இங்கிலாந்து கிரிக்கெட் இரசிர்கள் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர்.

இதேவேளையில் "எங்களுக்குக் கூடுதல் பணம் கொடுத்தால்தான் உலகக் கோப்பையில் பங்கேற்போம்" என்று இங்கிலாந்து அணியினர் நிர்ப்பந்தித்து வந்தனர். இது தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்கும், இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

இறுதியில் உலகக் கோப்பைப் போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு சுமார் 48 இலட்சம் ரூபாவை வழங்க இங்கிலாந்து கிரிக்கெட் சபை முன்வந்துள்ளது. இதற்கு வீரர்களும் சம்மதித்துள்ளனர். இது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுவிட்டது.

கூடுதலான பணம் கிடைக்கவிருப்பதால் இங்கிலாந்து வீரர்கள் மனமகிழ்ச்சியுடன் விளையாடி வெற்றிகளைக் குவிப்பார்களா?

## சமநிலை

மேற்கிந்தியத்தீவுகள்-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே மேற்கிந்தியத்தீவுகளில் நடைபெற்ற டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடர்கள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. டெஸ்ட் தொடர் 2-2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

7 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் மூன்றில் மேற்கிந்தியத் தீவுகளும் மூன்றில் அவுஸ்திரேலியாவும் வெற்றிபெற்றன. ஒருபோட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தப்போட்டி ஜோர்ஜ் டவுனில் நடைபெற்றது. மழைகாரணமாக 30 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மே.இ.தீவுகள் 5 விக்கெட் இழப்பிற்கு 173 ஓட்டங்களை எடுத்தது.

பின்னர் விளையாடிய அவுஸ்திரேலியா 29.5 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்களை எடுத்தது. வெற்றி பெற ஒரே ஒரு பந்தில் 4 ஓட்டங்களை எடுக்க வேண்டி இருந்தது அவுஸ்திரேலியா.

கடைசிப்பந்தை எதிர்கொண்ட ஷேன் வோர்ன் அதை தூக்கி அடித்து இரண்டு ஓட்டங்களை ஓடி, மூன்றாவது ஓட்டத்தை எடுக்க ஆரம்பிக்கும்போது இரசிகர்கள் மைதானத்திற்குள் புகுந்துவிட்டனர். இதனால் அவுஸ்திரேலிய வீரர்களால் மூன்றாவது ஓட்டத்தைப் பெறமுடியவில்லை.

இதனால் ஆட்டம் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி சமனில் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. இரசிகர்கள் மைதானத்தில் புகுந்ததால் சமனில் முடிந்ததாக அறிவிக்கப்படுவது, கிரிக்கெட் வரலாற்றில் இதுவே முதல்முறை. ◁

## சிந்தியா பதில்கள்

**'கொசோவோ' பிரச்சனைக்கு நீலிக் கண்ணீர் வடிப்போர் ஈழத்தமிழர் பிரச்சனை பற்றி மௌனம் சாதிப்பது ஏன்?**

கு. நிக்கலஸ், வவுனியா.

இலங்கை அரசு அமெரிக்க நலன்களுக்கு எதிரானதல்லவே! யூகோ அரசும் அமெரிக்க நலன்களுக்கு ஒத்துப்போயிருந்தால் கொசோவோ பற்றி அமெரிக்கா கூப்பாடு போட்டிருக்காது!

**அடுத்து ஒரு தேர்தல் நடைபெற்றால் இந்தியாவில் ஆட்சியமைப்பது யாராக இருக்கும்?**

சு. சித்தார்த்தா, திருமலை.

யார் ஆட்சி அமைத்தாலும், தனி ஆட்சி அமைக்க முடியாது!

**வாஜ்பேயை கவிழ்த்த ஜெயலலிதாவால் உடனடியாக ஆட்சியமைக்க முடியவில்லையே?**

எம். இரத்தினசிங்கம், கொழும்பு-09.

அதுதான் சுப்பிரமணியம் சுவாமி உண்மையை உளறிவிட்டாரே! "ஆட்சியை கவிழ்ப்பதே எம் முக்கிய குறிக்கோள்!" என்று கூறியிருக்கிறார்! அதாவது குழப்பத்தை ஏற்படுத்துவதே குறி!

**பிரமச்சாரியான வாஜ்பேயை மூன்று பெண்கள் சேர்ந்து கவிழ்த்துவிட்டனரே?**

எஸ். யோகமணி, மஸ்கெலியா.

ஜெயலலிதா, மாயாவதி ஆகியோரும் தங்களை பிரமச்சாரிகள் என்றுதான் கூறுகின்றனர் என்பதையும் மறந்துவிடவேண்டாம்!

**ரோஹன விஜயவீரவின் மனைவியை பொதுஜன முன்னணி பிரசாரத்திற்காக பயன்படுத்தப் போகிறதாமே?**

எஸ்.எஸ். ரமீஸ், பாணந்துறை.

இதுதான் அரசியல்! "ரோஹன விஜயவீர கொலைகாரர்!" "ஜே.வி.பி. கொலைக் கும்பல்!" என்று இம்முறை மாகாணசபை தேர்தலிலும் கொட்டி முழக்கினார்கள். அதே ஜே.வி.பி.யின் முன்னாள் உறுப்பினர்தான் ரோஹன விஜயவீரவின் துணைவி! ஜே.வி.பி. மறுபடி எழுச்சி கண்டு கணிசமாக வாக்கு அறுவடை செய்திருப்பதால், விஜயவீரவின் மனைவிக்கு திடீர் கௌரவம்! அவருக்கு நம் அனுதாபங்கள்!

**சுட்டித்தனம் என்றால் என்ன சிந்தியா?**

மா. அபிராமி, கொழும்பு-11.

வகுப்புக்குத் தாமதமாக வந்த மாணவனைப் பார்த்து, ஆசிரியர், "ஏன் தாமதமாக வந்தாய்?" என்று கேட்டார்.

அதற்கு மாணவன் கூறினான்: "இரவு நான் விமானத்தில் உலக நாடுகள் முழுவதையும் சுற்றிப் பார்ப்பது போல கனவு கண்டேன். உலகம் முழுவதும் சுற்றிவிட்டு இங்கு வந்து இறங்கியதும் விழித்துக் கொண்டேன். அதன்பின்னர் கடிகாரத்தைப் பார்த்து விட்டு அவசர அவசரமாக புறப்பட்டு வந்து சேர்ந்தேன்!" என்றான்.

ஆசிரியர் அடுத்து இன்னொரு மாணவனைப் பார்த்து: "நீ ஏன் தாமதம்?" என்று கேட்டார்.

அவன் முதல் மாணவனைக் கைகாட்டி, "நான் இவனை வரவேற்க விமான நிலையம் போயிருந்தேன்!" என்று கூறினான்.

**சமீபத்தில் பார்த்த மோசமான படம் எது?**

கே. சுராஜ், மருதானை.

'மக்களுக்காக'. தப்பித்தவறி பார்த்தீர்களானால் தொலைந்தீர்கள். மகா அறுவை! யாம் பெற்ற துன்பம் பெற வேண்டாம் நீவிர்!

**தமிழ்க் கட்சிகள் கூடி எடுத்த தீர்மானம் என்னாகியது?**

வி. மங்களேஸ்வரன், அம்பாறை.

இதனை இன்னமுமா நீங்கள் மறக்கவில்லை? நீங்கள் மறந்துபோவீர்கள் என்ற நம்பிக்கையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தானே அவை!



ரோஹன விஜயவீர, மனைவி, குழந்தைகள் மற்றும் மாமியாருடன்

**மனிதர்கள் பேசும் மொழி மிருகங்களுக்கும், பிராணிகளுக்கும் புரிவது போல, அவற்றின் மொழி எமக்குப் புரியுமா?**

சி. அகல்யாதேவி, பதுளை.

புரியுமே! பக்கத்தில் எங்காவது ஆடு இருந்தால், அடுத்த மாதம் என்னவென்று கேட்டுப் பாருங்கள்!

**நல்ல விஷயங்களையும் சொல்லும் முறையில் சொன்னால்தானே எடுபடும்?**

எல். சுரேஸ்கண்ணா, புத்தளம்.


தீய விஷயங்களையும்தான்! சில சமயம் ஏடாகூடமாக நடப்பதும் உண்டு. இதோ ஒரு தமாஷ் கதை:

ஊருக்குப் போய் திரும்பி வந்த மனைவி கணவனைப் பார்த்து, "எங்கே என் பூனை?" என்று எரிந்து விழுந்தார். அதற்கு கணவன், "பூனை செத்துவிட்டது!" என்று கூறினான்.

உடனே மனைவி, தன் நெஞ்சில் கைவைத்தபடி! "அய்யோ, செத்ததை இப்படியா திடீர் என்று கூறுவது? பூனை மாடியில் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தபோது தவறிக் கீழே விழுந்தது. அதை டாக்டரிடம் எடுத்துப்போனேன். டாக்டர் எவ்வளவோ போராடினார். அவரால் நம் பூனையைக் காப்பாற்ற முடியவில்லை! என்று கூறுவது தானே? அதிர்ச்சியான செய்திகளை அதிரடியாகச் சொல்லக்கூடாது." என்று கூறினார்.

பின்னர் சிறிது நேரம் கழித்து, "அம்மா எங்கே?" என்று கேட்டார்.

அதற்கு கணவன் பொறுமையாக, "உன் அம்மா நேற்று மாலையில் மாடியில் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருக்கும் போது..." என்று ஆரம்பிக்க மனைவி மயங்கி விழுந்தார்.



ஐஸ்வர்யா ராய்

**இத்தனை துன்ப துயரங்கள் தேவையா? என்று நம் மக்களில் ஒரு சாரார் விரக்தியுற்றுள்ளனரே?**

க. ஆதவன், நல்லூர்.

அறிஞர் அண்ணா எழுதியது இது:

"காய்கறி நறுக்கி எடுத்து கொதி நீரில் கொதிக்கவைத்த பின்னரே பச்சைக் காய்கறி பதார்த்தமாகிறது!

மரணவாயிலில் போய்ப் போய் வந்த பின்னரே தாய் பிள்ளைப்பேறு காண்கிறாள்.

கீழ் மண்ணை மேலாக உழுது கிளறியபின்னரே போட்டது முளைக்கிறது!"

**'மோனிஷா என் மோனலிசா' எப்படி?**

எம்.வினோத், கொழும்பு-06.

இதுவரை வீடியோவில் வந்ததாகத் தெரியவில்லையே! பின்னர் பார்ப்பது எப்படியாம்!

**ஐஸ்வர்யா ராயின் ஜோடியாக நடிக்க பிரசாந்த் விரும்புவது ஏன்?**

பி. ஜெகதீஸ், ஹெந்தளை.

'ஜீன்ஸ்' தந்த அனுபவம்தான்!

**டெண்டுல்கர் தேறிவிட்டாரே, உலகக் கோப்பை போட்டியில் தூள் கிளப்புவாரா?**

ம. ரஹீம், கண்டி.

கிளப்புவார், ஆனால் இந்திய அணி கோப்பையை கைப்பற்றுமா? என்றால், மன்னிக்க வேண்டும். என் பதில் "இல்லை!" தேவையான ஆட்டத்தில் கோட்டை விடுவதே பிழைப்பாய் போச்சு!

**'அம்மா என்றால் அன்பு' என்று பாடினார் ஜெயலலிதா, இப்போது முரட்டுத்தனமாக நடக்கிறாரே? அவரையும் 'அம்மா' என்று தானே அழைக்கிறார்கள்?**

ஏ. பரமேஸ், நுவரெலியா.

'அம்மா என்றால் வம்பு!' என்பதே அவருக்குப் பொருந்தும்!

**'உயிரே' படத்தின் பின்னர் மணிரத்னம் மௌனரத்னமாகிவிட்டாரே?**

ஆர். சொரூபா, கொழும்பு-08.

இல்லை! ஆர்ப்பாட்டமே இல்லாமலே அடுத்த படத்தை இயக்கி வருகிறார். புதுமுகம் மாதவன் கதாநாயகன். ஷாலினி கதாநாயகி. மறுபடியும் ஒளிப்பதிவாளர் ஸ்ரீராமுடன் இப்படத்தில் கைகோர்க்கிறார் மணி. படத்தின் பெயர்: 'அலைபாயுதே'



படிப்பகம்

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O (QD/40/NEWS/99)

# திருமறை தரும் பொது நெறி 59

# ஒளிந்து கொள்ளத் துணிந்த யோனா

ஆண்டவர், யூத மக்கள் சமுதாயத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றி விட்டார். அரசி எஸ்தரும் அவருடைய வளர்ப்புத் தந்தையான மொர்தக்காயும் எடுத்த முயற்சிகள் இறைவனின் அநுக்கிரகத்தால் வெற்றிபெற்றன. 'தன் வினை தன்னைச் சுடும்' என்ற முதுமொழிக்கேற்ப, யூத இனத்தையே பூண்டோடு ஒழித்துவிடத் திட்டமிட்ட ஆமான், அவன் பின்னிய சூழ்ச்சி வலையிலேயே வீழ்ந்தான். மொர்தக்காயைத் தூக்கிலிடுவதற்காக ஆமான் நிறுவிய தூக்கு மரத்தில் ஆமானே தொங்கி உயிரிழந்தான்.

மன்னர் அர்த்தக் சஸ்தா, தனது பட்டத்தரசி எஸ்தரின் பல கோரிக்கைகளை நிறைவேற்றினார். பாபிலோன் நாட்டிலும் மன்னர் அர்த்தக்சஸ்தாவின் அதிகாரத்துக்குட்பட்ட இந்தியா முதல் எத்தியோப்பியா வரையிலிருந்த நூற்றிருபத்தேழு மாநிலங்களிலும் வாழ்ந்த யூத மக்கள் அனைவரின் உயிர்-உடமைகள் பாதுகாக்கப்பட்டன. அம்மக்கள் உயரிய அந்தஸ்துடன் வாழும் உரிமை பெற்றனர். தம்முடைய நம்பிக்கைக்கு ஏற்றபடி தமது ஆண்டவரைப் பிரார்த்திக்கும் உரிமையும் பெற்றனர்.

யூத மக்களைப் பூண்டோடு அழித்தொழித்து விட ஆமானும் அவனுடைய சகாக்களும் அதார் மாதம் பன்னிரண்டாம் நாளைத் தெரிவு செய்து வைத்திருந்தனர். திருவுளச் சீட்டுப் போட்டே இத்தினம் தீர்மானிக்கப் பட்டது. இத்தினத்தை அடிப்படையாகக் கொண்டு, 'யூத மக்களினம் காப்பாற்றப்பட்ட நாள்' என்று இறைவனுக்கு நன்றி கூறும் நாள் நிர்ணயிக்கப்பட்டது.

அதார் மாதம் பன்னிரண்டாம் நாளைத் தொடர்ந்துவரும் பதினைந்தாம் நாள் வரையிலான நாட்களை எதிரிகளின் தொல்லைகளிலிருந்து விடுதலை பெற்ற நாட்களாக நிர்ணயித்தனர். ஆண்டுதோறும் இதனை 'பூரிம் பெருவிழா' வாக எஸ்தர் அரசி பிரகடனப்படுத்தினார். மொர்தக்காய்- எதிர்காலத்திலும் பூரிம் விழா கொண்டாடப்பட வேண்டும் என்றும், ஏடுகளில் எழுதி வைத்தார். அன்றைய தினம் மக்கள் பிரார்த்தனையிலீடுபட்டும், விருந்துண்டும் உற்றார், உறவினர் மற்றும் அயலவர்களுடன் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டாடினர்.

**இராஜகுமாரன்**

## ஆண்டவரின் மகிமை

ஆண்டவர் எம்முடன் எப்போதும் இருக்கிறார். எமக்கு நல்வழி காட்டுகிறார். நன்மை எது; தீமை எது; தர்மம் எது; அதர்மம் எது என்பதையெல்லாம் பகுத்துணரும் பாங்கினை எமக்கருளியிருக்கிறார். இருப்பினும் ஆண்டவருடைய மகிமையை உணராது நாம் நம் புலன்களின் தூண்டுதலுக்கே இடம் கொடுக்கிறோம். ஆண்டவனிட்ட கட்டளைகளை உதாசீனம் செய்துவிட்டு 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று பாதை தவறிய ஆட்டு மந்தைகளாகிவிடுகிறோம்.

வழி தவறிய ஆட்டுக்குட்டியை நல்ல மேய்ப்பன் தேடிக்கண்டுபிடித்து, உரியவழியில் இட்டுச் செல்லத் தூண்டுவது போல ஆண்டவர் நம்மை வழி நடத்துகிறார். ஒருமுறை இரு முறையல்ல; பல தடவைகளில் ஆண்டவர் நம்மைத் தேடி வருகிறார். நம்மை அணைத்து அன்புடன் நெறிப்படுத்துகிறார்.

கடவுள் இட்ட கட்டளைக்கு மதிப்பளிக்காது, தன் மனம்போன போக்கில் போய்த் தடுமாறித் திண்டாடிய ஒருவரின் கதை எமக்கெல்லாம் ஒரு படிப்பினையாக விளங்குகிறது.

ஆண்டவரிட்ட ஆணைக்குப் பணிந்து நடக்காமல்- ஆண்டவருக்கே ஏய்ப்புக் காட்டுவதுபோல் நடந்து கொண்ட ஒருவர்தான் யோனா. எங்காவது, தப்பி ஒடி ஒளிந்து கொண்டால்- கடவுளின் கண்களில் மண்ணைத் தூவி விடலாம் என்று யோனா கருதினார் போலும்.

நினிவே என்றொரு மாபெரும் நகரம் இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் மிக மோசமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஆண்டவருக்கு விரோதமான செயல்களைப் புரிந்து வந்தனர். ஆண்டவரும் அம்மக்களை நல்வழிப்படுத்த பல இறைவாக்குரைஞர்களை அனுப்பி வைத்தார். நினிவேயில் வாழ்ந்த மக்கள் எவருடைய நற்செய்திகளையும் செவி மடுக்காமல், தங்கள் இழிவாழ்க்கை முறைகளையே கடைப்பிடித்தனர்.

நினிவே நகருக்குச் சென்று அங்கு வாழும் மக்களை நல்வழிப்படுத்தும் பணியை யோனா என்பவரிடம் ஆண்டவர் ஒப்படைத்தார். ஆனால், ஏற்கனவே, அந்நகரில் வாழும் மக்களின் நடவடிக்கைள் பற்றி அறிந்திருந்த யோனா, அந்நகருக்குப் போக அஞ்சினார். ஆகவே அவர் தன் இருப்பிடத்தை விட்டு நினிவே நகர் இருந்த திசைக்கு எதிரேயுள்ள பாதையில் செல்லலானார்.

## தப்புக்கணக்கு

இன்று ஸ்பெயின் என்ற பெயருடனுள்ள நாடு அன்று தர்சீசு என்றழைக்கப்பட்டது. யோப்பா துறைமுகத்துக்குப் போய் அங்கிருந்து, கடல் மார்க்கமாக தர்சீசை அடைந்து விடலாம் என்று யோனா கருதினார். கடல் கடந்து சென்றால் கடவுளின் பார்வையிலிருந்து தப்பிவிடலாம் என்று தப்புக்கணக்குப் போட்டுவிட்டார் யோனா. யோப்பாவில் தர்சீசு செல்வதற்காக ஒரு கப்பல் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. யோனா அக்கப்பலில் ஏறிக்கொண்டார். வெளியே தலைகாட்டினால் கடவுளின் கண்களில் பட்டுவிட வேண்டியிருக்கும் என்று கருதியோ என்னமோ, கப்பலின் அடித்தளத்தில் போய் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக்கொண்டார்.


யோப்பா துறை முகத்திலிருந்து கப்பல் புறப்பட்டது. காற்று சாதகமாக இருந்தமையினால் மிக வேகமாகச் சென்ற கப்பல் நடுக்கடலை அடைந்தபோது காற்றின் வேகம் அதிகரித்தது. புயலாக மாறியது. வான் முட்டும் அலைகள் கப்பலை மோதின. கப்பல் நிதானமிழந்து நடுக்கடலில் தத்தளித்துத் தடுமாறியது. எப்போது அக்கப்பல் அலைகளின் வேகத்தால் உடைந்து சிதறுமோ என்ற நிலை ஏற்பட்டது.

கப்பலில் சென்ற பயணிகளும் மாலுமிகளும் தத்தமது ஆண்டவரைத் துதித்துப் பிரார்த்தித்தனர். கப்பலின் தலைவன் மாலுமிகளை அழைத்தான். "இத்தகைய காலத்தில் கடலில் கொந்தளிப்பு ஏற்பட வாய்ப்பில்லை என்பதனால், கடவுளின் கோபத்தை அதிகரிக்கும் வகையில் பயணிகளோ மாலுமிகளில் எவரோ பெரும் தவறு செய்திருக்க வேண்டும். அம்மனிதரை முதலில் கண்டு பிடித்தாக வேண்டும்!" என்று உத்தரவிட்டார்.

மாலுமிகள் முதலில் தமது சகாக்களிடம் விசாரணை செய்தனர். பின்னர் பயணிகள் ஒவ்வொருவரையும் அணுகினர். அவர்கள் எல்லோருமே, அவரவருக்குரிய முறையில் ஆண்டவரைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர்.

## குற்றம் புரிந்தவர்

கப்பலிலுள்ள சரக்குப்பொதிகளைக் கடலில் வீசி னால் கப்பலின் பாரம் குறைந்துவிடும் என்று கருதிய மாலுமிகள் சிலர், அடித்தளத்திலுள்ள சரக்குப் பொதிகளைத் தூக்கிவர அங்கு சென்றனர். அந்தப் பயங்கரமான சூழ்நிலையைப் பற்றி எதுவுமே தெரியாதவராக யோனா நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார். அவரை எழுப்பி, கப்பல் புயலில் சிக்கி மூழ்கும் நிலையிலிருப்பதைப் பற்றி அவரிடம் கூறினார்கள். கப்பலையும் பயணிகளையும் காப்பாற்றும்படி கடவுளைப் பிரார்த்திக்குமாறு கேட்டார்கள்.



கடலில் அப்போது புயல் கிளம்பியமைக்கான காரணகர்த்தா தானே தான் என்பதை யோனா உணர்ந்து கொண்டார். கப்பல் தலைவனிடம் சென்று, இத்தகைய நெருக்கடிக்குத் தானே காரணம்; ஆண்டவருடைய ஆணையை மதிக்காமல் நாட்டைவிட்டே ஓடிவிட நினைத்த தனது அறியாமை தான் இத்தனை தொல்லைகளுக்கும் காரணம் என்று கூறினார். புயல் அடங்கி, கப்பல் எதுவித சிரமமுமின்றி அதன் பயணத்தைத் தொடர வேண்டுமானால் தன்னை தூக்கிக் கொந்தளிக்கும் கடலில் வீசிவிடுமாறு யோனா கேட்டுக்கொண்டார்.

கப்பல் தலைவனும் மாலுமிகளும் யோனாவின் கூற்று உண்மையாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதினர். அது உண்மைதான் என்பதை அப்போது கடலில் எழுந்த சில சமிக்ஞைகள் எடுத்துக்காட்டின. இதனைத் தொடர்ந்து யோனாவை இரு மாலுமிகள் தூக்கிக் கடலில் வீசினர். உடனடியாகவே கடல் கொந்தளிப்பு நின்றது. கப்பலும் நிதானமாக ஊர்ந்தது. மாலுமிகளும் பயணிகளும் ஆண்டவருக்கு நன்றி கூறிப் பிரார்த்தித்தார்கள்.

கடலினுள் வீசப்படும்போதே யோனா தனது கண்களை மூடிக்கொண்டார். தனது முடிவுகாலம் வந்துவிட்டது என்றே கருதினார். அவருடைய நினைவுகள் எல்லாம் அகன்றன.

யோனா கடலில் வீசப்பட்டபோதே கடவுள் ஒரு பெரிய மீனை அவ்விடத்துக்கு ஏவினார். திறந்திருந்த அம்மீனின் வாயினுள் யோனா புகுந்தார். அப்படியே அந்த மீனின் வயிற்றினுள் யோனா போய்ச் சேர்ந்தார்.

இவ்வாறு மீனின் வயிற்றினுள் மூன்று நாட்கள்வரை யோனா இருந்தார். இடையில் அவர் கண் விழித்தபோது, தன்னைச் சுற்றிலும் ஒரே இருள் கவிந்திருந்தது. தான் எங்கே இருக்கிறார் என்று எதுவும் அவருக்குப் புலப்படவில்லை. ஆண்டவரைத் துதிப்பதைத் தவிர அவருக்கு வேறு வழி எதுவும் தோன்றவில்லை. அறியாமையில் செய்த தவறை மன்னித்தருளுமாறு ஆண்டவரிடம் வேண்டினார்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 56 விடை ☛ ஆமான்.**

**பரிசு பெறுவோர்:**

1. டொ.ஜீவகன், 12 சென் அன்ரனிஸ் வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
2. ஏ.தனுஷா, மஹா இறம்பைக்குளம், வவுனியா.
3. மிஸ்னா நஜீம், 294 பண்டாரநாயகபுர, மல்கடுவாவ, குருநாகல்.
4. சபானியா தஸ்லிம், 108, பிரதான வீதி, தம்பதெனிய.
5. ஆர்.டிலோஷன், சிவா ஸ்ருடியோ வீதி, அக்கரைப்பற்று-08.

**திருமறை 59** வினா:- **யோனாவை எங்கு செல்லும்படி ஆண்டவர் கேட்டுக்கொண்டார்?**

மே. 08க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 59 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# படையப்பாவும் படையம்மாவும்!

ஜெயா கால்மேல் கால் போட்டபடி அமர்ந்திருக்கிறார். ரஜினி விறு விறுவென்று வருகிறார்.



**ரஜினி: வாஜ்பேயை கவிழ்த்துட்டீங்க! கடைசி நேரத்திலே காலைவாரி விட்டுட்டீங்க! கைவிடுறவங்களும் காலைவாரிவிடுறவங்களும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே கிடையாது!**

ஜெயா: யார் நீ? யாரய்யா நீ?

**ர: என்பேரு படையப்பா.**

ஜெ: என்பேரு படையம்மா.

**ர: இளவட்ட நடையப்பா!**

ஜெ: நான் மதம் கொண்ட யானையப்பா!

**ர: என்கூட உள்ளதெல்லாம் இளம் சிங்கப் படையப்பா!**

ஜெ: என்கூட உள்ளதெல்லாம் பழம் தின்று கொட்டை போட்ட படையப்பா!

**ர: யுத்தம் ஒன்று வரும்போது பத்து விரல் படையப்பா!**

ஜெ: வழக்கென்று வரும்போது கவிழ்ப்பது என் படையப்பா!

**ர: ரொம்ப ஆடாதீங்க!**

ஜெ: நான் எங்கே மிஸ்டர் இப்போது ஆடுகிறேன்? ஆட்டுவிக்கிறேன். அவங்க ஆடுறாங்க!

ஜெ: நான் எல்லோருக்குமே வல்லவள்! சசிக்கு மட்டும் நல்லவள்!

**ர: சசியோட கூட்டுச் சேர்ந்து தமிழ்நாட்டை சுருட்டிப் போட்டீங்க! இப்போது மேலும் இரண்டு பொண்ணுகளோட கூட்டு சேர்ந்திருக்கீங்க! அவங்க என்ன பாடுபடப் போறாங்களோ? நாடு எக்கேடு கெடப் போகுதோ?**



ஜெ: இப்போ சொல்கிறேன் கேட்டுக் கொள்ளும். அடுத்த முதல்வர் நான்தான்! அடுத்த பிரதமரும் நான்தான்!

**ர: ஜனாதிபதி?**

ஜெ: இந்திய ஜனாதிபதிப் பதவி டப்பா பதவி! அடுத்தவங்க காட்டுற இடத்திலே கையொப்பம் போடுற பதவி எனக்கு தேவையில்லை. நான் காட்டுற இடத்தில அடுத்தவங்க கையொப்பம் போட வைக்கிற பதவிதான் எனக்கு வேண்டும்!

**ர: மக்கள் பாடம் புகட்டுவாங்க.**

ஜெ:(கலகலவென்று சிரிக்கிறார்) 'அந்த அம்மா ஆட்சிக்கு வந்தா தமிழ் நாட்டை ஆண்டவன்தான் காப்பாத்தணும்' என்று டயலாக் பேசினீரே, இப்போ இந்த தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவே என் சுட்டுவிரல் அசைவுக்கு கட்டுப்பட்டு நிக்குது பார்த்தீரா? உம்முடைய டயலாக் ஜோக்காகிவிட்டது!

**ர: மேலே ஒருத்தன் எல்லாத்தையும் பார்த்துக் கிட்டிருக்கான். எப்போ, எப்படி, எதைச் செய்யணுமோ, அப்போ, அப்படி, அதைச் செய்வான்!**

ஜெ: இங்கே பாருங்க மிஸ்டர் படையப்பா, இந்த அம்மா முன்னாடி எல்லோருமே சும்மா! உடையப்பா என்று நான் ஆணையிட்டால், உங்கள் டப்பா டுப்பாவாகிவிடும் ஜாக்கிரதை!

**ர: என்ன மிரட்டிறீங்களா? நான் மக்களை திரட்டினா என்னாகும் தெரியுமா?**

ஜெ: என் பணபலம், படைபலம் முன்னால் மண்ணாகும்!

**ர: என்னை வம்புக்கு இழுக்காதீங்க!**

ஜெ: வம்பாவது, தும்பாவது, என் கையில் வரப்போகிறது செங்கம்பு! அப்போது உம்மை நோக்கியும் வரும் அம்பு!

**ர: நான் அரசியலுக்கு வந்தால் என்னாகும் தெரியுமா?**

ஜெ: வந்தாத்தானே தெரியும்! வருவேன், வருவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கத்தானே உமக்குத் தெரியும்!

**ர: என்கிட்ட மோதாதீங்க! நான் நல்லவனுக்கு நல்லவன். வல்லவனுக்கு வல்லவன்!**

ஜெ: என் பக்கம் வந்தால் ஒரு பெட்டி தருகிறேன்! காலில் விழுந்து போஸ் கொடுத்தால் இன்னொரு பெட்டி! பிழைத்துக் கொள்ளும்! என்னை பகைத்துக் கொண்டால் என்னாகும் என்று மிஸ்டர் வாஜ்பேயிடம் கேட்டு தெரிந்து கொள்ளும்! அவருக்காவது நாற்காலிதான் போனது. உமக்கு நிற்க காலே இருக்காது!

**ர: ஹாஹாஹா.... கண் மண் தெரியாம, தலைகீழ் புரியாம இப்படி ஆடின பல பேரு ஊர் பேர் தெரியாம காணாமல் போனாங்க. நீங்களும் காணாமல் போவீங்க.**

ஜெ: நான் என்ன இலங்கையிலா இருக்கேன் செம்மணியிலே காணாமல் போக? (சிரிக்கிறார். சிரித்துக் கொண்டே இருக்கிறார்)

**ர: இதுதான் ஆணவச் சிரிப்பு! அகங்காரச் சிரிப்பு! அதிகாரச்சிரிப்பு! இப்படிச் சிரிச்சவங்களை பார்த்து பின்னாடி உலகமே சிரிச்சதுதான் சரித்திரம்! உங்களை பிடிக்கும் தரித்திரம்! நான் இப்போ போறேன். ஆனா வருவேன். எப்போ, எப்படி வருவேன் என்பது எனக்கே தெரியாது, அவன் சொல்லுவான், நான் வருவேன். என் வழி தனிவழி!**

(ஸ்ரைலாக சுருட்டை பற்றவைத்தபடி செல்கிறார். சுருட்டுப் புகையால் ஜெயா இருமத் தொடங்குகிறார்.)

# கலைஞர் இரங்கல்

கலைஞர் கருணாநிதி காதிலை பூ கந்தசாமியாரின் காதில் சொன்ன அறிக்கை.

உடன் பிறப்பே! பாரதிய ஜனதா கட்சி மதவாத கட்சி என்பதை நாம் மறவாத கட்சிதான். ஆனாலும் மரியாதை தெரியாத கட்சியல்ல.

ஊழல் தாய், ஊழல் கலையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஊழல் சக்கரவர்த்தினி செல்வி ஜெயலலிதா சொல்லியும் கேளாது ஆட்சியை கலைக்காதிருந்த பாரதிய ஜனதாவை நாம் அலட்சியம் செய்தால், இலட்சியம் இல்லாதவர்களாகி விடுவோம் என்பதால், வாஜ்பேய் வருக, கவிழாமல் ஆட்சி தருக என்று ஆதரித்தோம்.



ஆயினும் முதுகில் குத்தும் மதியுடையோர் சிலர் தங்கள் சிறு மதியை காட்டி விட்ட காரணத்தால் ஏறத்தாழ 20 ஆண்டு கால இனிய நண்பர் வாஜ்பேய் ஆட்சிக்கு 'குட்பை' சொல்ல நேர்ந்தது என்பதை எண்ணும்போது, என் கண்கள் காவேரியாகிறது. என் இதயம் சொர்னேபில் அனுமின் உலையாகிறது!

அதே சமயம் அருமைச் சகோதரி என் ஏழாண்டுகால நண்பர் ராஜீவ் காந்தியின் பாரியார் சோனியா அவர்கள் ஜெயலலிதாவின் சொரூபத்தை உணர்ந்து, கழகத்தின் ஆதரவை கேட்பாரேயானால், அதையும் ஜனநாயக உணர்வோடு பரீசீலிக்கும் ஜனநாயக இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதையும் கூறிவைக்க கடமைப்பட்டுள்ளேன்.

**காதிலை பூ கந்தசாமி**


படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105. காலி வீதி. வெள்ளவத்தை. கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு. கொழும்பு 11
436331


↓ கைக்கு அடக்கமான கணனிசாதனங்களை வைத்துக் கொண்டு உலகை மறந்தே விளையாடுகிறார்கள்.

கணனி விளையாட்டு சாதனமான 'பொங்' என்ற சாதனம்தான் முதன் முதலில் 1972ல் நொலான் புஷல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இப்பொழுது கணனி விளையாட்டுக்களில் அதிக புள்ளிகளைக் குவிப்பவர் யார் என்பதை கின்னஸ் சாதனைப் புத்தக வெளியீட்டாளர்களே போட்டிகளை நடத்தித் தேர்ந்தெடுக்கிறார்கள்.

1997ல் முதன் முதலில் நடைபெற்ற உலகளாவிய கணனி விளையாட்டுப் போட்டியில் இலண்டன் மாநகரத்தைக் சேர்ந்த டேவிட் பேர்க் என்பவர் தனது 'மாரியோ கார்ட்' என்ற-படத்தில் காணப்படும்-சாதனத்தைப் பயன்படுத்தி வெற்றிபெற்று, மஷ்ரூம் கோப்பையை வென்றார்.

கின்னஸ் சாதனைப் புத்தக வெளியீட்டாளர்கள் இத்தகைய கணனி விளையாட்டுப் போட்டிகளை ஆண்டு தோறும் பன்னாட்டு ரீதியில் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளனர். ○




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657


இக்காலச் சிறுவர்கள் சாதாரண பொம்மைகளை வைத்து விளையாடுவதில்லை. இது கணனி யுகம். ஆகவே இக்காலச் சிறுவர்களின் மூளையும் கணனிகளின் செயல் முறைக்கேற்ப ஈடுகொடுக்க ஆரம்பித்துள்ளன.

கணனி விளையாட்டு (COMPUTER GAMES) சாதனங்கள் இப்போது மலிந்து விட்டன.



# விளையாட்டப்பா

# காரப்பா

➜ ஒரு காரில் மொத்தம் 4 ஆயிரத்துக்கும் அதிகமான உதிரிப்பாகங்கள் உள்ளன. இவற்றைத் தனித்தனியாக உற்பத்தி செய்து உரிய முறையில் பொருத்தித்தான் மோட்டார் கார் ஓட ஆயத்தமாகிறது.

படத்தில் காணப்படும் இச்சிறிய கார் ஒரு பொம்மை போல் காட்சி தருகிறது; எனினும் இதுவும் தெருக்களில் பவனிவரத்தக்க ஒன்றுதான்.

இவ்வண்டி பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்டது. பாகம் பாகமாகக் கழற்றி ஆறரை மணி நேரத்தில் ஒன்று சேர்த்துப் பொருத்திவிடலாம். இந்த வண்டி பயன்படாத நிலையில் பாகங்களை உருக்கி வேறு பொருட்களை உற்பத்தி செய்து விடலாம். இந்த வசதி வேறு கார்களில் கிடையவே கிடையாது.

இன்று சந்தைகளில் விற்பனை செய்யப்படும் குளிர்பான பிளாஸ்ரிக் போத்தல்களில் உள்ள பிளாஸ்ரிக்தான் இந்தக் காரில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இக் காரை உலக சாதனைக் காராகப் பதிவு செய்துள்ளனர். ○



↓ அண்மைக் காலத்தில் இளவரசி டயானாவின் அகால மரணம் உலகனைத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிக் கலங்க வைத்தது. இது போல வேறு எவருடைய மரணமும் இருந்ததில்லை.

தொடர்பு சாதனங்கள் அனைத்தும் டயானாவின் மறைவு குறித்து தகவல்கள் வெளியிட்ட போதும் அதனை நம்பாதவர்களும் இருக்கவே செய்தனர்.

டயானாமீது மக்கள் வைத்திருந்த பேரன்புக்குச் சான்றாக, இலண்டன் மாநகரிலுள்ள பக்கிங்ஹாம் அரண்மனை முன்புறம் மக்கள் குவித்த பூச்செண்டுகள் மலர் வளையங்கள் அமைந்தன.

இங்கு மட்டும் 1997ம் ஆண்டு ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 8ம் திகதி வரை குவிக்கப்பட்ட மலர்களின் எடை 15 ஆயிரம் தொன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இது ஒரு உலக சாதனையாகும்.

இது தவிர கென்சிங்ரன் மாளிகை மற்றும் அவருடைய பிறந்த இடமான அல்துரோப் தோட்டத்தின் முன்வாயிற்புறம் (இங்கு தான் இளவரசியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.) பாரிஸில் விபத்து நடந்த இடமான சுரங்கப்பாதை ஆகிய இடங்களிலும் மலர்ச் செண்டுகளும் மலர் வளையங்களும் வைக்கப்பட்டன. ○



# அடேயப்பா

➜ இளவரசி டயானா விபத்தில்சிக்கி மரணமடைந்ததைத் தொடர்ந்து உலகம் முழுவதும் டயானாவின் பெயரைத் தாங்கிய பல பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு மக்கள் மத்தியில் விற்பனைக்கு விடப்பட்டன.

டயானாவின் பெயர் மற்றும் அவருடைய கையொப்பம் பொறிக்கப்பட்ட சிகரெட் சாம்பலேந்திக் கோப்பைகள் (ஆஷ்ரே), ரி-சேட்டுக்கள், பெண்களுக்கான மார்புக் கச்சை, மற்றும் ஆடைகள், பொம்மைகள் ஆகியவை மக்களிடத்தில் பெரும் செல்வாக்குப் பெற்றன.

இவ்வாறு மொத்தம் 25 ஆயிரம் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. இதுவே ஒரு சாதனையாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுமட்டுமா இன்னும் கேளுங்கள்.

படத்தில் காணப்படுவது-ஒரு 'டயானா நினைவு கைத்தொழிற்சாலை'யின் உட்புறத் தோற்றம்.

இங்கு உற்பத்தியான டயானா நினைவுப் பொருட்கள் 1997ம் ஆண்டு டிசம்பர் வரை 24 கோடி அமெரிக்க டொலர் பெறுமதிக்கான விற்பனையைக் கண்டு சாதனை படைத்துள்ளது. நம் நாட்டு மதிப்பில் 1680 கோடி ரூபாய்கள். இது ஒரு உலக சாதனையாகும்.

இந்நிறுவனத்துக்கு 16 ஆயிரம் இன்டர்நெற் தொடர்புகளும் இணைக்கப்பட்டுள்ளன. நாளொன்றுக்கு விற்பனைக்கான 20 கோரிக்கைகள் உலகெங்கணுமுள்ள வர்த்தகர்களிடமிருந்து பெறப்படுகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது. ○



⬅ 'ஓல்ட் இஸ் கோல்ட்' (OLD IS GOLD) என்றோர் ஆங்கிலப் பழமொழியுண்டு. 'பழையது பொன்னுக்குச் சமம்' என்பதுதான் இதன் அர்த்தம்.

லெவி (Levi) என்ற வர்த்தக அடையாளத்துடன் கூடிய ஆடை அணிகளுக்கு உலகெங்கணும் கிராக்கி அதிகம்.

1997 இல் தயாரிக்கப்பட்ட ஆடை அணி உற்பத்தியில் 13.1 சத வீத உற்பத்தி லெவி ஆடைத் தயாரிப்புகளே.

உலகெங்கணுமுள்ள லெவி தொழிற்சாலைகளிலும் விற்பனை நிலையங்களிலும் மொத்தம் 37 ஆயிரத்தி 500 பேர் பணி புரிகின்றனர்.

பவேரிய நாட்டிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய லெவி ஸ்ட்ராவுஸ் என்பவர் கலிபோர்னியாவிலுள்ள சான்ஃபிரான்சிஸ்கோவில் தனது ஆடை தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்தார்.

'லெவி ஜீன்ஸ்' என்ற பெயரைக் கேட்டாலே இளம் சமுதாயத்துக்கு மகா கொண்டாட்டம்தான். இவை பாவிக்கப் பாவிக்க இவற்றின் மவுசும் அதிகரிக்கின்றன.

இங்கே படத்தில் காணப்படுவது 'லெவி' ஜீன்ஸ்தான். இதன் மவுசு தெரியாதவர்கள், தூக்கி வீச வேண்டியதை படம்பிடித்துப் போட்டிருக்கிறார்களே என்று நினைக்கலாம். கால் பக்கம் கிழிந்தும், நிறம்மாறியும், பிச்சைக்காரனின் ஆடைபோலத்தான் தெரிகிறது. ஆனால் இதனை அணிய வேண்டுமானால் நீங்கள் மகா பணக்காரராக இருக்க வேண்டும்.

ஆம், இந்த 'லெவி ஜீன்ஸ்' ஒருவரால் பாவிக்கப்பட்டு மறுபடி சந்தைக்கு வந்தபோது, இதனை வாங்க அடிதடியான போட்டி. இறுதியில் என்ன விலைக்கு போனது தெரியுமா?

25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு மதிப்பில் 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய். பாவனையின் பின்னர் மீண்டும் விற்பனைக்கு விடப்பட்ட எந்த ஜீன்சும் இந்தத் தொகைக்கு விற்கப்பட்டதில்லை. அதனால் இது உலக சாதனை ஜீன்ஸ். ○

# ஜீன்ஸப்பா

## நாலாவது, முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



பிரியங்கா நெல்சன் 24.03.1999 | பிறண்டன் நெல்சன் 27.03.1999

கனடாவில் வசிக்கும் போயிட்டி இளாலையைச் சேர்ந்த திரு. திருமதி நெல்சன்-சசிகலா தம்பதியினரின் செல்வக் குழந்தைகள் பிரியங்கா தனது நாலாவது பிறந்தநாளை 24.03.99 அன்றும், பிறண்டன் தனது முதலாவது பிறந்தநாளை 27.03.99 அன்றும், கனடா, மிசிஸ்சாகாவிலுள்ள தங்கள் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். இவர்களை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, தொட்டப்பாமார், தொட்டம்மாமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், பப்பாமார், மம்மாமார், மச்சான்மார், அத்தான்மார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கைமார் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் புனித லூர்து அன்னை ஆசிபெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

தகவல் டி. நெல்சன்- கனடா தொ.பே.எண். (905) 507/0819
எஸ். வின்சென்ற்- கொழும்பு. தொ.பே.எண். 527840